பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

விலை ரூபா 15.00

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 மாசி 18 செவ்வாய்க்கிழமை (02.03.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 096

# சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைகளுக்கு

# ஐ.நா. அதிகாரிகள் மீளவும் வற்புறுத்து

## 'சனல் - 4' வீடியோ நாடா மிக முக்கிய ஆதாரம் என்கின்றனர்



கொழும்பு, மார்ச் 02

**இலங்கையின் உள்நாட்டு மோதலின் இறுதித் தருணங்களில் இடம்பெற்றிருக்கக் கூடிய யுத்தக் குற்றங்கள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் இடம்பெறவேண்டும் என ஐக்கிய நாடுகளின் மூத்த அதிகாரிகள் இருவர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

அவர்களில் ஒருவர் ஐ.நாவின் தற்போதைய அதிகாரி. மற்றவர் ஏற்கனவே இலங்கையில் ஐ.நா. அதிகாரியாகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

'சனல் - 04' தொலைக்காட்சியினால் காண்பிக்கப்பட்ட - தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்படும் - காட்சிகள் நிச்சயமாக யுத்தக் குற்றங்கள் இடம்பெற்றமையை உறுதி செய்கின்றன என ஐக்கிய நாடுகளின் சட்டவிரோதப் படுகொலைகள் குறித்த விசேட அறிக்கையாளர் பிலிப் அல்ஸ்டொன் தெரிவித்துள்ளார்.



ஆஸ்திரேலியாவின் 'எஸ்.பி.எஸ்.' தொலைக்காட்சிக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே இதனைத் (23ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியும் சுதந்திரமுமாக பொதுத் தேர்தலை நடத்து...

### கோருகின்றது கரித்தாஸ்

கொழும்பு, மார்ச் 02

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை அமைதியானதும், சுதந்திரமானதுமான முறையில் நடத்தவேண்டும் என கரித்தாஸ் அமைப்புக் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தலை அமைதியானதும், நேர்மையானதுமான முறையில் நடத்துவதற்குச் சகல அரசியல் கட்சித் தலைவர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளது.

(24ஆம் பக்கம் பார்க்க)

## சொத்து விவரங்களை வெளியிடுவதில் வேட்பாளர்கள் பெரும் அசமந்தம்

### தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் விசனம்

கொழும்பு, மார்ச் 02

வேட்பாளர்கள் தமது சொத்து விவரங்களை வெளியிடுவதற்கு நாட்டம் காட்டுவதில்லை எனத் தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் விசனம் தெரிவித்துள்ளன.

வேட்பு மனுத் தாக்கல் செய்து மூன்று மாதங்களுக்குள் சொத்து விவரங்களை வெளியிட வேண்டும் என்பது தேர்தல் சட்டமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஏழாயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்ற போதிலும், இதுவரையில் 11 பேர் மட்டுமே தமது சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளனர் (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவிக்க கால அவகாசம் கோருகின்றது இராணுவம்

கொழும்பு, மார்ச் 02

விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளுக்கு கால அவகாசம் தேவை என இராணுவம் அறிவித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட காலம் மூளைச் சலவை செய்யப்பட்டு இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு உடனடியாக மறுவாழ்வு அளிக்க முடியாது எனவும் இராணுவம் சுட்டிக்காட்டியுள்ளது.

பதினோராயிரத்துக்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் போராளிகள் இராணுவத் (24ஆம் பக்கம் பார்க்க)

## எதிரணி எம்.பிக்களுக்கான பாதுகாப்பு: அரசின் கருத்தைக் கோருகிறது நீதிமன்று

### 5ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

கொழும்பு, மார்ச் 02

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மீண்டும் பாதுகாப்பை வழங்குவது குறித்து ஆராயுமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது.

தமது பாதுகாப்பு நீக்கப்பட்டமை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டாகத் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்று ஆராய்ந்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நேற்று இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்றவேளை எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட போதிலும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற (24ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடர்**

**உள்ளே**

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான புவியியல் மாதிரி வினாத்தாள்

**நாளை**

ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான பொது இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்

## கிளிநொச்சி, முல்லைத்தீவு நீதிமன்றங்கள் வவுனியாவில் இயங்க ஆரம்பித்தன

யாழ்ப்பாணம், மார்ச் 2

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான நீதிமன்றங்கள் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளன.

இரு இடங்களிலும் உள்ள நீதிமன்றங்களின் கட்டடங்கள் சேதமடைந்துள்ளதால், தற்காலிக ஏற்பாடாக, வவுனியாவில் இவ் இரு நீதிமன்றங்களையும் மூன்று வாரங்கள் இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீதிமன்றச் செயற்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக வவுனியா நீதிபதி ஏ.ஜி. அலெக்ஸ் ராஜா தலைமையில் குழு ஒன்று நேற்று கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எஸ்.சிவகுமார், முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி எஸ்.ரியல் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள், சட்டத்தரணிகள் ஆகியோரும் இக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

சேதமடைந்துள்ள இரு நீதிமன்றக் கட்டடங்களையும் புனரமைப்பது, தளபாட வசதிகளை ஏற்படுத்துவது ஆகிய விடயங்கள் தொடர்பாக இக் குழுவினர் ஆராய்ந்தனர். (அ-1-93)

### தமிழர்களின் மாநாட்டில் மில்லிபாண்ட் பங்குபற்றுவதா?

## விமல் வீரவன்ஸ தலைமையில் நேற்று பிரிட்டிஷ் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 02

உலகத் தமிழர் பேரவையின் மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் கோர்டன் பிறவுணும் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்டும் கலந்து கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசில் அங்கம் வகிக்கும் தேசிய விடுதலை முன்னணியின் தலைவர் விமல் விரவன்ஸ தலைமையில் நேற்று பிரிட்டிஷ் தூதரகத்தின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

எனினும், இலங்கை அரச அதிகாரிகள், இது தனிப்பட்ட ஆர்ப்பாட்டம், அரசிற்கும் இதற்கும் தொடர்பில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக அதில் கலந்துகொண்ட தரப்போ அல்லது பிரிட்டிஷ் தூதரகமோ தகவல் எதனையும் வழங்கவில்லை எனக் குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சக அதிகாரிகள், இது முற்றிலும் தனிப்பட்ட ஆர்ப்பாட்டம், இதற்கும் அரசிற்கும் தொடர்பில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகமவும் ஆர்ப்பாட்டம் குறித்து எவரும் தனக்கு அறிவிக்கவில்லை, முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (அ-சி)

(படம்: 24 ஆம் பக்கத்தில்)

# அரசமைப்புக்கும் சர்வதேச சட்டங்களுக்கும் முரணாகவே ஜெனரல் பொன்சேகா கைது!

### முன்னாள் பிரதம நீதியரசர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 02

ஜெனரல் சரத் பொன்சேகாவின் கைது மூலம் இலங்கை அரசமைப்பும் சர்வ தேச சட்டங்களும் முற்றாக மீறப்பட்டுள் ளன என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா நேற்றுக் கூறினார்.

இராணுவச் சட்டத்திற்கு அமைவாகவே பொன்சேகா கைதுசெய்யப்பட்டார் என்று கூறப்படுகின்ற போதிலும், அந்த இராணுவச் சட்டம் இலங்கை அரசமைப்பு மற்றும் சர்வதேச சட்டங்களுக்குக் கீழேயே வருகின்றன என்றும், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிக்கு இராணுவச் சட்டம் ஒருபோதும் பொருந்தாது என்றும் அவர் சொன்னார்.

சரத் பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக இணையத்தளம் ஊடாக மக்களிடம் கையெழுத்துகள் திரட்டும் நடவடிக்கையை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

(23ஆம் பக்கம் பார்க்க)

## பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் போட்டி:

# இங்கிலாந்து அணி வெற்றி

டாக்கா, மார்ச். 02

பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது.



அலஸ்டயர் குக் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி பங்களாதேஷிற்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பங்களாதேஷ் அணிக்கு எதிரான கிரிக்கெட் தொடரில் விளையாடி வருகிறது.

3 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதலாவது ஆட்டம் டாக்காவில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, 45.4 ஓவர்களில் 228 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

ஆரம்ப வீரராகக் களமிறங்கி 9ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்த இளம் வீரர் தமிம் இக்பால், 120 பந்துகளில் 13 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 125 ஓட்டங்களை விளாசினார். இதன்மூலம் தனது 3ஆவது சதத்தை நிறைவு செய்த தமிம், இங்கிலாந்துக்கு எதிராக சதம் கண்ட முதலாவது பங்களாதேஷ் வீரர் என்ற சிறப்பையும் பெற்றார்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்வான் 3 விக்கெட்டுகளையும், ஸ்ருவார்ட் பிராட் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பின்னர் 229 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இங்கிலாந்து அணி, 46 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப் புக்கு வெற்றியிலக்கான 229 ஓட்டங் களைத் தொட்டது.

இதன்மூலம் அவ்வணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

அணித்தலைவர்குக் 64 ஓட்டங்களையும், கொலிங்வூட் 75 ஓட்டங்களையும் (ஆட்டமிழக்காமல்) சேர்த்து வெற்றிக்கு வழிவகுத்தனர்.

ஆட்டநாயகனாக பங்களாதேஷ் வீரரான தமிம் இக்பால் தெரிவுசெய்யயப் பட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம், இங்கிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

2ஆவது ஒரு நாள் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

## இதய அஞ்சலிகள்

### திருமதி ருக்குமணி அம்மா நடராஜக்குருக்கள்



எமது பதிவாளர் நாயகத் திணைக்களத்தின்
பிரதிப் பதிவாளர் நாயகம்
திரு ந.சதாசிவ ஐயர்
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி
ருக்குமணி அம்மா நடராஜக் குருக்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட விவாக, பிறப்பு இறப்பு
பதிவாளர் சங்கம்.

## சமையல் ஆள் தேவை (பெண்)

இராமநாதன் கல்லூரி விடுதியில் தங்கி இருந்து சமையல் வேலை செய்வதற்கு பெண் தேவை.

வயது எல்லை 40-60 வயதுக்குட்பட்டவர்.

05.03.2010 வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு நேரில் சமுகமளிக்கவும்.

இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

அதிபர்.



## O/L / A/L தடையல்ல

நீங்களும் கணனி பட்டதாரியாகலாம்

இலங்கை பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் உடையது

பகுதிநேர வெளிவாரி கற்கைநெறி | யாழிலேயே கற்கும் வசதி

மாணவர்களை பல்திறன் வாய்ந்தவர்களாக உருவாக்கும் வகையில் FIT மாணவர்களுக்கு

- ICDL (International Computer Driving License)
- MCP (Microsoft Certified Professional)
- MCTS (Microsoft Certified Technology Specialist)
- DIE (Diploma in English)

100% OFF

BIT பட்டமளிப்பு வைபவத்தின் போது சிறப்பு விருது பெற்ற நிறுவனம்

விண்ணப்பபடிவங்களிற்கும் பதிவுகளுக்கும் 05-03-2010 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

Call 772395895

MCS
Supported By UNDP/JRRP


சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமக

## நிஜம் ஒன்று நிழலாகிய ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு
25
07
1945



உதிர்வு
13
03
2009

### திருமதி சிவசுந்தரம் அகிலாண்டேஸ்வரி

அன்போடு அரவணைத்து
அறிவமுது ஊட்டி இனிமையாகப் பேசி
தன் மடியினை தொட்டிலாக்கி
பண்போடு பரிமாறி
பாசத்துள் திளைக்க வைத்த - எங்கள் அன்னையே
எம் எல்லோரையும் தவிக்க வைத்து
நீங்கள் இறையடி சேர்ந்து ஈராறு மாதமாயினும்
மறக்க முடியுமா உயிருள்ள வரை - உங்களை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

கருவேலடி லேன்,
கோக்குவில் கிழக்கு, கோக்குவில்.
தொ.பே: 0774819041, 0775949616
நி.முகவரி: தண்ணீருற்று, முள்ளியவளை.

கணவர் : சி.சிவசுந்தரம்,
மருமகன் : இ.இலங்கேஸ்வரன்,
மகன் : சி. செந்தில்குமரன்.

(95488)

## ஐ.பி.எல். தொடரில் விளையாட ஆஸி. வீரர்களுக்கு அனுமதி

மெல்போர்ண், மார்ச் 02

ஆஸி. வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் விளையாடுவதற்கு அந்நாட்டு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஐ.பி.எல். போட்டித் தொடர் எதிர் வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், பாதுகாப்புப் பிரச்சினை காரணமாக வெளிநாட்டு வீரர்கள் பங்கேற்பதில் சிக்கல் நிலை ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் ஆஸ்திரேலிய வீரர்களை ஐ.பி.எல். தொடரில் பங்கேற்க அனுமதிப்பது தொடர்பாக அந்நாட்டு அரசு நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தியது.

அதன் முடிவில், இந்தியாவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் திருப்தியாகவுள்ளதால், ஐ.பி.எல். தொடரில் ஆஸி. வீரர்கள் பங்கேற்கலாம் என அனுமதி வழங்கியுள்ளது.

அரசின் இந்த நிலைப்பாட்டை ஆஸி. அணியின் முன்னாள் வீரர்களான ஷேன்வோர்ண், கில்கிறிஸ்ட் மற்றும் ஹைடன் போன்றோர் வரவேற்றுள்ளனர்.

## வீடு விற்பனை

சங்குவேலி தெற்கு, மானிப்பாய் முற்சந்திக்கு அருகில் அமைந்துள்ள 4 பரப்புடன் சகல வசதிகளையும் கொண்ட வீடும், அத்துடன் 3 கடையுடன் கூடிய வீடும் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 9301745, 0776917155, 0779073790

## தவறிவிட்டது

மஞ்சத்தடி வீதி, இணுவிலைச் சேர்ந்த ஆறுமுகம் செல்வராசா என்பவரது தே.அ.அ (551490149V), இராணுவ அ.அ. அட்டை என்பன தென்மராட்சி பிரதேசத்தில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும்.

சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே: 0779771970

## ஆசிரியர் தேவை

கொக்குவிலில் நீண்ட காலமாக இயங்கும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு ஆசிரியர் தேவை.

- கணிதம் (6-11)
- புவியியல் (10,11, A/L)
- ஆங்கிலம் (6-8)
- தமிழ் இலக்கியம் (10,11)
- வரலாறு (A/L)
- இந்து நாகரிகம் (A/L)

T.P: 0213734414

(மாலை 6 மணிக்குப் பின் தொடர்பு கொள்க)

(95466)

## மரண அறிவித்தல்கள்

### ஜெயாதரன் குகனேஸ்வரி



வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட ஜெயாதரன் குகனேஸ்வரி நேற்று (01.03.2010) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் வள்ளிநாயகி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சண்முகராஜா மற்றும் சறோஜினிதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயாதரனின் அன்பு மனைவியும் வினோத், சுஜித், விருத்திகா, நிருத்திகா, சுமித் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2010) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல் :
குடும்பத்தினர்.

(95494)

### திருமதி மேரி இமல்டா (அன்னரட்ணம்)



யாழ்ப்பாணம், டேவிட் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு மாபொல, வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி இமல்டா அன்னரட்ணம் அவர்கள் 28.02.2010 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான இரவீந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியன் இராசதுரை - அக்னஸ் (கனகம்) ஆகியோரின் அன்பு மகளும் றஞ்சன் (கனடா), காலஞ்சென்ற றமேஸ் மற்றும் ரேவதி (கொலண்ட்), றஜனா (லண்டன்), றமணா (கொலண்ட்), சுபோ (லண்டன்) லின்டா (கொழும்பு), றதீஸ் (கனடா), சோபி (கொலண்ட்), சிந்து (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பற்றிக், உவாம்சலின், தாசன், அமலரட்ணம், ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஜோன் இராசையா, மத்தீன் தம்பதிகளின் அன்புப் பெறாமகளுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

55/1, டேவிட் றோட்,
யாழ்ப்பாணம். (95496)

தகவல்:
மு.முருகானந்தன்
(மைத்துனர்-பாதுகாவலர் யாழ்.மாநகரசபை)

### முருகேசு யோகசுந்தரம்

கலைமன்ற வீதி, புலோலி வடக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், இல. 54, Hammers Avenue, வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு யோகசுந்தரம் நேற்று (01.03.2010) திங்கட் கிழமை 10 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - யோகேஸ்வரி தம்பதியரின் மூத்த மகனும் காலஞ் சென்ற நடராசா - தங்கம்மா தம்பதியரின் மருமகனும் அகிலாண்டேஸ்வரியின் அன்புக் கணவரும் Dr. அருணன் (U.K), யோகிதா (U.S.A), ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 04.03.2010 வியாழக் கிழமை மாலை 4 மணியளவில் ஜெயரட்ண மலர்ச்சாலை கனத்தை பொரளையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பொரளை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளவும்.

54,Hammers Avenue,
Wellawatha.
T.P : 0112588590

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### கனகர் துரைராசா



(முன்னாள் சாலை பரிசோதகர், C.T.B.), யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொண்ட கனகர் துரைராசா (27.02.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகர்-மீனாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பேபி சறோஜாவின் அன்புக்கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா, ஸ்ரீமோகன், மீனா, வாமதேவா, கோமளா, காஞ்சனா, சுதாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாநிதி, கிறிஸ்டின், சிவகுமார், ராஜினி, R.சரவணன், M.சரவணன், றூபி ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுஷாந்த், விஜயஷாந்த், தோமஸ்ராஜா, யோசெப்ராஜா, மிதுனன், சானுகா, சுரங்கா, சரோன், ஹரினி, ஹர்சினி, ஆண்டுவன், சுருதி, விஸ்ணு லக்ஸ்ணவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2010) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வண்ணை கோம்பயன் மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

377/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
மகன் - ஸ்ரீஸ்கந்தராசா

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அரசியல்வாதிகளின் பாதுகாப்பிலும் அரசியல் நடத்தும் ஆளும் தரப்பு

'நீதி நிலைநாட்டப்படுவது மாத்திரமல்ல, நிலைநாட்டப்படுவதுபோலக் காட்டப்படவும் வேண்டும்.' - இது ஓர் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆன்றோர் மொழி. நீதி நிலைநாட்டப்படுவது தொடர்பில் அடிப்படையான அம்சம் இது.

இந்தப் பொதுத் தேர்தல் சமயத்தில் பிரதான அரசியல் தரப்புகளின் பாதுகாப்புத் தொடர்பான விடயத்தில் இந்த நீதி முறைமை ஒழுங்காகப் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த பாதுகாப்புத் தொடர்பில் அரசு பாரபட்சமாக நடந்துகொள்வதாகப் பரவலாகக் குற்றச்சாட்டுகள் எழுந்திருக்கின்றன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையை அடுத்து எம்.பிக்களுக்கு - குறிப்பாக எதிர்க்கட்சி எம்.பிக்களுக்கு - வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு திடீரென, முன் அறிவித்தல் ஏதுமின்றித் திடுதிப்பெனப் பறிக்கப் பட்டது.

பாதுகாப்பு வசதி வழங்கும் விடயத்தில் அரசுத் தரப்பினர் ஒருவிதமாகவும், எதிர்க்கட்சிகள் வேறுவிதமாகவும் கையாளப்படுகின்றனர் என்றும், பாரபட்சம் வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் காட்டப்படுகின்றது என்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. குற்றம் சுமத்தியிருக்கின்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமையை அடுத்து எம்.பிக்கள் பதவி இழந்துவிட்டார்கள் என்பதால் அவர்களுக்கான பாதுகாப்பு விலக்கப்பட்டு விட்டது என்றும் ஆக அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு மட்டுமே பாதுகாப்பு வசதி வழங்கப்பட்டுள்ளது என்றும் அரசுத் தரப்பில் இப்போது சமாதானம் கூறப்படுகின்றது.

ஆனால், இந்த சமாதானத்திலும் சில தவறுகள் வெளிப்படையாக இருப்பது சுட்டிக்காட்டப்பட வேண்டியதாக உள்ளது.

* நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும், அடுத்த நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாகக் கூடும்வரை, பழைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது தொடர்பான பணியை ஆற்றுவதற்கு எந்நேரமும் அழைக்கப்படலாம். இப்போது கூட, கடந்த மாத முற்பகுதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகள் அடுத்த சில நாள்களில் காலாவதியாகப் போகின்றன. அவசரகாலச் சட்ட விதிகளைத் தொடர்ந்தும் தேர்தல் வரையிலும் - பின்னர் புதிய நாடாளுமன்றம் கூடும் வரையிலும் - அரசு நீடிக்க வேண்டுமாயின், கலைக்கப்பட்ட நாடாளுமன்றின் ஓர் அமர்வை பொதுத் தேர்தலுக்கு முன்பதாக மீண்டும் அரசு நடத்தியேயாக வேண்டும். அத்தகைய பின்புலம் இருக்கும்போது புதிய நாடாளுமன்றம் கூடும் வரையில் பழைய நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பும், வசதியும், அந்தஸ்தும் வழங்குவதே முறையாகும்.

* இதுவரை காலமும் - முன்னைய சந்தர்ப்பங்களில் - அப்படித்தான் புதிய நாடாளுமன்றம் கூடும்வரை பழைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருந்த பாதுகாப்பு தொடர்வதற்கு அனுமதிக்கப்பட்டே வந்துள்ளது. அதுவே இத்தேசத்தின் முன் அனுபவமாகவும், நடைமுறையாகவும் இருந்து வந்துள்ளது.

* நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் சட்ட ரீதியான செயற்பாட்டுக்கான அந்தஸ்தும், தகுதியும் உடையவர்கள் என்று வரையறையைச் செய்ய முற்பட்டால் அது நிச்சயம் பிரதமர், அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், அதே அந்தஸ்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு மட்டுமே உரியதாகும். பிரதி அமைச்சர்களோ, அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களோ இதற்கு உரியவர்கள் அல்லர். ஆகவே, அரசு, தனது ஆளும் தரப்பில் அமைச்சரவை அந்தஸ்து உடைய அமைச்சர்கள் தவிர்ந்த ஏனைய எம்.பிமார் அனைவருக்கும் பிரதி அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள் எனப் பெயருக்கு மகுடம் சூட்டிவிட்டு, அதனைக்காட்டி அவர்கள் அனைவருக்கும் தாராளமாகப் பாதுகாப்பை வழங்குவதும், மறுபுறத்தில் எதிரணியில் உள்ள எம்.பிக்கள் அனைவரினதும் பாதுகாப்பையும் விலக்குவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமல்ல; எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்தக்கூடியதும் அல்ல.

* இதேசமயம், எதிர்க்கட்சி எம்.பிக்களின் பாதுகாப்பை விலக்கிக் கொண்டுள்ள அரசு, சாதாரண ஆளுங்கட்சி அமைப்பாளர்களுக்குக் கூடப் பாதுகாப்பை வழங்கியுள்ளது என எதிரணியினர் சுமத்தும் குற்றச்சாட்டும் கவனிக்கத்தக்கதாகும்.

மேலும், அரசியல்வாதி எவரும் ஆளும் கட்சிக்குத் தாவினால் பாதுகாப்பு வழங்கப்படும் என்றும், எதிர்க்கட்சிப் பக்கம் வந்தால் பாதுகாப்புப் பிடுங்கப்படும் என்றும் ஒரு பொது விதி - எழுதாத சட்டம் - இங்கு கடைப்பிடிக்கப்படுவதாகவும் கூடத் தோன்றுகின்றது.

மட்டக்களப்பு மாநகர மேயர் சிவகீதா பிரபாகரனின் விடயத்தில் இருந்து கிழக்கு மாகாண முதல்வர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) வரையான பலரின் விடயங்களில் இது அம்பலமாகியிருப்பது மறைக்க முடியாத ஒன்று.

தனது அரசியல் லாபத்துக்காக -

எதிர்க்கட்சியினரின் பிரசார நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி, கட்டுப்படுத்துவதற்காக -

பாதுகாப்பு விடயங்கள் மீதான தனது அதிகாரத்தை அரசு இப்படித் துஷ்பிரயோகம் செய்வது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இது முழு அநீதியான - முறையற்ற - கண்டிக்கத்தக்க - அதிகாரத் துஷ்பிரயோகமின்றி வேறில்லை.

# புங்குடுதீவு கணேச வித்தியாலய நூற்றாண்டு விழா நேற்று ஆரம்பம்; இன்றும் நாளையும் விசேட நிகழ்வுகள்

## தமிழகப் பேச்சாளர் சுகிசிவம் இறுதிநாள் விசேட உரை

யாழ்ப்பாணம், மார்ச் 2

புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் நூற்றாண்டு விழா நிகழ்வுகள் வித்தியாலய மண்டபத்தில் நேற்று ஆரம்பமாகின.

இன்றும் நாளையுமாக மூன்று நாள்கள் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நேற்றைய நாள் நிகழ்வுகளாக வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அதிபர் எஸ். கே. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக நூற்றாண்டு விழாக் குழுவின் பொருளாளர் சி.முருகானந்தவேல் கலந்துகொண்டார்.

இரண்டாம் நாளான இன்று முற்பகல் 10 மணிக்கு முத்தமிழ் விழா பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.இராதகிருஷ்ணன் கலந்துகொள்வார். கலை நிகழ்வுகள் நடைபெறும்.

நாளை இறுதிநாள் நிகழ்வுகளாக காலை 7 மணிக்கு விசேட பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகி வித்தியாலய பெயர் திரைநீக்கம், நூற்றாண்டு நினைவுக்கல் திரைநீக்கம், கலை நிகழ்வுகள் என்பன நடைபெறும்.

இந்த நிகழ்வுகளில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வியமைச்சுச் செயலர் இ.இளங்கோவன் கலந்துகொள்வார்.

மாலை நிகழ்வுகள் பி.ப.3 மணிக்கு ஆரம்பமாகும். இதில் நூற்றாண்டு மலர் வெளியீடு இடம்பெறும். தமிழகதில் இருந்து வருகைதந்துள்ள தலை சிறந்த பேச்சாளர் சொல்வேந்தர் சுகிசிவம் வழங்கும் 'எது கல்வி'? என்ற தலைப்பிலான சிறப்புரையும் இடம்பெறும்.

நாளைய நிகழ்வுகளில் கலந்துகொள்ள வசதியாக யாழ். நகரில் இருந்து புங்குடுதீவுக்கு இலவச பஸ் சேவையும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (1-10)

# குடாநாட்டில் மீளக்குடியேறியோருக்கு 'நிக்கொட்' 25 ஆயிரம் ரூபா வழங்குகிறது

யாழ்ப்பாணம், மார்ச் 2

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு 'நிக்கொட்' நிறுவனத்தால் தலா 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்த கொடுப்பனவுகளை வழங்குவதற்கு 17 ஆயிரத்து 732 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று அந்த நிறுவனத்தின் யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் இந்தக் கொடுப்பனவுக் முற்கட்டமாக வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயகங்கள் ரீதியாக பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பயனாளிகளுக்குரிய கொடுப் பனவுகள் இம்மாத நடுப்பகுதியில் அந்தந்தப் பிரிவு கிராம உத்தியோகத்தர்களின் அலுவலுகத்தில் வைத்து வழங்கப்படும் என்றும் -

இந்தப் பயனாளிக்குரிய இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகளும் விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். (1-9)

## யாழ்.வலயக் கல்வி அதிபர்களுக்கு கலந்துரையாடல்

யாழ்.வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்களுக்கும் மற்றும் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடல் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. ஒரு மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்ட அதிபர்களும், ஆசிரியர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (1-10)

## கோப்பாய் கலாசாலையில் இறுதிப்பரீட்சை

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2007/2008 கல்வியாண்டிற்கான இறுதிப் பரீட்சை எதிர்வரும் 11 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப்பரீட்சையில் தோற்றவுள்ள ஆசிரிய மாணவர்கள் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வரும் வெள்ளிக்கிழமை மு.ப.10 மணிக்கு கலா சாலையில் பெற்றுகொள்ளும்படி அதிபர் மலர் சின்னையா கேட்டுள்ளார். (1-10)

## மெய்வன்மைப் போட்டி

சாவகச்சேரி, மார்ச் 2

மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று செவ்வாய் பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் வித்தியாலய அதிபர் ச.கிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் தென்மாட்சி வலயக் கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி முதன்மை விருந்தினராக கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராஜா, வைத்திய கலாநிதி திருமதி லியோன் புஸ்பராணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதி அமைப்பாளர் சாள்ஸ் அலெக்சாண்டர் ஆகியோர் பங்குகொள்வர். (1-131)

## வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான கடைசி பஸ் பி.ப. 6.30 மணிக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 2

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கான கடைசிபஸ் சேவை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் என்று பருத்தித்துறைசாலை முகாமையாளர் எஸ். குலபாலசிங்கம் தெரித்தார்.

இதுவரை காலமும் கடைசி பஸ் சேவை மாலை 5.30 மணிவரையே இடம்பெற்று வந்தது என்றும் அச் சேவை நேற்று முதல் மாலை 6.30 மணிக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

அதேவேளை -

யாழ்ப்பாத்தில் இருந்து வடமராட்சிக்கு கடைசி பஸ் சேவை இரவு 8.30 மணிக்கு இடம்பெறுகிறது என்று யாழ். பஸ் நிலைய அதிகாரி தெரிவித்துள்ளார். (1)

# காக்கைதீவு மீன்சந்தை மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஏற்பாடு

பாதுகாப்புக் கருதி, காக்கைதீவுக் கடற்கரையில் இருந்து வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட மீன் சந்தை அமைதிச் சூல்நிலையைத் தொடர்ந்து மீண்டும் பழைய இடத்தில் இயங்க இருக்கிறது.

வலி.தென்மேற்கு பிரதேச சபை செயலாளர் எடுத்துக்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து மீன் சந்தை இங்கி வந்த இடத்தைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்கப்படுகிறது.

குடாநாட்டில் நிலவிய போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து பல வருடங்களாக காக்கைதீவுக் கடற்கரையில், யாழ்ப்பாணம் பொன்லை வீதியில் இயங்கி வந்த காக்கைதீவு மீன் சந்தை பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு, பாதுகாப்புப் படையினரின் உத்தரவை அடுத்து வேறு இடத்துக்கு மாற்றப்பட்டது.

கடற்கரையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் யாழ். மாநகர சபைப் பகுதியில் உள்ள காணியில் இயங்கி வந்த இந்தச் சந்தையால் பொது மக்கள், மீன் வியாபாரிகள், குறிப்பாகக் கடற்றொழிலாளர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டிருந்தனர்.

வசதியீனங்கள் மத்தியில் இயங்கி வரும் இச் சந்தையைப் பழைய இடத்தில் கடற்கரைப் பக்கமாக இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சாவல்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் என். பொன்னம்பலம் வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளரைக் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையைத் தொடர்ந்து, பிரதேச சபைச் செயலாளர் மீன் சந்தையைப் பழைய இடத்தில், காக்கைதீவுக் கடற்கரையில் அமைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார். சந்தை அமையவிருக்கும் காணியைச் சுற்றி முள்கம்பி வேலி அமைக்கும் பணி ஆரம்பிக்கட்டுள்ளது. (1-115)

## ஞானச்சுடர் வெளிவந்தது

யாழ்ப்பாணம், மார்ச்2

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெளியீடான 'ஞானச் சுடரின்' மாசிமாத இதழ் வெளிவந் துள்ளது.

சைவ சமயம் சார்ந்த கட்டுரைகளையும் கவிதைகளையும் தாங்கி இம்முறையும் வழமையான அம்சங்களுடன் 'ஞானச்சுடர்' வெளிவந்துள்ளது.

# பொன்சேகா விடுதலைக்கு இணையத்தளம் மூலம் கையெழுத்து சேகரிக்கும் இயக்கம் ஆரம்பம்

கொழும்பு, மார்ச் 02

ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக இணையத்தளம் ஊடாக மக்களிடம் கையெழுத்துகளைத் திரட்டும் நடவடிக்கை பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அந்த இணையத்தில் முதல் கையெழுத்தையிட்டு இணையத்தளத்தைத் தொடக்கிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து அந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்த ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, அனோமா பொன்சேகா, அர்ஜுன ரணதுங்க உட்படப் பல பிரமுகர்களும் அதில் கையெழுத்திட்டனர்.

பொன்சேகாவை விடுதலை செய்வதற்கும் இலங்கையில் இடம்பெறுகின்ற அராஜகத்தை இல்லாதொழிப்பதற்கும் தம்முடன் இணையுமாறு அனோமா பொன்சேகா இச்சந்தர்ப்பத்தில் மக்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

பொன்சேகாவை விடுதலை செய்யுமாறு கோரி உள்நாட்டில் மாத்திரமல்ல, வெளிநாடுகளிலும் போராட்டங்கள் இடம்பெறுகின்றன என்றும், இந்தப் போராட்டங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என்றும் சோமவன்ஸ அமரசிங்க அங்கு உரையாற்றியபோது கூறினார்.

பொன்சேகா இந்த நாட்டுக்குச் செய்த மாபெரும் பணியே அவர் விடுதலை செய்யப்படுவதற்குப் போதுமானதாகவுள்ளது என்றும் சோமவன்ஸ கூறினார். (அ-சி)

## நாளை

| | | |
|---|---|---|
| மாசி 19 | 03.03.2010 | |
| | புதன்கிழமை | |
| திதி | : திருதியை | |
| | பி.ப. 05.04 வரை | |
| நட்சத்திரம் : | அத்தம் | |
| | பி.ப.02.32வரை | |
| சுபநேரம் | : 04.57-06.27 வரை | |
| ராகுகாலம்: | 12.27-01.57 வரை | |

# சிரம வாசனா
உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 218
சீட்டிழுப்பு திகதி 28.02.2010

எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 03 20 37 38

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 4,431,572.50 | – |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 119 |
| 3ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 50/= | 4739 |
| 4ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 52214 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,400,230.00

வெற்றிப் பெறும் சீட்டுகள் சீட்டிழுப்பு நடத்திய திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். ஐந்திலட்சம் மேல் அதற்குக்கூடிய தொகைக்கான பரிசுகள் அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகும். பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை 234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2433631 இணையதளம்: www.nlb.lk


## விற்பனைக்கு

கோண்டாவில் வடக்கு, காரைக்கால் சிவன்கோயில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய2½பரப்புக் காணி விற்பனைக்குண்டு
தொடர்பு: பொ.நவரத்தினம்
குமரகோட்டம் வீதி, கோண்டாவில் வடக்கு.
தொ. பே: 021 4903135, 0779587317

## வாடகைக்கு

கிளிநொச்சி - கரடிப்போக்கு ஏ-9 வீதிக்கு அருகில் அமைந்துள்ள 3600, 2400, 3000 சதுர அடிகள் கொண்ட தனித்தனி 4 கட்டடங்கள் வர்த்தக, காட்சியக, அலுவலக, வங்கி நடவடிக்கைகளுக்கு சிறந்த இடம். வாகனத் தரிப்பிட வசதிகள் உண்டு. தொடர்புகளுக்கு:வீ.ஜீ. தங்கவேல்
வேளிர்வாசம், சிங்கை நகர், புலோலி தெற்கு, புலோலி
தொ.பே:0775355437

## தவறிவிட்டது

இல. 5/1 புகையிரத வீதி, கந்தர் மடத்தைச் சேர்ந்த க.இலம்போதரன் என்பவருடைய தே.அ.அ. (843624049v) சாரதி அனுமதிப்பத்திரம் என்பன பிறவுன் வீதிக்கும் யாழ். நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் அல்லது மயூரா அன்பளிப்பு அகம், இல. 14, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் கொடுத்துதவவும். தொ.பே: 0779237751, 021 222 2084

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 ✱ 02 ✱ 1930



உதிர்வு 13 ✱ 03 ✱ 2009

### திருமதி வேலுப்பிள்ளை தங்கம்மா

காலங்கள் மறைந்தாலும் கண்ணீர்
நிற்கவில்லை அம்மா
நாம் வாழும் காலங்களில் உங்கள் நினைவுகள்
என்றும் எம்மைவிட்டு அகலாது

இல.15, சென்மேரிஸ்
2ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


# கணனிப் பயிற்சிநெறிக்குத் தங்கமான சந்தர்ப்பம்

கொழும்பைத் தளமாகக் கொண்ட Knowledge City (Pvt) Ltdஉம் G-Tec கணனிக் கல்வி நிறுவனமும் இணைந்து யாழ்ப்பாணத்தில் உள்ள சகல கணனிக் கல்வி நிறுவனங்களிடமிருந்தும் பங்காளிகளாக இணைத்துக் கொள்ள விண்ணப்பங்களைக் கோருகின்றன.
பங்காளிகளாக இணைய விரும்புவோர் ஆகக் குறைந்தது இணையத்தள வசதியுடன் கூடிய ஆறு கணனிகள் (06 Nos) கொண்டவையாக இருத்தல் வேண்டும். இன்னும் G-Tec உடன் "சக்தி" (Shakthi) தொலைக்காட்சி மற்றும் ICTA மென்சலாவும் இணைந்து ரூபா ஏழாயிரம் (Rs. 7000/-) பெறுமதியான அடிப்படைத் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நெறியினை ரூபா ஆயிரத்து அறுநூறுக்கு (Rs. 1600/-) க்கு வழங்க உள்ளது.
9001:2008 என்ற சர்வதேச தரச்சான்றிதழ் (ISO)பெற்ற இந்தியாவில் முன்னணியில் திகழும் தகவல் தொழில்நுட்ப கம்பனியும் எங்கள் தாய் நாட்டை சக்தியுள்ள நாடாக தரம் உயர்த்துவதற்கு முன் வந்துள்ளது.

- மாணவர்களுக்கு இலவச பாட நூல்கள் (Course Materials) தமிழிலும் ஆங்கிலத்திலும் வழங்கப்படும்.
- G-TEC சான்றிதழ்கள் சர்வதேச தரம் வாய்ந்தவை.

தகவல் தொழில்நுட்பக் கல்விக்காக கீழ்வரும் நிலையங்கள் எங்களுடன் ஏலவே இணைந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

| | |
|---|---|
| Scot Computer Centre | கண்டி வீதி, சாவகச்சேரி. |
| E-Com | கோயில் வீதி, யாழ்ப்பாணம். |
| DMI Computer Education | கன்னாதிட்டி றோட், யாழ்ப்பாணம். |
| MCS | பலாலி றோட், யாழ்ப்பாணம். |
| Microsystems Development | பலாலி றோட், திருநெல்வேலி |
| IIT, C/o Rural Development Society | கே.கே.எஸ். றோட், மல்லாகம். |

G-TEC ENABLE SRILANKA IT LITERACY CAMPAIGN

Knowledge City

G TEC COMPUTER EDUCATION

Contact: Regional Support Office,
146/20, Havelock Road, Colombo 05.
Tel: 0777315262, 077 8449739


## 'ஆறுதல்' உள சமூக இதழ் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், மார்ச்.02

'ஆறுதல்' உள சமூக இதழ் வெளியீட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் சந்தரம் டிவகலாலா கலந்துகொள்ளவுள்ளார்.

'ஆறுதல்' இதழ் நூலின் அறிமுகவுரையை யாழ். கல்வியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி பப்சி மரியதாசன், பதிலுரையினை நூலின் ஆசிரியர் தெ.மதுசூதனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (1-7)


## படிவம்

1) க. பொ. த. (உ.த)ப் பரீட்சை – ஆகஸ்ட் 2010
2) மொறட்டுவ பல்கலைக்கழக தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா - 2010/2011 (NDT) பாடநெறி ஆகியவற்றுக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் விற்பனைக்கு உண்டு.

Bharathy Pathippakam, 430, K. K. S. Road, Jaffna


## யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்

# நூற்றாண்டு விழா

### பசுபதிப்பிள்ளை அரங்கு

### 03.03.2010 புதன்கிழமை - காலை நிகழ்வுகள்

காலை
7 மணி : விசேட பூசை வழிபாடு (கலட்டி வரசித்தி விநாயகர் ஆலயம்)
வெள்ளிப்பிள்ளையார் பவனி,
விசேட பூசை வழிபாடு (தல்லையபற்று முருகமூர்த்தி ஆலயம்)
9 .00 : வித்தியாலய பெயர் திரைநீக்கம்:
9.10 : நூற்றாண்டு நினைவுக்கல் திரைநீக்கம்
திரைநீக்கம் செய்பவர் : திரு.இ.இளங்கோவன் அவர்கள் (செயலாளர்- கல்வி அமைச்சு- வடமாகாணம்)
9.15 : மங்கள விளக்கேற்றல்
9.25 : கடவுள் வணக்கம்
9.30 : மங்கள இசை
நாதஸ்வர இன்னிசை வேந்தன் எம்.பி.நாகேந்திரன் குழுவினர்
10.00 : வரவேற்புரை - திரு.த.துரைசிங்கம் அவர்கள் (நூற்றாண்டு விழாக்குழுத் தலைவர்)
10.05 : தலைவர் உரை
திரு.எஸ்.கே.சண்முகலிங்கம் J.P (வித்தியாலய அதிபர்)
10.15 : வாழ்த்துரை - பேராசிரியர் வி.சிவசாமி அவர்கள்
10.25 : வித்தியாலய நிறுவுநர், முகாமையாளர்கள், முன்னாள் அதிபர்கள் புகைப்படத் திரைநீக்கம்
10.40 : சிறப்புரை பேராசிரியர் கா.குகபாலன் அவர்கள் (தலைவர், புவியியற்றுறை- யாழ்.பல்கலைக்கழகம்)
10.55 : முதன்மை விருந்தினர் உரை-திரு.இ.இளங்கோவன் அவர்கள்
11.05 : இன்னிசைக் கச்சேரி -செல்வி சைந்தவி பரமேஸ்வரன் B.A
11.35 : கலை நிகழ்ச்சிகள்
12.30 : நன்றி உரை - திரு.தம்பிஐயா தேவதாஸ் அவர்கள் (செயலாளர், நூற்றாண்டு விழாக்குழு)
01.00 : வித்தியாலய கீதம்

மாலை நிகழ்வுகள்
3.00 மணி : கடவுள் வணக்கம்
3.10 : வரவேற்புரை -அருள்நிதி சி.முருகானந்தவேல் அவர்கள் (பொருளாளர், நூற்றாண்டு விழாக்குழு)
3.20 : தலைவர் உரை - திரு.த.துரைசிங்கம் அவர்கள் (தலைவர், நூற்றாண்டு விழாக்குழு)
3.30 : நூற்றாண்டு மலர் வெளியீடு கணேச தீபம்
வெளியீட்டுரை :பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா அவர்கள்
முதற் பிரதி பெறுபவர்: திரு.எஸ்.பி.சாமி அவர்கள் (அதிபர், தினக்குரல் நிறுவனம்)
சிறப்புப் பிரதிகள் வழங்கல்
4.30 : சிறப்புரை: எது கல்வி?
தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்
சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள்
6.00 : நன்றியுரை திருமதி ஸ்ரீலதா சிவஞானசுந்தரம் (ஆசிரியை)
6.15: வித்தியாலய கீதம்

குறிப்பு: யாழ்.நகரிலிருந்து புங்குடுதீவுக்கு 03.03.2010 ஆம் திகதி இலவச பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.


# Daytona Limited
An in vitro Diagnostics Company

30 Years 1979 - 2009 A Remarkable Journey

DAYTONA DIAGNOSTICS® - Dependable Diagnostic Solutions

Daytona Limited has been in business for the past thirty years supplying its customers with High Quality products. We offer a variety of Test Kits, Reagents and General Chemicals for Medical Laboratary use.

- Fecal Occult Blood Test
- Infectious Diseases
- Urine Chemistry
- Prepared Analytical Reagents
- Stains and Indicators
- General Chemical and Reagents
- Biochemistry Reagents
- HCG Tests
- Blood Banking Reagents
- Blood Group Cards
- Rheumatology
- Febrile Antigens
- STD

Delivery Arranged!!! CALL NOW ON : 011-2699125

43. Fairfield Gardens. Colombo 8. Sri Lanka. Phone : 011-4322316. 011-2699125 Fax : 011-2699125.
E-mail : info@daytonadiagnostics.com Web Site : www.daytonadiagnostics.com

# யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க இதுவரை 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் விண்ணப்பம்

யாழ்ப்பாணம் மார்ச் 2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு இம்முறை அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர்.

இதுவரை 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று யாழ்.தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன.

தபால்மூலம் வாக்களிப்பதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி கடந்த 26ஆம் திகதியாகும்.

இதுவரைக்கும் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. விண்ணப்பங்கள் யாவும் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரால் மீள் பரிசீலனை செய்யப்பட்டு தபால் மூலம் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை இந்தவார இறுதிப் பகுதியில் அறிவிக்கப்படும்.

இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் பேர் மட்டுமே தபால் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (50-9)

# பிரசார சுவரொட்டிகளை 3ஆம் திகதிக்கு முன் அகற்ற வேண்டும்

கொழும்பு,மார்ச் 2

எதிர்வரும் ஏப்பரல் 8ஆம் திகதி நடைபெற உள்ள பொதுத் தேர்தலை முன்னிட்டு தேர்தல் பிரசாரத்திற்காக அனைத்துக் கட்சிகளினாலும் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அனைத்தும் நாளை புதன்கிழமைக்கு முன்னர் அகற்றுமாறு தேர்தல் செயலகத்தினால் பொலிசாருக்கும், நகரசபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# 65 ஆயிரம் பொலிஸார் தேர்தல் கடமையில்

கொழும்பு,மார்ச் 2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது 65ஆயிரம் பொலிஸ் உத்தியோகத்தர்களை நாடளாவிய ரீதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்த பொலிஸ் திணைக்களம் தீர்மானித்திருப்பதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அதன்படி நாடுமுழுவதுமுள்ள 40 பொலிஸ் வலயங்களிலும் 413 பொலிஸ் நிலையங்களினூடாக பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தேர்தல் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்தார்.

தேர்தல் சட்ட மூலத்துக்கமைய நீதியானதும் சுதந் திரமானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற வகையில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் நாடளாவிய ரீதியில் பாதுகாப்பு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

# இலங்கைக்குள் இரண்டு நாடுகள் உள்ளன; அதில் ஒன்று தமிழ் இனத்திற்குச் சொந்தமானது

## இடதுசாரி முன்னணியில் போட்டியிடும் சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் மார்ச் 2

இலங்கை என் பது சிங்கள பேரின வாதத்திற்கு மட்டும் சொந் தமான தனி நாடு அல்ல. இங்கு இரு நாடுகள். அதில் ஒன்று தமிழ் இனத்திற்குச் சொந்தமா னது.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் இடதுசாரி விடுதலை முன்னணியில் வேட்பாளராகப் போட்டியிடவுள்ள எம்.கே சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் வேட்பு மனுத்தாக்கல் செய்துவிட்டு ஊடகவியளாளர்களைச் சந்தித்துக் கருத்துத் தெரிவித்த போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் இடதுசாரி விடுதலை முன்னணி 5 தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ளது.

என்னையும் சிறிகாந்தாவையும் அரசிற்கு ஆதரவானவர்கள் என்று சொல்லிக் கொள்கின்றார்கள்.

நானும் ஸ்ரீகாந்தாவும் எந்தவித பாதுகாப்புமின்றி அனைத்துப் பிரதேசங்க ளிலும் நடமாடுகின்றோம். நாங்கள் அரசிற்கு ஆதரவானவர்கள் என்றால் எமக்குப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கும்.நாம் அரசிற்கு எதிரானவர்கள்தான். அதனால்தான் எமக்கு எந்தவொரு பாதுகாப்பும் வழங்கப் படவில்லை

நேற்று முன்தினம் கூட மட்டக்களப்பிற்குச் சென்றபோது எந்தவொரு பாதுகாப்பும் இன்றிச் சென்றுள்ளோம்.எம்மை மடக்குவதற்கு கருணா குழுவும், பிள்ளையான் குழுவும் காத்திருக்கிறது.

இந்த நிலையிலும் கூட எமது பாதுகாப்புக்கு எந்தவித உத்தரவும் இன்றி நடமாடுகின்றோம்.எனவே எமது மக்களுக் கென்றொரு' தேசம் வேண்டும். அதில் தமிழ் மக்கள் தம்மைத் தாமே அபிவிருத்தி செய்து சுபீட்சமாக வாழ்கின்ற நிலையினை உருவாக்க வேண்டும்.

எமது பிரதேசங்களில் வீதி அபிவிருத்தியென்றும் வடக்கின் வசந்தம் என்றும் அரசாங்கம் பலகோடி ரூபாக்களை சுருட்டிக் கொள்கிறது.

எமது பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வீதி அபிவிருத்திப் பணியில் மட்டும் ஒரு கிலோ மீற்றருக்கு 8 கோடி ரூபாய்என்ற அடிப்படையில் பணத்தினை அரசாங்கம் மோசடி செய்துவருகிறது. - என்றார். (50-9)

# தேர்தலுக்கு இரு வாரங்களுக்கு முன்னர் கண்காணிப்பு நடவடிக்கைகள் ஆரம்பம்

## பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் தகவல்

கொழும்பு,மார்ச் 2

தேர்தலுக்கு இரு வாரங்களுக்கு முன்னதாக எதிர்வரும் 25 ஆம் திகதியளவில் வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் இலங்கையில் தமது பணிகளை ஆரம்பப்பதற்கு ஏற்ற வகையில் அவர்களை வரவழைப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் ரோஹண தெரிவித்தார்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின் போது கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட ஆசிய நாடுகளில் இருந்து 50 தேர்தல் கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு வரவழைப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க பவ்ரல் அமைப்புக்கு அனுமதி வழங்கியிருப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 8 ஆயிரம் உள்நாட்டு கண்காணிப்பாளர்களை நாடளாவிய ரீதியில் பணியில் அமர்த்த பவ்ரல் அமைப்பு தீர்மானித்துள்ளது. இவர்களுக்கான விசேட பயிற்சிகள் அடுத்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட இருப்பதாகவும் பவ்ரல் அமைப்பின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

தேர்தல் கண்காணிப்பு பணிகளை நாடளாவிய ரீதியில் முன்னெடுப்பது தொடர்பாக பவ்ரல் அமைப்பின் முக்கிய அதிகாரிகள் தேர்தல்கள் ஆணையாளருடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இம்முறை நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து வாக்கு எண்ணுவதில் கலந்து கொள்வதற்கு பவ்ரல் அமைப்பு பிரதிநிதிகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை தேர்தல்கள் ஆணையாளரிடம் முன்வைத்திருப்பதாகவும் பணிப்பாளர் ரோஹன தெரிவித்தார்.

அத்துடன் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்கு ஏற்ற வகை யில் தற்காலிக அடையாள அட்டைகளை வழங்குவது தொடர்பான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதனால் அடையாள அட்டையில்லாதவர்கள் கிராம சேவகர்களை தொடர்பு கொள்ளுமாறும் பவ்ரல் அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (50)




# யாழ்.மாவட்ட வேட்பாளர்களுக்கு வியாழனன்று விருப்பு வாக்கு இலக்கங்கள்

யாழ்ப்பாணம் மார்ச் 2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுவின் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

யாழ்.தேர்தல் திணைக்களத்தின் அதிகாரியொருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் 15 கட்சிகளும், 12 சுயேச்சைகளுமாக 324 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளனர்.

இந்த வேட்பாளர்களுக்குரிய இலக்கங்களைத் தெரிவு செய்யும் வகையில் சிங்கள மொழி அகராதி வரிசையில் ஒழுங்கு படுத்தப்பட்டு பட்டியல் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணையாளரின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் நாளை மறுதினம் வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் அறிவிக்கப்படும் என்றார்.

என்றுமில்லாதவாறு இம்முறை வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகமான மாதாலேயே இலக்கங்கள் வழங்கும் நடவடிக்கை தாமதமானதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (50-9)

# ஈ.பி.டி.பி. கட்சிக்கு ஆதரவளிக்க மக்கள் மறுமலர்ச்சி முன்னணி தீர்மானம்

யாழ்ப்பாணம் மார்ச் 2

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிலைச்சின்னத்தில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியினை ஆதரிப்பதாக மக்கள் மறுமலர்ச்சி முன்னணி தீர்மானித்துள்ளது.

மக்கள் மறுமலர்ச்சி முன்னணியின் அமைப்பாளர் எம்.என். எம். முகீன், தவிசாளர் எம். ஏ. வைஷர் மற்றும் மௌலவி எம். சுபியான் ஆகியோர் கூட்டாக இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மூவரும்கூட்டாக இணைந்து தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அரசாங்கத்தில் இணைந்து ''வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதால் எமது அமைப்பானது அந்தக்கட்சியினை ஆதரிப்பதாகத் தீர்மானத்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கரங்களைப் பலப்படுத்துவதற்கு எமது நடவடிக்கைகள் அமையும். எனவே தேர்தலில் வெற்றிபெற்று யாழ்.மாவட்ட முஸ்லிம் சமூகத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கு ஜனாதிபதியும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உதவிபுரிய வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டனர். (9)

# நாடாளுமன்றத் தேர்தலில் மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்படும் உறுப்பினர் எண்ணிக்கை

| தேர்தல் மாவட்டம் | உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 19 |
| கம்பஹா | 18 |
| களுத்துறை | 10 |
| மஹாநுவர | 12 |
| மாத்தளை | 05 |
| நுவரெலியா | 07 |
| காலி | 10 |
| மாத்தறை | 08 |
| அம்பாந்தோட்டை | 07 |
| யாழ்ப்பாணம் | 09 |
| வன்னி | 06 |
| மட்டக்களப்பு | 05 |
| திகாமடுல்ல | 07 |
| திருகோணமலை | 04 |
| குருநாகல் | 15 |
| புத்தளம் | 08 |
| அனுராதபுரம் | 09 |
| பொலநறுவ | 05 |
| பதுளை | 08 |
| மொனராகலை | 05 |
| இரத்தினபுரி | 10 |
| கேகாலை | 09 |

# யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் நூற்றாண்டு விழாச் சிறப்பிதழ் - 03.03.2010

## நல்லை முதல்வரின் அருளாசிச்செய்தி



புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். பல சிறப்புக்களைக் கொண்டது புங்குடுதீவு. நீண்ட கல்விப் பாரம்பரியத்தை பலதுறைகளிலும் வளர்த்துத் தந்த பெருமை தீவக மக்களைச் சாரும். இவ்வரிசையில் ஒழுக்கத்திற்கும் கல்விப் பாரம்பரியத்திற்கும் 100 ஆண்டுகள் பணியாற்றிய பெருமை இப்பாடசாலையையே சாரும். பல இடர்பாடுகளுக்கும் சோதனைகளுக்கும் மத்தியில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் காட்டிய நூலின் நெறிநின்று 100 ஆண்டுகளைக் கடந்திருப்பது அனைவருக்கும் மகிழ்வைத் தருகின்றது.

எல்லோருக்கும் கல்வி என்ற பாரம்பரியம் நம் நாட்டில் உருவானது. இதற்காகவே பாடசாலைகள் அனைத்தும் முனைந்து வருகின்றன. 100 ஆண்டுகள் இப்பாடசாலை தன்னிகரில்லா பணியாற்றியமையால் இந்நாட்டில் கல்வி வளர்ச்சியில் தனக்கொரு இடத்தை வகுத்துக்கொண்டது. இப்பணியை புனிதப் பணியாக செய்து வந்த அதிபர்கள், ஆசிரியர்கள் நன்றியுடன் வாழ்த்துதலுக்குரியவர்கள். இன்றுபோல இன்னும் பல்லாண்டு காலம் வளர்ச்சியடைந்து ஒழுக்கம் நிறைந்த மாணவ சமுதாயத்தை உருவாக்க இறைவன் ஆசீர்வதிப்பாராக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*
நல்லை ஆதீனம்.



ஸ்தாபகர் வ.பசுபதிப்பிள்ளை

## பல்லாயிரம் மாணவரை உருவாக்கவேண்டும்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழே! நீ என்றும் கன்னியாய் திகழ்ந்து வற்றாத ஊற்றாய் வளமான விளைநிலமாய் தோன்றி இனிமையானவளாக உயிராக நின்றும் உயிருடன் மெய் சேர்ந்தும் தேவை நோக்கி உருமலர்ச்சி காட்டி நிற்கும் தமிழே! உனது இப்பெருமையைப் பறைசாற்றி நிற்கும் எமது பாடசாலை ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம் நூற்றாண்டு விழா கண்டு மனம் பூரித்து நிற்கின்றேன். புகழோடு விளங்கும் புலமையாளர்களையும், புத்திஜீவிகளையும் தந்து ஒரு சகாப்த சரித நிறைவை முடித்து நின்று கொண்டிருக்கும் ஸ்ரீ கணேச மகாவித்தியாலய நூற்றாண்டு விழாவில் பங்கு கொள்வதிலும் பெருமையடைகின்றேன். தமிழ்த்தாயின் குழந்தைகள் நாம் தரணி போற்ற உலகெங்கும் சிதறிக்கிடக்கின்றோம் ஆயினும் இந்த நூற்றாண்டு விழாவில் நாம் ஒன்றிணைந்திட்டோம். நினைக்க உள்ளம் நெகிழ்கின்றது. நாளைய உலகின் சரித்திரம் படைக்கப் போகும் எம்பாடசாலையின் நூற்றாண்டு விழா பல்லாண்டு காலம் பல்லாயிரம் மாணவ மணிகளின் உயர்ச்சிக்கு உறுதுணையாக அமையவும் அதன் எழுச்சிக்கு உந்து சக்தியாக விளங்கவும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கணேச சங்கமம்" வாழ்க வளமுடன்.

அருள்நிதி சி.முருகானந்தவேல்
பொருளாளர், நூற்றாண்டு விழாக்குழு.

## பள்ளியின் கல்வி பண்பாடாக பிரதிபலிப்பு



"கேடில் விழுச் செல்வம் கல்வி, ஒருவர்க்கு மாடல்ல மற்றையவை." உலகில் எந்தவொரு நாட்டின் விழுமைக்கும், பண்பாட்டுப் பாரம்பரியச் சிறப்புக்களுக்கும் அளவுகோலாய் அமைவது கல்வியேயாகும். கல்வியைக் கண்ணெனப் போற்றும் யாழ் மண்ணில் கல்வியின் வரலாறு திண்ணைகளிலேயே தொடங்கியது. இவ்வழியில் இன்று நூற்றாண்டு காணும் யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் தனது வரலாற்றில் பல படிகளைக் கடந்து இன்று மகாவித்தியாலயமாய் மலர்ந்துள்ளது. கசடறக் கற்று, கற்றவழி நிற்கும் ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டுமெனும் கல்வியின் நோக்கம் யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தினால் செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளது. இப்பள்ளியில் படிப்போடு புகட்டப்பட்ட பண்புகள் புங்குடுதீவு மக்களிடையே பண்பாடாய் பிரதிபலித்தன.

ஆரம்ப நாளில் பல அல்லல்கள் மத்தியில் தளராது நின்று தனிச் சிறப்புடன் வளர்ந்த யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் அண்மையில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின் பின்னரும் இத்தகையதொரு எழுச்சியுடன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடல் பெருமைக்குரியதாகும். இம்மகாவித்தியாலயம் சகல வளங்களையும், நலன்களையும் பெற்று நவீன தொழில்நுட்பத்தின் துணையோடு மாணவரின் அறிவுச் செல்வத்தைப் பெருக்கி, வளர்பிறையென வளர்ந்திட இந்நூற்றாண்டு நிறைவு நாளில் மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

க.கணேஷ், அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலர், யாழ் - மாவட்டம்

## மாகாண கல்வி அமைச்சின் செயலர் வாழ்த்து



யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாசாலை நூற்றாண்டு கால கல்விச் சேவையை வழங்கி இறும்பூதெய்துகிறது. சைவத் தமிழ் பண்பாட்டிற்கமைய புங்குடுதீவுப் பகுதிச் சிறார்களுக்கு உயர்ந்த விழுமியங்களைக் கொண்ட கல்வியை வழங்கிப் பலரையும் ஆளாக்கி வைத்த பெருமையைக் கொண்டுள்ளது. சமூகத்தில் பல்வேறு தலைமைத்துவப் பண்பையும் ஒரு நடுநாயகமான நிலையையும் இவ்வித்தியாசாலை கொண்டுள்ளது.

உயர்ந்த கல்விப் பாரம்பரியத்தைக் கொண்டு இடைநிலை வகுப்பு வரையும் கல்வியோடு இதர புற கல்விச் செயற்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுத்த பெருமை இப்பாடசாலைக்கு உண்டு. இடப்பெயர்வின் போது சிறிது நலிவடைந்திருந்தாலும் மீண்டும் மீண்டும் தழைத்து முன்நோக்கிச் செல்லும் போக்குடையதாக இருக்கின்றது. எனவே எமது பாடசாலையின் வளர்ச்சிக்கு சமூகத்தினரின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் வேண்டப்படுகிறது.

நூற்றாண்டு மலரை உருவாக்கி அச்சேற்றி வரலாற்று ஆவணமாக்கிய அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள போற்றுதற்குரியவர்கள். நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீட்டு விழாவும் சிறப்புற என் இதயங் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

இ.இளங்கோவன, செயலாளர் கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு, வடமாகாணம்

## வித்தியாலய அதிபரின் வாழ்த்து



புங்குடுதீவில் முதன் முதலில் தோன்றிய சைவ வித்தியாலயம் என்ற பெருமைக்குரியது ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம். சைவமும் தமிழும் தனது இரு கண்களாகக் கொண்டு கடந்த 100 ஆண்டுகளாக அறிவொளியூட்டிய இக் கல்விக் கூடம் இன்று தனது நூற்றாண்டு விழாவை வெகுசிறப்புடன் கொண்டாடுவது குறித்துப் பெரு மகிழ்வுறுகிறேன்.

"கணேச சங்கமம்" என்னும் பெயரில் இடம்பெறும் இந்த நிகழ்வில் "கணேச தீபம்" என்னும் நூற்றாண்டு மலரும் வெளியிடப்படவிருப்பது அனைவரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துமெனத் திடமாக நம்புகிறேன். இந்த நூற்றாண்டு விழாவைச் சிறப்புற நடத்தும் விழாக்குழுவினருக்கும், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன.

எஸ்.கே.சண்முகலிங்கம் (அதிபர்)

## வரலாற்றில் ஒரு திருப்புமுனை

"கன்னலொடு செந்நெல்விளை பொன்னகர்
தன்னிலுறை கண்ணகிக் கற்பரசியே"

என்று பாடினார் வரகவி முத்துக்குமாருப் புலவர். புலவர் பலரும் போற்றும் புங்குடுதீவு, கண்ணகிக் கற்பரசி, கடல் பல கடந்து, வந்தணைந்து கோயில் கொண்ட திருப்பதியாகும். இத்திரு வரலாற்றுப் பெருமைமிகு புங்குடுதீவில் செந்தமிழும் சிவநெறியும் செழித்தோங்க வேண்டுமென்னும் பெருவிருப்புடன் சைவப் பெருமக்கள் பலரதும் ஒத்துழைப்புடன் 03.03.1910இல் சைவப் பெரியார் அமரர் வ.பசுபதிப்பிள்ளையின் பெருமுயற்சியினால் உருவானதே இவ்வித்தியாலயமாகும்.

புங்குடுதீவின் கலைக்கூடமாக, நாடு போற்றும் நல்லாசான்களையும், பொறியியலாளர்களையும், மருத்துவர்களையும், சட்டத்தரணிகளையும், எழுத்தாளர்களையும், இசை வல்லுநர்களையும் உருவாக்கிய பெருமைக்குரியதாக இது விளங்குகின்றது. இங்கு கல்வி பயின்றோர் இன்று உலகளாவிய ரீதியில் பேரோடும், புகழோடும் திகழ்கின்றனர். அவர்களனைவரும் இன்று தங்களுக்கு எழுத்தறிவித்த கணேச வித்தியாலயத்தை நன்றியுடன் நினைவு கூர்ந்து வாழ்த்துகின்றனர்.

கடந்த நூற்றாண்டுகளாக அனைத்து மாணவர்க்கும் பாகுபாடு எதுவுமின்றிக் கல்விப் பணிசெய்த இவ்வித்தியாலயம். நூறாண்டுகால வரலாற்றில் மட்டுமன்றிப் புங்குடுதீவின் வரலாற்றிலேயே இந்நூற்றாண்டு விழா புதியதோர் திருப்புமுனையாக அமையுமென புங்குடுதீவில் முதன் முதலில் தோன்றிய சைவப் பாடசாலை என்ற வகையிலும் பல்லாயிரம் மாணவர்களுக்குப் பயன்தரும் பயிற்சிகள் அளித்து அவர்கள் தம் சீரிய வாழ்விற்குச் சிறப்புற வழிகாட்டிய கல்விக்கூடம் என்ற முறையிலும் இதன் பணிகள் என்றும் நினைவு கூறத்தக்கன என்றால் மிகையல்ல. நூறு ஆண்டுகளைக் கடந்து நிற்கும் இவ்வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரென்ற வகையிலும் நூற்றாண்டு விழாக்குழுத் தலைவரென்ற முறையிலும் இவ்விழாக்காண வாரீர் வாரீரென அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன். "கணேச சங்கமம்" புங்குடுதீவின் வரலாற்றில் புதியதோர் திருப்பத்தை உருவாக்குவதாக! "கணேச தீபம்" ஒளிவிட்டுப் பிரகாசிப்பதாக! நிறைந்த மனதுடன் வாழ்க! வாழ்கவென இவற்றை வாழ்த்துவோமாக!

த.துரைசிங்கம், (நூற்றாண்டு விழாக் குழுத் தலைவர்)



நூற்றாண்டு விழாக் குழுவினர்

## யா/ புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம் ஒரு வரலாற்று நோக்கு

செந்தமிழும் சிவநெறியும் தழைத்தோங்கும் நோக்குடன் புங்குடுதீவில் முதன் முதலாக அமைக்கப்பட்ட சைவப்பாடசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயமாகும். 03.03.1910இல் தோன்றிய இவ்வித்தியாலயம் தான் தோன்றிய தினத்திலேயே இன்று தன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகிறது. புங்குடுதீவில் உள்ள சைவப்பெருமக்களின் உதவியுடன் இவ்வித்தியால யத்தைப் பேணிக்காத்தவர் அமரர் வ.பசுபதிப்பிள்ளை ஆவார்.

1910இல் தோன்றிய இப்பாடசாலை 1914 வரை அரசினரின் நன்கொடைப் பண உதவி எதுவுமின்றி முகாமையாளரினதும் பொதுமக்களினதும் உதவியுடன் இயங்கியது. 10.08.1914இல் அரசினர் நன்கொடை உதவிபெறும் பாடசாலையாகப் பதிவு பெற்றது. 1923ஆம் ஆண்டில் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட மத்திய பாடசாலையாக உயர்வு பெற்றது. 1936ஆம் ஆண்டில் இவ்வித்தியாலயம் சிரேஷ்ட உயர்நிலைப் பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது. 1940ஆம் ஆண்டு இவ்வித்தியாலயப் பழைய மாணவர் சங்க விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள வருகைதந்த வித்தியாதிபதி திரு.எல்.எம்.டி. றொபின்சன் அவர்களிடம் புங்குடுதீவிற்கு ஒரு ஆங்கிலப் பாடசாலை வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதன்பேறாக அந்நாட் கல்வி அமைச்சர் சி.டபிள்யூ.கன்னங்கரா, சபாநாயகர் சேர்.வை. துரைசுவாமி ஆகியோரின் விதப்புரையின் பேரில் புங்குடுதீவு மகாவித்தியால்யம் இப்பாடசாலை வளாகத்திலே 16.01.1946இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பல சாதனைகளை நிலைநாட்டிய ஸ்ரீ கணேச வித்தியாலயம் 05.02.1980இல் கல்விய மைச்சினால் மகாவித்தியாலயமாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன் க.பொ.த உயர்தர கலை வகுப்புகளை நடத்தும் அங்கீகாரத்தையும் பெற்றது. கடந்த நூறு ஆண்டுகளில் 12 அதிபர்கள் இங்கு பணியாற்றியுள்ளனர். அவர்களாற்றிய சேவைகள் காலத் தால் மறக்கவொண்ணாதவையாகும்.

இவ்வித்தியாலயத்தின் முதற் தலைமையாசிரியர் வேலணையூரவரான பெரியார் திரு.கா.நமசிவாயம்பிள்ளையாவார். இவரே பண்ணோடு திருமுறைகளை ஓதும் பழக்கத்தை இங்கு ஏற்படுத்தியவர் எனலாம். இவரின் பின் பேராசிரியர் சி.இ.சதாசிவம பிள்ளை, க.செல்லத்துரை, வை.கந்தையா, நா.கார்த்திகேசு, சோ.சேனாதிராசா, த.துரைசிங்கம், கே.ரி.தர்மலிங்கம், எஸ்.அமிர்தலிங்கம், செ.ஈஸ்வரமூர்த்தி, ச.சதாசிவம் ஆகியோர் அதிபர்களாகக் கடமையாற்றியுள்ளனர். தற்போது திரு எஸ்.கே.சண்முகலிங்கம் அதிபராக உள்ளார்.

புங்குடுதீவின் கலைக்கூடமெனப் போற்றப்பெறும் இவ்வித்தியாலயத்தின் முகாமையாளராக அமரர்.வ.பசுபதிப்பிள்ளை 1910 முதல் 1954 வரை பணியாற்றினார். இவரின் பின் விதானையார் திரு.க.மு சின்னத்துரை 1955-1957 வரை கடமையாற்றினார். இவரின் மறைவை யடுத்து திருமதி.தையல்நாயகி கதிரவேலு 1957 முதல் 30.04.1962 வரை முகாமையாளராகச் செயலாற்றினார். அதன் பின்னர் இவ்வித்தியாலயத்தை அரசு தனதுடைமை ஆக்கிக் கொண்டது. ஸ்தாபகரான அமரர்.பசுபதிப்பிள்ளையும், முகாமையாளர்களும் இவ்வித்தியாலயத்தைப் பேணி வளர்ப்பதில் தம்மை அர்ப்பணித்துப் பணியாற்றினர் என்றாலது மிகையல்ல.

அரசு இவ்வித்தியாலயத்தைக் கையேற்றதன் பின்னர் இதன் பௌதீக வளங்கள் பெருகின. மாடிக்கட்டடம் உட்படச் சில கட்டடங்கள் அமைக்கப்பட்டன. பெற்றோர், ஆசிரியர் சங்கத்தின் பெரு முயற்சியால் 8 பரப்புக் காணி வாங்கப்பெற்றுப் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. இவ்வித்தியாலயத்தின் வளர்ச்சிக்குப் பழைய மாணவர் சங்கம் ஆற்றியுள்ள பணிகள் அளப்பரியன.

1925ஆம் ஆண்டில் பேராசிரியர் சி.இ.சதாசிவம்பிள்ளை தலைமையில் உருவான இச்சங்கம் 1951இல் தனது வெள்ளிவிழாவைக் கோலாகலமாக நடத்தியதோடு வெள்ளிவிழா மலர் ஒன்றையும் வெளியிட்டது. பொன்விழா, மணிவிழா, பவளவிழா கண்ட இச்சங்கத்தினரே இன்று வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவையும் நடத்துகின்றனர்.

புங்குடுதீவின் புகழை உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பரப்பிய பெருமை இவ்வித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கே உண்டு. மலேசியாவில் வாழ்ந்த மாணவர்கள் 1925இல் நிதி திரட்டி வெள்ளிப்பிள்ளையார் ஒன்றை அன்பளிப்புச் செய்தமை மறக்க முடியாத நிகழ்வாகும். இவ் வெள்ளிப்பிள்ளையார் இன்றும் அதிபர் அலுவலகத்தில் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார். இவ்வித்தியாலயத்தின் நூலக கட்டடத்தைப் பழைய மாணவரான திரு.நா.சுப்பிரமணியம் தமது தாயார் திருமதி சின்னம்மா நாகலிங்கம் நினைவாக அமைத்துக் கொடுத்துள்ளார். அமரர்.நீ.மு.குமாரசாமி இவ்வித்தியால்யத்தில் உள்ள சிறிய ஆலயத்தைத் தமது செலவில் கட்டிக் கொடுத்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. காலத்துக்குக் காலம், பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் மனமுவந்து இவ்வித்தியாலயத்தின் தேவைகளை நிறைவேற்றி வந்துள்ளனர்.

1990-1995 காலப்பகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வினால் இவ்வித்தியாலயம் பாதிக்கப்பட்டதெனினும் சோதனைகளையும் சாதனைகளாக மாற்றி மீள இயங்க ஆரம்பித்தது. "கல்வி அழகே அழகு" என்னும் மகுட வாசகத்திற்கு ஏற்ப கல்வியளிப்பதையே இலட்சியமாகக் கொண்டு துடிப்புடன் பணியாற்றி வருகிறது. நூற்றாண்டு விழா இதன் வளர்ச்சிக்கு உந்துதலளிப்பதோடு வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகவும் அமையுமென எதிர்பார்க்கிறோம். நூற்றாண்டு விழாக்காணும் இவ்வேளையில் இவ்வித்தியாலயத்திற்கு வருகைதந்த பெருமக்களையும் அருளாளர்கள்ளயும் ஒருகணம் நினைத்துப் பார்த்தல் ஏற்புடையதாகும்.

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர், சுவாமி உருத்திர கோடீஸ்வரர், கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார், சபாநாயகர் சேர்.வை.துரைசுவாமி, சர்வோதய சிரமதான இயக்கத் தலைவர் திரு.ஏ.ரி.ஆரியரத்தினா, இலங்கை வித்தியாதிபதி திரு.எல்.எம்.டி. றொபின்சன்(1940இல்) பிரதிக் கல்வி அதிபதி திரு.கே.எஸ்.அருணந்தி, முகாந்திரம் தி.சதாசிவ ஐயர், பிரதிக் கல்விமா அதிபர் திரு.யூ.டி.ஐ.சிறிசேனா, கல்விப் பணிப்பாளர் திரு.வேஷ்லிங் பெரேரா, கல்வி அமைச்சர்களான ஈ.ஏ.நுகவெல, பி.ஜி.பி. கலுகல்ல ஆகியோர் இவ்வித்தியாலயத்தைத் தரிசித்து வாழ்த்திச் சென்றமை நினைவைவிட்டு நீங்கா நிகழ்வுகளாகும்.

கற்றோரும் மற்றோரும் போற்றிடும் கணேச வித்தியாலயம் இன்று (03.03.2010) தனது நூற்றாண்டு விழாவைக் "கணேச சங்கமம்" என்னும் பெயரில் நடத்துவதோடு 'கணேச தீபம்" என்னும் நூற்றாண்டு மலரையும் வெளியிடுகிறது. தமிழகத்தின் பிரபல பேச்சாளர் சொல்வேந்தர் சுகி சிவம் இவ்விழாவில் கலந்து கொண்டு பேருரையாற்றுகிறார். புங்குடுதீவு கண்ணகியம்மன் ஆலய முன்றலில் 1954 சித்திரைத் திங்களில் நடைபெற்ற சிலப்பதிகார விழாவையடுத்து நிகழும் பெரு விழாவாக இந்நூற்றாண்டு விழா அமைகிறது.



மதிவதனன்-ஜெயச்சித்திரா சகோதரர்களின் 15ஆவது ஆண்டு ஞாபகார்த்தமாக நடைபெற்ற கரம், மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் வியாழக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மத்தியகல்லூரி அதிபர் எல்.ஓங்காரமூர்த்தி உரையாற்றுவதை முதலாவது படத்திலும்,பெண்களுக்கான மேசைப்பந்தாட்ட ஒற்றைப் பிரிவில் இறுதியாட்டத்தின் போது வீராங்கனைகள் மோதிக்கொள்ளுவதை இரண்டாவது படத்திலும், ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு மேசைப்பந்தாட்ட போட்டியில் வெற்றிபெற்ற கிங்சிலி, செல்வின் ஆகியோருக்கு பிரதம விருந்தினர் வெற்றிக்கிண்ணத்தினை வழங்குவதினை மூன்றாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: தமிழினியன்)*

# தெல்லிப்பழைப் பிரதேச செயலக எல்லேப் போட்டி அளவெட்டி பாரதிதாசன் அணிவசம் வெற்றிக்கிண்ணம்

வலி.வடக்கு.மார்ச் 2

தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையேயான பெண்களுக்கான எல்லே போட்டியில் அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை கலையொளி விளையாட்டுக் கழகமும், அளவெட்டி பாரதிதாசன் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய பாரதிதாசன் விளையாட்டுக்கழக வீராங்கனைகள் 02 ஓட்டங்களைப் பெற்று அனைவரும் ஆட்டமிழந்தனர்.

03 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கலையொளி விளையாட்டுக் கழக வீராங்கனைகள் ஒரு ஓட்டத்தைப் பெற்ற நிலையில் அனைவரும் ஆட்டமிழந்தனர்.

ஆட்டநிறைவில் பாரதிதாசன் விளையாட்டுக் கழகம் 02:01 ஓட்டங்கள் என்ற அடிப்படையில் கலையொளி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி பிரதேச செயலகச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(04-86)

# இளம் பயிற்றுநர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

12வயதிற்குட்பட்ட இளம் பயிற்றுநர்களுக்கான கிரிக்கெட் பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் சனி, ஞாயிறுக் கிழமைகளில் இல 310, நாவலர் வீதியில் உள்ள கிரிக்கெட் அக்கடமியில் இடம்பெறவுள்ளது.

இந்தப்பயிற்சி வகுப்பில் பங்குகொள்ள விரும்பும் வீரர்கள் தங்களது பெயர்களை அக்கடமிப் பணிப்பாளர் ரி.ஜெகநாதனிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சிகள் எதிர்வரும் 6ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (04-23)

# கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மத்தி சம்பியன் வென்றது

வலி.வடக்கு.மார்ச் 2

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே முதல் தடவையாக நடத்தப்பட்ட ஆண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

உடுவில் மகளிர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும், இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை கூடைப்பந்தாட்டத்திடலில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகத்தின் கையே ஓங்கியிருந்தது.

முதல் பாதியாட்டத்தில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் 19:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம் பாதியாட்டத்திலும் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் 14:09 புள்ளிகள் என்ற அடிப்படையில் தொடர்ந்து முன்னிலை வகித்தது.

ஆட்ட நிறைவில் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகம் 33:21 புள்ளிகள் என்ற அடிப்படையில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகத்தை வென்று பிரதேச செயலக சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(04-86)



சண்டிலிப்பாய் கோட்டமட்ட 19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க பாடசாலை 2 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. பயிற்றுநர், பாடசாலை அதிபர்கள்,விளையாட்டுப் பொறுப்பாசிரியர்கள் மற்றும் வீராங்கனைகளைப் படத்தில் காணலாம்.

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்க விளையாட்டு நிகழ்வு முடிவுகள்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அங்கத்தவர்களுக்கு இடையே இடம் பெற்ற விளையாட்டுப் போட்டியில் வெற்றி யீட்டியவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளது. அவை வருமாறு:

**சிறுவர் விளையாட்டு- பந்துவீசுதல்**

அ.அஜீவன் (1ஆம் இடம்- ஆக்பாடசாலை), சி.அஜன் (2ஆம் இடம்-சிவபூமி பாடசாலை), ந.கனிஸ்ரன் (3ஆம் இடம்-வாழ்வகம்).

**சிறுவர் விளையாட்டு- தண்ணீர் ஊற்றுதல்**

இ.சதீஸ் (1ஆம் இடம்-சிவபூமி பாடசாலை), கு.மோனவாணி (2ஆம் இடம்-ஆக்பாடசாலை), சி.அஜன் (3ஆம் இடம்-சிவபூமி பாடசாலை).

**சிறுவர் விளையாட்டு- பலூன் உடைத்தல்**

ஜெ.வசந்தகுமார் (1ஆம் இடம்- வாழ்வகம்),ஜெ.லோகேஸ்வரி (2ஆம் இடம்-வாழ்வகம்), பே.ரஜீவன் (3ஆம் இடம்-ஆக் பாடசாலை).

**சிறுவர் விளையாட்டு -பழம் பொறுக்குதல்**

அ.சுலக்சனா (1ஆம் இடம்-ஆக் பாடசாலை), அ.சண்முகப்பிரியன் (2ஆம் இடம்-ஆக்பாடசாலை), ஜெ.தமிழரசி (3ஆம் இடம்-வாழ்வகம்).

**துவிச்சக்கரவண்டி ஓட்டம்-ஆண்கள் 'ஏ' பிரிவு**

சி.துஷந்தன் (1ஆம் இடம்-சிவபூமி பாட சாலை), ம.குமரரூபன் (2ஆம் இடம்-சிவ பூமி பாடசாலை), எஸ்.தனுஷன் (3 ஆம் இடம்-சிவபூமி பாடசாலை).

**பிரிவு- 'பி'**

டி.தீபன் (1ஆம் இடம்-கொக்குவில்), ஏ.குணசிங்கம் (2ஆம் இடம்-யாழ்ப்பாணம்).

**துவிச்சக்கரவண்டி ஓட்டம்- பெண்கள்'ஏ' பிரிவு**

இ.கிரிஜா (1ஆம் இடம்-AROD), வ.கஜேந்தினி (2 ஆம் இடம்-AROD), ஜி.பிரிஜா (3ஆம் இடம்-AROD).

**துவிச்சக்கரவண்டி ஓட்டம் 'பி' பிரிவு**

கே.கல்ப்பனா (1ஆம் இடம்-AROD), எஸ்.கவிதா (2ஆம் இடம்-AROD).

**முச்சக்கரவண்டி ஓட்டம்- ஆண்கள்**

எஸ்.மோகன்ராஜ் (1ஆம் இடம்- யாழ்ப்பாணம்), க.நாகராஜா (2ஆம் இடம்-AROD), சி.சிறிஸ்கந்தராஜா (3ஆம் இடம்-கோப்பாய்).

**முச்சக்கரவண்டி ஓட்டம்- பெண்கள்**

ச.பாலகுமாரி (1ஆம் இடம்- AROD), செ.ஜெயராணி (2ஆம் இடம்-சங்கானை), இ.தயாநிதி (3ஆம் இடம்-AROD).

(04-23)

# பாஷையூர் சென்.அன்ரனீஸ் சம்பியன்!

யாழ்ப்பாணம்.மார்ச் 2

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையேயான 40வயதிற்கு மேற்பட்டோருக்காக நடத்தப்பட்ட 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.

குருநகர் சென்.றோக் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் பாஷையூர் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை வெற்றி கொண்டு சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

(04-23)

# நீயா? நானா? பலப்பரீட்சையில் இன்று களத்தில் சென்.பற்றிக்ஸ்-யாழ்ப்பாணக் கல்லூரி அணிகள்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

இராஜன் கதிர்காமர் வெற்றிக் கிண்ணத்திற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

22ஆவது ஆண்டாக நடைபெறவுள்ள இப் போட்டியில் கடந்த வருடம் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வெற்றி பெற்றிருந்தது. இதுவரை நடைபெற்ற 21 போட்டிகளில் யாழ்ப்பாணக் கல்லூரி 6 போட்டிகளிலும், சென்.பற்றிக்ஸ் கல்லூரி 15 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

இந்தவருடம் நடைபெறவுள்ள போட்டியில் எந்த அணி வெற்றி பெறும் என்று எதிர்வு கூற முடியாத நிலையில் இரு அணிகளும் சமபலத்துடன் காணப்படுகின்றன.

இந்த முறை நடைபெற்ற இரண்டு நாள் கொண்ட இனிங்ஸ் போட்டி சமநிலையில் நிறைவுபெற்ற போதிலிலும் முதல் இனிங்ஸில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி முன்னிலை பெற்றதன் அடிப்படையில் அருட்தந்தை ரி.எம்.எப்.லோங் வெற்றிக் கிண்ணத்தை சென்.பற்றிக்ஸ் கல்லூரி தனதாக்கிக் கொண்டது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியின் பி.நவநீதன் தலைமையிலும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியினர் ந.ஸ்ரீகுகன் தலைமையிலும் களமிறங்கவுள்ளார்கள்.

இந்த வருடம் நடைபெற்ற இனிங்ஸ் போட்டியில் இரண்டு புதிய சாதனைகளை சென்.பற்றிக்ஸ் கல்லூரி ஏற்படுத்தியுள்ளது. இந்தவகையில் ஒரு நாள் போட்டியில் எந்தக் கல்லூரி சாதனைகளை ஏற்படுத்தும் அல்லது முறியடிக்கும் என்பது இன்று மாலை தெரியவரும்.

(04-86)





# ஆளுநர் வெற்றிக்கிண்ணச் சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

கல்வி வலயங்களுக்கு இடையிலான 19வயதுப் பிரிவினருக்கான ஆளுநர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள் மார்ச் மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான சகல ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

(04-23)



யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் கடந்தவாரம் நடைபெற்ற வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் மாணவர்கள் உடற் பயிற்சிக் கண்காட்சியில் ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம். *(படம்: நந்தன்)*


## யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கிக் கிளைகள் மத்திய மற்றும் கணனி வலையமைப்பிற்குள்

யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள எமது வாடிக்கையாளர்களின் வங்கி நடவடிக்கைகளை மேலும் இலகுவாக்குவதற்காக அப்பிரதேசத்திலுள்ள அனைத்து கிளைகள் மற்றும் சேவை நிலையங்களை எமது மத்திய மற்றும் கணனி வலையமைப்பிற்குள் உட்படுத்தல் மிக வேகமாக நடைபெற்று வருகின்றது.

இதன் மூலம் முழு அளவிலான வங்கிச் சேவைகள் பலவற்றினை உங்களுக்கு வழங்கப்படும் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

விளம்பர வரணம்

★ நாடெங்கிலும் உள்ள 650 இற்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களுடன் உடனடியாகத் தொடர்புபடுத்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் சேவை.
★ மத்திய வங்கிச் சேவை மூலம் வேண்டியதொரு கிளையில் பணத்தை வைப்பிடும் மற்றும் மீளப்பெறும் வசதி.
★ சவுதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத், கட்டார், ஓமான் ஆகிய எமது பிரதிநிதிகள் உள்ள நாடுகள் மற்றும் வேண்டியதொரு நாட்டிலிருந்து ஈ.ரெமிடன்ஸ் மற்றும் ஏனைய சேவை மூலம் பணத்தினை உடனடியாக உங்கள் கணக்கிற்குப் பெறும் வசதி.
★ வேண்டியதொரு கிளையில் இருந்து உங்கள் கணக்கிற்குப் பணத்தினைப் பெறும் வசதி, வேண்டியதொரு கிளையில் இருந்து மீளப்பெறும் வசதி.
★ 24 மணிநேர ATM மீளப்பெறல் வசதி.
★ மொபிடல் கையடக்கத்தொலைபேசி பாவனையாளர்களுக்கு SMS வங்கிச் சேவை.

மத்திய மற்றும் கணனி வலையமைப்பிற்குள் உட்படுத்தப்படவுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள்

| கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் | கொடுக்கல் வாங்கல் மட்டுப்படுத்தப்பட்ட திகதியும் நேரமும் (மு.ப. 10.00 முதல்) | A.T.M செயற்படும் நேரம் (மு.ப. 9.00 முதல்) | கிளைகள் புதிய திட்டத்துடன் இணையும் திகதி (மு.ப. 8.00 முதல்) |
|---|---|---|---|
| சுன்னாகம் | 26.02.2010 | 28.02.2010 | 01.03.2010 |
| கோப்பாய் | 26.02.2010 | 28.02.2010 | 01.03.2010 |
| நெல்லியடி | 26.02.2010 | 28.02.2010 | 01.03.2010 |
| பருத்தித்துறை | 26.02.2010 | 28.02.2010 | 01.03.2010 |
| புலோலி | 26.02.2010 | 28.02.2010 | 01.03.2010 |
| கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள் | கொடுக்கல் வாங்கல் மட்டுப்படுத்தப்பட்ட திகதியும் நேரமும் (பகல் 12.00 முதல்) | A.T.M செயற்படும் நேரம் (மு.ப. 9.00 முதல்) | கிளைகள் புதிய திட்டத்துடன் இணையும் திகதி (மு.ப. 8.00 முதல்) |
| கன்னாதிட்டி, யாழ். | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| இணுவில் | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| யாழ். பிரதானவீதி | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| உரம்பிராய் | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |
| அச்சுவேலி | 05.03.2010 | 07.03.2010 | 08.03.2010 |

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு மேற்குறித்த தினங்களில் ஏற்படும் சிரமங்களுக்கு வருத்தத்தைத் தெரிவிப்பதுடன் தாங்கள் எமக்கு வழங்கும் ஒத்துழைப்பிற்கு எமது மனமார்ந்த நன்றியையும் தெரிவிக்கின்றோம்.


## 165 நாடுகளில் இப்போது CIMA கற்கைநெறி

**CIMA Chartered Institute of Management Accountants** ஒரு ஐக் கிய இராட்சிய முடியாட்சியின் **(Royal Charter)** அங்கீகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்ட வணிக முகாமைத்துவக் கணக்காளர் ஒருங்கிணையமாகும்.

இவ் ஒருங்கிணையத்தால் வகுக்கப்பட்ட கணக்காளர் தகைமைக்கான பாடநெறி முறை இன்று சர்வதேச ரீதியில் அங்கீகாரம் பெற்று இலங்கை உட்பட 165 நாடுகளில் பயிற்றப்பட்டு வருகின்றது.

**CIMA** மாணவர்களினதும், முழுத் தகைமை பெற்றவர்களினதும் அங்கத்துவ எண்ணிக்கை சர்வதேச அளவில் சென்ற ஆண்டு 172,000ஐ எட்டியுள்ளது. இலங்கையில் மட்டும் மாணவ அங்கத்தவர்களின் எண்ணிக்கை 13,000 ஆகவும் முழுத் தகைமைபெற்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை 2,500 ஆகவும் உயர்ந்துள்ளது. இலங்கையில் பயின்று தகைமைபெற்ற அங்கத்தவர் இன்று சர்வதேச நாடுகளில் பணிப்பாளர்களாகவும், முகாமையாளர்களாகவும், கணக்காளர்களாகவும் பணி புரிகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**CIMA** தகைமை அவுஸ்திரேலியா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு தகைமை குடியகல்வு **(Skilled Migration)** புள்ளி அடிப்படை விண்ணப்பத்திற்கு வலுவான புள்ளி எண்ணிக்கைகள்ளப் பெற்றுத் தருகின்றது.

இலங்கை அங்கத்தவர்கள் சர்வதேச ரீதியில் இந்நிலையை அடைவதற்குக் காரணமான **CIMA** ஒன்றியத்தின் இலங்கைக் கிளை கடந்த 40 வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி வருகின்றது. கொழும்பிலும் வேறு பிரதான நகரங்களிலும் சுமார் 20 கல்வி நிலையங்கள் **CIMA** பாடநெறியைப் புகட்டி வருகின்றன.

சர்வதேச ரீதியில் வணிகத்துறையில் உண்டாகும் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் அமைய **CIMA** பாடநெறி முறை காலத்திற்குக் காலம் மாற்றியமைக்கப்பட்டு வருகின்றது. இதனால் உலக வணிகவியல் மாற்றங்களிற்கும் சவால்களிற்கும் ஈடுகொடுத்து **CIMA** தகைமையாளர்கள் திறமையாகப் பணி புரிவதற்கு இப்பாடநெறி உறுதுணையாக உள்ளது.

இவ்வகையில் 2010 ஆம் ஆண்டிற்கான மாற்றியமைக்கப்பட்ட புதிய பாடத்திட்டம், ஐந்து நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**1.CERTIFICATE IN BUSINESS ACCOUNTING**
**2.OPERATIONAL LEVEL**
**3.MANAGEMENT LEVEL**
**4.STRATEGIC LEVEL**
**5.TOP CIMA**

ஒவ்வொரு நிலையும் அந்நிலை தகைமையுடையவர்கள் அலுவலகங்களில் அவரவர் தகைமை நிலைக்கேற்ப, கணக்காளர், முகாமையாளர், பணிப்பாளர் என்று படிப்படியாக முன்னேறக்கூடிய வகையில் இப்புதிய பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இது அந்தந்த நிலைகளில் வேலை அனுபவம் பெற்று இறுதிப் பரீட்சை நிலையைப் பூர்த்தி செய்தவுடன் முழுத் தகைமை பெற்ற அங்கத்துவத்தை அடையும் வழிமுறைக்கு அனு கூலமாக உள்ளது.

பரீட்சைத் தகைமையும், வேலை அனுபவமும் பெற்று முழுமை அடைந்த அங்கத்தவர்கள் **Associate Member of the Chartered Institute of Managment Accountants** எனும் தகைமையைக் குறிக்கும். **A.C.M.A** என்ற எழுத்துக்களைத் தங்கள் பெயரின் பின்னால் இணைத்துக் கொள்ளும் தகைமை பெறுகின்றனர். இத் தகைமைத் தரம் **UK** இன் **MBA (Masters in Business Administration)** தகைமைக்கு நிகரான அங்கீகாரம் பெற்றுள்ளது.

ஆரம்பநிலையான **C.B.A Level 16** வயதுடையவர்களுக்கு ஏற்ற முறையில் **G.C.E** உயர்தரத்திற்கு நிகராக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையைக் கல்விப் பொதுத் தராதர சாதாரண நிலையில் சாதாரண தேர்ச்சியுடனேயே தொடங்கக் கூடிய வாய்ப்பு தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இது கணித, உயிரியல்துறை மாணவர்களுக்கும், பாடசாலைக்குப் பின் வேறு தொழில் புரிந்த பின் தற்போது கல்வித் தகைமை பெற விரும்பும் மாணவர்களும் இலகுவாக வணிகவியலைப் புரிந்துகொள்ளும் முறையில்.உருவாக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் **CIMA** இலங்கைக் கிளையில் அங்கீகாரத்தைப்பெற்ற மற்றொரு நிறுவனமான **Spectra School of Business** இல் **CIMA** பாடநெறி வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

# மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மஹிந்த வெல்வது இலகுவானதல்ல

## 'ரொய்ட்டர்ஸ்' சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 2

வரும் ஏப்ரல் மாதம் எட்டாம் திகதி நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெறுவதற்கு இலங்கை அரசு திட்டமிட்டுள்ளது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும் பான்மையை மஹிந்த வெல்வது இலகுவானதல்ல என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி சேவை சுட்டிக்காட்டியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்த எதிர்க்கட்சிகளின் கூட்டணிகளுக்குள் தற்போது பிளவுகள் தோன்றியுள்ளன. பொதுத்தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறுகின்றனர்.

எதிர்க்கட்சிகளின் இந்தப் பிரிவினை மஹிந்த ராஜபக்ஷவுக்கு அனுகூலங்களை ஏற்படுத்தலாம். அவர் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எதிர்பார்க்கிறார். இலங்கையின் அரசியல் சட்டங்களை மாற்றுவதற்கும், புதியவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், அதன் மூலம் வெளிநாட்டு முதலீடுகளை பெறவும் அரசுக்கு இந்த பெரும்பான்மை அவசியம்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜனதா விமுக்தி பெரமுனை ஆகிய இரு கட்சிகளும் பிரதான எதிர்க்கட்சிகள். அவை இரண்டும் தமக்குள் உள்ள வேற்றுமைகளை விடுத்து அரச தலைவர் தேர்தலில் பொன்சேகாவை ஆதரித்திருந்தன.

எனினும் அவர் 18 லட்சம் வாக்குகளால் தோல்வி கண்டிருந்தார். மஹிந்த முறைகேடான வெற்றியை பெற்றார் எனக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. எதிர்க்கட்சிகளின் பிரிவினைக்கு கொள்கைகளே காரணம் என ஐ.தே.கவின் கொழும்பு மாவட்டத் தலைவர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும் பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை மகிந்த வெல்வது இலகுவானதல்ல என அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் எதிர்க்கட்சிகளின் பிரிவினைகள் அவருக்கு தேர்தல் அனுகூலமாக அமையலாம் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் 40 பில்லியன் டொலர் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்கு உறுதியான நாடாளுமன்றம் அவசியமானது.

இதேவேளை, இலங்கைக்கான 2.6 பில்லியன் டொலர் உதவித் தொகையை தாமதப்படுத்தப் போவதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழியின் பிரகாரம் நாடாளுமன்ற தேர்தல் நிறைவுபெற்று புதிய வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் வரையிலும் அதனை தாமதப்படுத்தப் போவதாக நாணய நிதியம் மேலும் தெரிவித்துள்ளது - என்றுள்ளது. (அ-சி)

# பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாட்டுக்காக ஐ.நா. சபையுடன் இணைந்து பத்தாண்டுத் திட்டம்

பதுளை,மார்ச் 2

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் மேம்பாடுகளைக் கருத்திற்கொண்டு, ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை அரசு இணைந்து பத்தாண்டு அபிவிருத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. இதனடிப்படையில் பெருந் தோட்டங்களில் முன்பள்ளிகளை அமைத்தல் மற்றும் வீட்டுரிமை, நிலவுரிமை ஆகியன தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றது என பி.எஸ். எஸ். எப்.அமைப்பின் தலைவர் ஒ.ஏ. இராமையா பதுளையில் நடைபெற்ற செயலமர்வொன்றில் தெரிவித்தார்.

பி. எஸ்.எஸ்.எப். செயலாளர் வி. அந்தணீஸ் தலைமையில் பதுளை டுவரிஸ்ட் விடுதியில் கடந்த 27 ஆம் திகதி பெருந்தோட்டத்துறை சமூக மாமன்ற செயற்பாடுகள் மற்றும் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து தெளிவுபடுத்தும் வகையில் இச்செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அவர் அங்கு தொடர்ந்து பேசும்போது தெரிவித்தவை வருமாறு:-

இந்த வேலைத்திட்டத்தின் அடிப்படையில், பெருந்தோட்டப்பகுதிகளின் மனிதவள அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் அந்நிதியத்திற்கு பெருந்தொகை நிதி ஒதுக்கப்பட்டு தோட்டப்பகுதியில் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனினும், ஒதுக்கப்படும் நிதியில் 50 வீதமான நிதி, நிதிய அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் மேம்பாடுகளுக்கே செலவு செய்யப்படுகின்றது. நிதியத்தின் தலைமை அதிகாரியொருவருக்கு மட்டும் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா மாதச் சம்பளமாக வழங்கப் பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டியது.

பெருந்தோட்டங்கள், தனியார் மயப்படுத்தப்பட்டதும், இலங்கை பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் 21 பெருந்தோட்டக் கம்பனிகள் சார்பிலும் இ.தொ.கா, இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம், பெருந் தோட்டத் தொழிற் சங்க கூட்டமைப்பு ஆகிய தொழிற் சங்கங்கள் சார்பிலும் 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தொழிலாளர்களின் வேதனம் மற்றும் ஏனைய மேம்பாட்டு விடங்கள் தொடர்பான கூட்டு ஒப்பந்தத் தில் கைச் சாத்திட்டன. கடந்த செப்டெம்பரில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும் அதற்குமுன் 2009 ஏப்ரல் முத லாம் திகதி முதல் கூட்டு ஒப்பந்தம் அமு லுக்கு வரும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அதன் பிரகாரம் தொழிலாளரொருவரின் அடிப்படை தினச்சம்பளம் 285 ரூபாவாகும். இச்சம்பளம் தேயிலை மற்றும் றப்பர் தோட்டங்களின் தொழிலாளர்கள் அனைவருக்குமே உரித்தானதாகும். அத்துடன், ஏனைய சட்ட ரீதியிலான கொடுப்பனவுகளும், அடிப்படைச் சம்பளத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும். இதற்கு முன்பு தொழிலாளியொருவரின் தினச்சம்பளம் 200 ரூபா என்ற அடிப்படையிலேயே இருந்து வந்தது. தற்போது இத்தொகை 40 வீதத்தினால் அதிகரிக்கப்பட்டிருக்கின்றது என்றார். (ளி)

# மலையக மக்கள் முன்னணிக்கு தேசியப்பட்டியலில் இடமில்லை

கொழும்பு,மார்ச் 2

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் மலையக மக்கள் முன்னணிக்கு இடம் ஒதுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த தேசியப்பட்டியலில் முத்துசிவலிங்கம், எஸ்.ஜெகதீஸ்வரன், முரளிரன், எஸ்.சண்முகநாதன் ஆகிய தமிழர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

எனினும், நுவரெலியா, பதுளை ஆகிய மாவட்டங்களைத் தவிர ஏனைய மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ள மலையக மக்கள் முன்னணிக்கு இந்தக் கூட்டமைப்பின் தேசியப்பட்டியலில் இடம் ஒதுக்கப்படாமை குறித்து கட்சி ஆதரவாளர்கள் பலர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணி நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களில் தனித்து மண்வெட்டிச்சின்னத்தில் போட்டியிடுகின்றமை தெரிந்ததே.

2001 ஆம், 2004 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் தேசியப்பட்டியலில் மலையக மக்கள் முன்னணிக்கு ஓரிடம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ளி)

# இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் விவரம்

இத்தினபுரி, மார்ச் 2

இரத்தினபுரி மாவட்டத்தில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் பொருட்டு 15 கட்சிகளும், 11 சுயாதீனக் குழுக்களுமாக மொத்தம் 26 அணிகளில் 338 பேர் போட்டியிடுகின்றனர்.

இவர்களில் 10 பேர் தமிழர்களும், 07 பேர் முஸ்லிம்களுமாக மொத்தம் 17 பேர் சிறு பான்மையினத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இரு பிரதான கட்சிகளான ஐ.தே.க., ஐ.ம.சு.கூட்டமைப்பு என்பனவற்றில் இம்முறை முஸ்லிம்கள் எவரும் போட்டியிடவில்லை. எனினும், இக்கட்சிகளில் தலா ஒருவர் என்ற அடிப்படையில் இரு தமிழர்கள் போட்டியிடுகின்றனர். மாவட்டத்தில் போட்டியிடும் தமிழர்கள் பெயர் விவரம் வருமாறு:-

ஏ.எம்.பி.இராஜன் (ஐ.ம.சு.கூ.), எம்.சந்திரகுமார்(ஐ.தே.க.), செல்வராஜா பாலச் சந்திரன் (சுயாதீன கட்சி), எஸ்.அருள்ராஜா (ஜனநாயகதேசியக் கூட்டமைப்பு), கே. கணபதிபிள்ளை (இடதுசாரி விடுதலை முன் னணி), எம்.தங்கவேல் (இடதுசாரி விடுதலை முன்னணி), பி.சந்திரகலா (இடதுசாரி விடுதலை முன்னணி, ஆர்.சுரேஸ் (இலங்கைத் தொழிலாளர் கட்சி), செல்லின் ராஜேந்திரன் (ஐக்கிய தேசிய மாற்று முன்னணி), ஆறுமுகம் மாடய்யா ஐக்கிய சமாஜ வாதி கட்சி),

இம்மாவட்டத்தில் போட்டியிடும் முஸ்லிம் களின் பெயர் விவரங்கள்:-

மொஹமட்கவுஸ் ( சுயாதீனம் -2), எம். எஸ். எம். கமர்தீன் (ஜனநாயக தேசிய கூட்டமைப்பு), எம்.எஸ். எம். நயிஸர் (இடதுசாரி விடுதலை முன்னணி), எஸ்.எம்.அனிபா (தேசிய அபிவிருத்தி முன்னணி), மொஹமட்றிபார் (தேசிய அபிவிருத்தி முன்னணி), எம்.கே.ரிசான் (தேசிய அபிவிருத்தி முன்னணி),மொஹமட் சஜாத் (தேசிய அபிவித்தி முன்னணி),

இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிடும் கட்சிகளின் பெயர் விவரங்கள்:-

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய இலங்கை மகா சபை, ஐக்கிய சமாஜவாதி கட்சி, ஜனசெத்த முன்னணி, தேசிய அபிவிருத்தி முன்னணி, ஐக்கிய தேசிய மாற்று முன்னணி, இலங்கை தொழிலாளர் கட்சி, தேசபிரேமி தேசிய முன்னணி, சிங்கள மகா சம்மத்த பூமி புத்திரகட்சி, இடதுசாரி விடுதலை முன்னணி, எமது (அப்பே) தேசிய முன்னணி, ஜனநாயக தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய ஜனநாயக முன்னணி என்பவையாகும்.

சுயாதீனக் குழுக்களின் விவரம்:-

லக்ஸ்மன் ஜயசிங்க, பிரியந்த ரனசிங்க, புத்திக்க பிரியதர்ஷன, திஸ்ஸ அத்துக்கோரள, எரிமான வர்ணதுங்க, ஜயசேன பெரேரா, ஆராச்சி சந்திரசோம, மஞ்சுல சேனாதீர, சரத்குமார, ரி.கே.சரத்துமார, ஜீ.கே. அரிச்சந்திர ஆகியோர் தலைமையிலான 12 குழுக்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர். எனினும், சரத்குமார தலைமையிலான சயாதீன குழு நிராகரிக்கப்பட்டது. இதன்படி, 11 சுயாதீன குழுக்களே களத்தில் உள்ளன. (ளி)




# மாகாணசபை எதிரணித் தலைவருக்கு விளக்கமறியல்

பதுளை, மார்ச் 2

ஊவா மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் உபாலி சமரவீரவை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வெலிமடை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தினத்தன்று ஊவா - பரணகம அபகஸ்தோவ ஜனா திபதி வித்தியாலயத்துக்கு அருகாமையில் வைத்து இரு குழுக்களுக்கிடையே இடம்பெற்ற கருத்து முரண்பாட்டின்போது வானத்தை நோக்கித் துப்பாக்கிப் பிர யோகம் செய்து பொதுமக்களை பயமுறுத்தியமை மற்றும் சட்டவிரோதமான முறையில் துப்பாக்கி ஒன்றைப் பயன்படுத்தியமை போன்ற விடயங்கள் தொடர்பில் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் (ஐ.தே.க.) 24 ஆம் திகதி காலை ஊவா - பரணகம பொலிஸ் நிலையத்தில் சட்டத் தரணியுடன் சரணடைந்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து ஊவா - பரணகம பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.எ. எம். ராஜபக்ஷவினால் வெலிமட நீதிமன்றத்தில் உடனடியாக அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

இதன்போது நீதிவான் பிரபாத் துமிந்த முதுன்கொட்டுவ, ஊவா மாகாணசபை எதிர்க்கட்சித் தலைவர் உபாலி சமர வீரவை எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவு பிறப்பித்தார். பிரதிவாதி சார்பில் அவரது சட்டத்தரணி நந்தா ஏக்கநாயக்க சமுகமளித்திருந்தார். (ளி)

# பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கும் லிந்துல அரசினர் வைத்தியசாலை

## நகரசபைக் கூட்டத்தில் ஆட்சேபம்

தலவாக்கலை- லிந்துலை நகரசபைக்குட்பட்ட லிந்துலை அரசினர் வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் நிலவுகின்றன. இதனால் இந்த வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறசெல்லும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர் என நகரசபை உறுப்பினர் கே. சுப்பையா தெரிவித்தார்.

தலவாக்கலை - லிந்துலை நகரசபையில் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நகரசபையின் தலைவர் எவ். உதயக்குமார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

வைத்தியசாலை சுமார் 70 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. இந்த வைத்தியசாலைக்கு வட்டகொடை, தலவாக்கலை, மெராயா, நாகசேனை போன்ற பிரதேசங்களிலிருந்து பெருந்தொகையான நோயாளர்கள் தினந்தோறும் சிகிச்சை பெற வருகின்றனர்.

வைத்தியசாலையில் தேவையான. மருந்துகள் இல்லாமையினால் நோயாளர்கள் வெளியில் பணத்தை செலவழித்து மருந்துகளை வாங்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லை.

எனவே, நகரசபைத் தலைவர் இவ்விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்தி இதற்குத் தேவையான மருந்துகள் கிடைப்பதற்கு வழிசமைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ளி)



ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பு பதுளையில் வெள்ளிக்கிழமை தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்திருந்தது. மனுத் தாக்கலுக்கு வருகை தந்திருந்த கூட்டமைப்பு முக்கியஸ்தர்களையும், அதன் பின்னர் வருகை தந்த பிரதி சுகாதார முன்னாள் அமைச்சர் வடிவேல் சுரேஷையும் படங்களில் காணலாம்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?


## தருபவர்: வித்யா

### மேடம்

குடும்ப உறுப்பினர்கள் சிலரை விமர்சனம் செய்து அவர்களின் கோபத்திற்கு ஆளாகலாம். சோர்வு, சோம்பல் ஆட்கொள்ளும். வியாபாரிகள் வழக்கத்திற்கு மாறாக கூடுதல் வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். சில காரியங்களில் வேண்டா வெறுப்பாக ஈடுபடலாம். உடல் நலமில்லாமல் இருக்கும் ஒருவரை பார்க்க நேரிடலாம்.


**இடபம்** சக ஊழியர்கள், நண்பர்கள் வியக்கும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். மாமன், மைத்துனர்களின் கோரிக்கை ஒன்றை நிறைவேற்ற முடியாமல் தள்ளி வைக்கலாம். பயணங்கள் மகிழ்ச்சி தருவதாக அமையும். நண்பர் ஒருவரின் ஆலோசனை கேட்டு நடப்பதன் மூலம் சில விடயங்களில் ஆதாயம் பெறலாம்.


**மிதுனம்** மலைபோல் குவிந்த வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செயற்பட்டு முடிப்பீர்கள். வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம். அரசு தொடர்பான காரியங்கள் அலைச்சல்களுக்குப் பின் முடிவுக்கு வரும். கொடுக்கல் வாங்கல்களில் மனஸ்தாபம் வராமல் இருக்க எச்சரிக்கையோடு செயற்பட வேண்டும். மதிப்பு, மரியாதை கூடும்.

### கடகம்

தாய் வழியில் கணிசமான செலவுகளைச் சந்திக்கலாம். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்படும் சிலரால் கோபம் அடையலாம். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளலாம். மனைவி உடல் நலன் தொடர்பான விடயங்களில் அக்கறை அவசியம். அயலவர் விவகாரங் களில் தலையிட வேண்டாம்.


**சிங்கம்** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பிள்ளைகள் வழியில் சந்தோஷம் தரும் நிகழ்ச்சிகள் நடக்கலாம். அரசியல் தொடர்புடையவர்கள் பரபரப்பாகச் செயற்பட நேரிடலாம். கூட்டுத் தொழிலில் சிறப்பான சூழ்நிலை காணப்படும். குடும்ப விவகாரங்களில் முக்கிய முடிவுகள் எடுக்கும் போது பெரியவர்கள் யோசனை கேட்பது அவசியம்.

### கன்னி

தொழில் ரீதியாகச் சிலர் உங்களின் உதவிகள் நாடி வரலாம். உடன் பிறப்புக்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பதைத் தவிர்க்கவும். சக ஊழியர்கள் சிலரிடம் கோபமாக, வேகமாக பேசலாம். அவசரமாக முடிக்க வேண் டிய சில வேலைகளால் அவதிகளுக்கு ஆள்படலாம். நண்பர் கள் உதவி கிட்டும்.

### துலாம்

தொட்ட காரியங்கள் துளிர்விட்டு வளரும் நாள். வழக்கு விவகாரங்களில் திருப்பங்களைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்களின் ஆசைகளைக் கேட்டு அதை நிவர்த்தி செய்வீர்கள். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் சுமுகமான முடிவுக்கு வரும். கவர்ச்சிகரமான ஆடை, அலங்காரப் பொருள்கள் அணிவதில் நாட்டம் செல்லும்.

### விருச்சிகம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நாள். ஆரம்பத்தில் தாமதமாக துவங்கிய சில வேலைகள் பின்னர் விறுவிறுப்பாக முடிவுக்கு வரும். பதவி உயர்வு வாய்ப்புகள் சாதகமாக அமையலாம். பல நாள்களாக எதிர்பார்த்த பணவரவுகள் இன்று கைக்கு கிடைக்கும். சுய தொழில்புரிவோர் உற்சாகமாகச் செயற்படுவர்.

### தனுசு

நீண்ட துாரப் பயணங்களால் செலவுகள், அலைச்சல்களைச் சந்திக்கலாம். பெரிய அளவில் எதிர்பார்த்த ஒரு விஷயம் பசுபசுத்துப் போகலாம். சக ஊழியர்கள் சிலர் உங்களைப் பார்த்து பொறாமைப்படும் வகையிலான சம்பவங்கள் நடக்கலாம். முடிந்து விட்டதாக நினைத்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கலாம்.

### மகரம்

இறைவழிபாட்டின் மூலம் இன்பம் பெற வேண்டிய நாள். துவங்கிய சில வேலைகளில் ஏற்படும் தடை, தாமதங்களால் அவற்றைப் பாதியில் விட்டுவிடலாம்.

பிறருக்காக ஜாமீன் கொடுக்க வேண்டாம். நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம். அலைச்சல் உண்டு.

### கும்பம்

கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறக்கும் நாள். கடுமையாக இழுத்தடிக்கும் என நினைத்த வேலை ஒன்று விரைவில் முடிந்து விடலாம். நெடுநாள்களாக வராமல் இருந்த பாக்கி ஒன்றை சாமர்த்தியமாகப் பேசி வசூலிப்பீர்கள். தாய் வழி உறவுகள் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி, பாசம், நேசம் அதிகரிக்கும்.

### மீனம்

புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். புண்ணிய தலங்களுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கலாம். வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். தந்தை வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்க வாய்ப்பு உண்டு. ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறி அன்பாக நடந்து கொள்வர். கனவுகள் நனவாகலாம்.

## வாட்டியெருக்கும் வறட்சியால் வெப்பநோய்கள் பரவுகின்றன

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ்.குடாநாட்டில் வெப்பநோய்களின் தாக்கம் கடந்த சில தினங்களாக அதிகரித்துக் காணப்படுகின்றன. தற்போதை கடும் வறட்சி, வெப்பம் என்பவற்றின் காரணமாகவே மக்கள் இத்தகைய வெப்ப நோய்களுக்கு இலக்காவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அம்மைநோய், தடிமல், தலையிடி, காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அண்மைய நாள்களாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இதனால் யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் இந்நோய்க்கு இலக்காகி சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிந்தது. (04-224)



## உபநயன அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான விரோதி வருடம் மாசித் திங்கள் 19 ஆம் நாள் (03.03.2010) புதன்கிழமை திருதியை திதியும், அத்த நட்சத்திரமும், சித்த யோகமும் கூடிய சுபதினத்தில் காலை 8.52 மணிமுதல் 9.57 மணிவரையுள்ள மேட லக்கின சுபமுகூர்த்த வேளையில்

சிவஸ்ரீ பொ.சிவசாமிக்குருக்கள் இராஜம்மா தம்பதிகளின் பௌத்திரனும்

சிவஸ்ரீ சொ.இரத்தினசபாபதிக் குருக்கள் சம்பூர்ணவல்லி தம்பதிகளின் தௌஹித்திரனும்

எமது புத்திரனுமாகிய

**பா.புருசோத்தம சர்மா**

அவர்களுக்கு

யக்ஞோபவீததாரண, பிரம்மோபதேச வைபவம் நடைபெற அருள்மிகு சந்திரசேகரப் பிள்ளையாரினதும், பூர்ண, புட்கலா சமேத ஐயப்பனினதும், கைலாய வளவு சிவஞான வைரவர் திருவருள் துணைகொண்டு எமது இல்லத்தில் நிகழவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வனை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

(95166)

நிரந்தர முகவரி: தையிட்டி, காங்கேசன்துறை.

தற்காலிக முகவரி: ஐயனார் கோயிலடி, சுன்னாகம்.

உபநயன குழு: சிவஞானபாஸ்கரன், தா.மகாதேவக் குருக்கள், தர்மசாஸ்தா குருகுல அதிபர் (இணுவில்)

தங்கள் நல்வரவை நாடும்
சிவஸ்ரீ சி.பாலபாஸ்கரக் குருக்கள்
கோமளா தம்பதிகள்
தொ.பே: 0213002347

## மரண அறிவித்தல்



## முதலி உதயகுமார் (லண்டன்)

நாவற்காடு வரணியைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட முதலி உதயகுமார் லண்டனில் காலமானார்.

அன்னார் முதலி காலஞ்சென்ற இரத்தினம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், சதாசிவம் (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)- தங்கமணி தம்பதியரின் அன்பு மருமகனும், நித்திலவதியின் (சுகந்தி) அன்புக் கணவரும், பிரியதர்சினி (கொழும்பு), பிரியதர்சன் (லண்டன்), பிரபாஜி, பிரியங்கன் (கொழும்பு விவேகானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி (ஆசிரியை, யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை), உமாபதி, சிறீதரன், கெங்காதரன், கோகிலாதரன், பிருந்தாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற நா.ரவிச்சந்திரன் (ஆசிரியர்) மற்றும் மதுரநாயகம்பிள்ளை (மோகன்-சவுதி) ஆகியோரின் அன்புச் சகலனும் துர்த்திகா, பாகித்யா ஆகியோரின் ஆசையப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் லண்டனில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்காடு,
வரணி.

(95469)

தகவல்:
குடும்பத்தினர்.

# உணர்ச்சியின் மீதான அரசியலை

விரும்பிய தெரிவொன்று கிடைக்கப்பெறாதவிடத்து



மாவை சேனாதிராஜா

இருக்கின்ற தெரிவொன்றிற்கு எம்மை தயார்ப்படுத்தி அதன் வழி ஒவ்வுதல் என்பதை தனிமனித வாழ்வியலிற்கு பயன்படுத்தும் நாம், எமது விடுதலை மையப் பொருளையொட்டிய விவகாரத்தில் மாத்திரம் ஒரு தீர்வென்று வரும் போது எமக்கே பிடிக்காத பல பல முகமூடிகளை அணிவதற்குத் தயாராகி நிற்கின்றோம்.

தேசம் விட்டு தேசம் புலம்பெயர வேண்டுமென்ற போது ஏதோ ஒரு நபரின் அல்லது ஏதோ ஒரு தேசத்தினால் தனது குடிமகனிற்கு வழங்கப்பட்ட கடவுச் சீட்டை உருமாற்றம் செய்து, கச்சிதமாகப் பயன்படுத்தி மேற்கத்தையத் தேசத்தை வந்தடைவதற்காக நாங்கள் எங்கள் நேர்மை, உண்மை, சுயகட்டுப்பாடு எனப் பல பல விடயங்களைத் தியாகம் செய்கின்றமையை எந்தவித குற்றவுணர்வுமில்லாமல் இருக்கின்ற ஒரே தெரிவு என்று எடுத்துக் கொண்ட நாங்கள், இப்போது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு யதார்த்தத்தைக் கதைக்க - விவாதிக்க - சுயபரிசோதனைக்கு உட்பட - முயல்கின்ற போது மாத்திரம் ஏதோ ஒரு விதத்தில் அதைக் குறைகூறிக் குற்றங்காணும் ஒரு செயலாக மாற்ற முனைகிறோமோ தவிர, அவர்கள் தெரிவிக்க வரும் கருத்தை - அவர்களின் நிலைமையை- ஏறெடுத்துப்பார்க்கும் ஒரு நியாயத்தன்மையை விட்டொழித்துச் செல்கின்றோம்.

மே 18 ஆம் திகதிக்குப் பின்னான காலம், எங்கே புலம்பெயர்ந்த தமிழர்களிற்கும் ஈழத்தழிழர்களிற்குமான இடைவெளியாக அமைந்து விடுமோ என்று நாம் கொண்ட அச்சத்திற்கும் மேலாக ஒரு புரிந்துணர்வற்ற நிலைப்பாட்டை, தமிழ்த்தேசிய வாதிகள் என்று கூறும் புலம்பெயர்ந்த செயற்பாட்டாளர்களிற்கும் ஈழத்தமிழினத்திற்குமிடையே ஏற்படுத்திச் சென்றிருக்கிறது.



இரா. சம்பந்தர்

அதிலும் களத்திலே எஞ்சி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் போக்குத் தவறாக இருந்தால் அங்கேயுள்ள மக்களின் வாக்குப்பலம் அதற்கு தகுந்த தீர்வு புகட்டும் என்பதை மறுத்து - மறந்து - புலம்பெயர்ந்த தேசத்தில் தேசியத்தின் பெயரால் வாழ்பவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குத் துரோகப்பட்டம் கொடுக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இது உண்மையிலேயே இரண்டாவது முள்ளிவாய்க்கால். ஏனென்றால் விடுதலைப்புலிகள் என்ற பிரமை மற்றும் மாயைப் பிம்பத்தில் வாழுதல் என்ற நிலைப்பாட்டில் இருந்து இறங்கி வந்து, கள யதார்த்தத்திற்கு இயைபாக சமரசம் செய்ய முடியாத அல்லது தற்போதைய உலக ஒழுங்கிற்கு அமைவான ஈழத்தமிழ் மக்களிற்கு ஏற்ப ஒரு தீர்வை ஜீரணிக்க முடியாத புலம்பெயர்ந்த தமிழ்த் தேசியவாதிகள் கணனிசார் தமிழ் ஊடக உலகால் ஏற்படுத்த முயலும் பதற்றம் அவர்கள் எமது தற்போதைய தலைமையான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அழிக்க நிற்கின்றார்கள் என்பதைத் தவிர வேறு எதையுமே எமக்குப் புலப்படுத்தவில்லை. ஏனெனில் இன்று எல்லோருமே ஏற்றுக்கொள்கின்ற மே 18, 2009 எமக்கு அறுதி உறுதியாக தெரிவிக்கின்ற செய்தி யாதெனில் பேச்சுப்பலம் அல்லது சமநிலை அழிக்கப்பட்ட தமிழர்களின் பிரதிநிதிகள் இனித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே என்பதுதான்.



சுரேஷ் பிரேமசந்திரன்

வடக்கு, கிழக்கு வாக்குகள் மேற்குறிப்பிட்ட எமது கருத்திற்கு மாறாக வேறுவிதமாக ஏதாவது செய்தியைச் சொல்லாதவரை இது விவாதற்குரிய ஒரு விடயமாக எடுக்கப்பட முடியாதது.

ஏனென்றால், சமகாலப் பொழுதில் இலங்கைத் தீவின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒருமித்துப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய ஒரேயொரு அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே என்ற தகைமையும் தற்போது அரசியல் ராஜதந்திர உலகில் அதற்குக் கிடைத்து வரும் அங்கீகாரமுமே இதற்குக் காரணம்.

# கைவிடத் தயாராகும் கூட்டமைப்பு

## மக்களை உணர்ச்சிப் பிழம்பின் மேல் வைத்து நடத்தும் அரசியல் இனிச் சரிவராது

இந்தியாவை மீறி நாங்கள் தீர்வொன்றிற்கு முனைவது என்பது வெற்றுக் கனவு. எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை இந்தியா அழைத்து ஒருவேளை பொன்சேகா வெல்லாமல் ῥாஜபக்ஷ வென்றால் அவருடன்

(16 பக்கம் பார்க்க)

- வண்ணன் குகேந்திரா -

# போரில் காயமடைந்தோருக்கு மீள் சத்திர சிகிச்சை தேவைப்படலாம்!

**கடந்த வருடம் நடுப்பகுதியில் வன்னிப் பிரதேசத்தில் இறுதி யுத்தம் நடைபெற்ற போது அதில் இடையில் சிக்கிக் காயமடைந்த பல்லாயிரம் அப்பாவிப் பொதுமக்களில் ஒரு சிலரின் பிரச்சினைகளை எடுத்துக் கூறுகிறது MSF எனும் எல்லைகளற்ற மருத்துவர் குழு. போர்க்காயம் பட்டோரில் பலருக்கு மீள் சத்திர சிகிச்சை அவசியம் என்கின்றது இக்கட்டுரை.**

**'புதினப் பலகை' இணையத்தளத்துக்காகத் தமிழாக்கம் செய்தவர் தி.வண்ணமதி.**

இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிடையிலான போர் இடம்பெற்ற காலப்பகுதியில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட பல நோயாளர்களுக்கு தொற்று, குறிப்பாக எலும்பில் தொற்று ஏற்பட்டிருக்கின்றது. எறிகணைச் சிதறல்களாலும் துப்பாக்கி ரவைகளாலும் ஏற்பட்ட காயங்கள் பல இன்னமும் மாறவில்லை.

நோயாளர்களைப் பரிசோதித்துக்கொண்டிருந்த எல்லைகளற்ற மருத்துவர் குழு[msf] இனது எலும்புசார் (orthopedic) சத்திரசிகிச்சை நிபுணரான மருத்துவர் இங்க ஒஸ்மர் (Dr.irga osmar ) குறித்த ஒரு நோயாளியின் கட்டில் அருகே சென்று அவரது எக்ஸ்ரேயில்அவதானித்தார். தசைக்குக் கீழே, எலும்புடன் ஒட்டியதாக ஒரு தகடு இருப்பது அதில் தெளிவாகத் தெரிந்தது.

எக்ஸ்ரேயில் எலும்பின் இரண்டு முனைகளும் பொருந்தாமல் பாரிய இடைவெளி இருப்பதையும் வெளித்தோலில் சிறிய ஓட்டை இருப்பதையும் நாம் அவதானித்தோம். ''குறுகிய வாயுள்ள புரையோடிய இதுபோன்ற புண்ணை 'Fistula' என அழைப்போம்''- என அந்த சத்திரசிகிச்சை நிபுணர் விளக்கினார்.

இவ்வாறான காயம் இருப்பது, நோயாளிக்குத் தொற்று ஏற்பட்டிருப்பதையே காட்டுகிறது. இந்தக் காயங்கள் பெரி தாக வெளியில் தெரியாவிட்டாலும் அல்லது வலியை ஏற்படுத்தாதபோதும் நோயாளியை அறியாமலே பெரும் பாதிப்பைன அது உள்ளே ஏற்படுத்திவிடும்.

பொதுவாக போரின் போது ஏற்படும் காயங்களில், ஏதாவது சிறிது துண்டுகள் உடலினுள் தொடர்ந்தும் இருக்குமானால் அல்லது உடைந்த எலும்பின் கீழே தகடு வைத்துப் பொருத்தியிருந்தால் அந்த நோயாளர்களுக்கு அடிக்கடி தொற்றுக்கள் ஏற்படுவது வழமையே. இவ்வாறாக போர்க் காயங்களைக் கொண்டவர்கள் அதிகமானோர் இருப்பதும், அவர்களுக்குப் பொருத்தமான சூழலில் வேகமான சிகிச்சையளிப்பதற்கு சத்திரசிகிச்சைக்கான போதிய வளங்கள் இல்லாதிருப்பதும்; நோயாளிகள் மத்தியில் இதுபோன்ற தொற்றுக்கள் ஏற்படுவதை அதிகரித்துவிடும்.

குறித்த நோயாளியுடன் மருத்துவர் இங்க ஒஸ்மர் உரையாடுகையில், ''என்னால் செய்யக்கூடியது இதுதான். உங்கள் காயத்தை வெட்டித் திறந்து, உடைந்த எலும்புகள் பொருந்துவதற்காக உள்ளே வைக்கப்பட்டிருக்கும் தகட்டை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக வெளிப்புறப் பொருத்திகளைப் [external fixator] பயன்படுத்தவேண்டும். இதற்காகப் பல வாரங்கள் நீங்கள் மருத்துவமனையில் தங்கியிருக்கவேண்டிவரும். இரண்டாவது, தெரிவாக எலும்புகளைப் பொருத்துவதற்காக உள்ளே தகடு வைத்திருப்பதால் ஏற்பட்டிருக்கும் தொற்று குணமாகும் என்ற நம்பிக்கையில் அது குணமாகும் வரை தொடர்ந்தும் பிறபொருள் எதிரிகளைப் [Antibiotics] பயன்படுத்திக்கொண்டிருக்க வேண்டும். எதனை நீங்கள் விரும்புகிறீர்கள் என யோசித்து முடிவெடுங்கள். வீட்டுக்கு எப்போது போகவேண்டும் என்று உங்களுக்குத் தெரியுமா?'' - எனக் கேட்டார். அந்த நோயாளியிடமிருந்து எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. கடந்த வாரங்களில் பெருந்தொகையான இடம்பெயர்ந்த மக்கள் தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் தாங்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையிலேயே தங்கியிருந்தால் சொந்த இடங்களுக்குத் திரும்பமுடியாத நிலைமை தோன்றிவிடுமோ - என்று பராமரிப்பிலுள்ள நோயாளர்கள் தங்களது



கவலைடிச் வெளிப்படுத்துகிறார்கள்.

ஆதலினால் மருத்துவ ரீதியில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய சிகிச்சைகள் தவிர்ந்த ஏனைய, நீண்ட நாள்கள் எடுக்கும் சிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டுமெனில், நேயாளர்களுடன் கலந்துரையாடாமல் மருத்துவப் பணியாளர்கள் இவற்றை மேற்கொள்வதில்லை.

தூய்மைத்தன்மை, காயம் தொற்று நீக்கப்பட்டிருப்பது மற்றும் முறையான பராமரிப்பு என்பனவே வேகமாகக் குணமடைவதை ஊக்குவிக்கும்.

18 வயதுடைய பெண் நோயாளியின்

(14 பக்கம் பார்க்க)




கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## புவியியல் (மானிடப் புவியியல்) பகுதி - I

**கடந்தவாரத் (23.02.2010) தொடர்ச்சி......**

20. 1923 ஆம் ஆண்டு ஈ.டபிள்யூ. போர்கஸ் என்ற பட்டினச்சமூகவியலாளர் நகரங்களின் உருவாக்கத்தை விளக்க முன்வைத்த கொள்கை எது?
    1) ஒரு மைய வட்டக் கொள்கை (The concentric Theory)
    2) வட்ட கோணப்பகுதிக் கொள்கை (The sector Theory)
    3) பல்மூலக்கருக்கொள்கை (The multiple nucler Theory)
    4) மையவிடத்துக்கொள்கை (Central Place Theory)

21. உலகில் சமயப்பணி நகரங்களாக விளங்கிவரும் இடங்கள்,
    1) மக்கா, ஜெருசலேம், வாரணாசி, மதுரை.
    2) கான்பெரா, புதுடெல்லி, ரோம், கானா.
    3) மக்கா, கதிர்காமம், கொழும்பு, கேம்பிரிஜ்.
    4) நியுயோர்க், மக்கா, லண்டன், சிட்னி.

22. நவீன நகரங்களில் 250,000 மக்களுக்குச் சேவைபுரியக்கூடிய பகுதியை அழைக்கும் ஒரு பதம்,
    1) சுப்பர் மார்க்கெட் (Super Market)
    2) ஹைப்பர் மார்க்கெட் (Hyper Market)
    3) வர்த்தக மையப்பகுதி (Central Business district)
    4) புறநகர் (SUBURB)

23. மானிடப் புவியியல் (Human Geography) என்ற வார்த்தையை முதன்முதலாகப் பயன்படுத்திய புவியியலாளர் யார்?
    1) ரட்சல் 2) தேல்ஸ். 3) ஸ்ராபோ. 4) மோற்பிரன்.

24. புவியியல் நிலைகள் மக்களின் செயல்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்வதே மக்கட் புவியியலின் நோக்கம் என்று கூறியதுடன் மானிடப் புவியியலுக்குத் தெளிவான விளக்கம் அளித்த புவியியலாளர் யார்?
    1) அரிஸ்டோட்டில். 2) அனாக்ஸிமாண்டர்.
    3) ஜீன்புரூணே. 4) விடால்.டி.லாப்பிலாஸ்.

25. ஒலிம்பிக் போட்டிகளில் 30ஆவது போட்டியை நடத்தத் தெரிவு செய்யப்பட்டுள்ள நகரம்,
    1) லண்டன். 2) எதென்ஸ். 3) கொழும்பு. 4) பரிஸ்.

26. 2ஆம் உலக மகா யுத்தத்தின்போது ஜப்பான் நாட்டில் ஹிரோசீமா, நாகசாகி என்ற இடங்களில் அணுகுண்டு போடப்பட்டதனால் அங்கு தாவரவளர்ச்சியற்ற நிலைமையே காணப்படுகிறது. ஆனால், அங்கு வளரும் ஒரு தாவரம்,
    1) பனை. 2) யுகலிப்ட்டஸ்.
    3) மூங்கில். 4) தூங்குமூஞ்சி மரம்.

27. ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து (UNO) வெளியேற்றப்பட்ட நாடு எது?
    1) பூட்டான். 2) இங்கிலாந்து. 3) சிங்கப்பூர். 4) தாய்வான்.

28. உலக உணவு விவசாயத் தாபனத்தின் (FAO) தலைமையகம் அமைந்துள்ள நகரம்,
    1) ரோம். 2) ஜெனீவா. 3) வாஷிங்டன். 4) பரிஸ்

29. பெற்றோலியத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள்; பெற்றோலிய விலையை நிலையாகப் பேணவும் விலைப் பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்குடன் (Opec) ஒபெக் 1960இல் அமைக்கப்பட்டது. அது அமையப் பெற்றுள்ள இடம்,
    1) லண்டன். 2) டியூனிசியா. 3) வியன்னா. 4) பெல்கிரேட்.

30. இஸ்ரேல் - எகிப்திய தலைவர்கள் 1978 இல் செய்துகொண்ட உடன்படிக்கை என்ன பெயரால் அழைக்கப்படுகிறது?
    1) வைநதி உடன்படிக்கை. 2) ஒட்டாவா உடன்படிக்கை.
    3) டேய்டன் உடன்படிக்கை. 4) ஒஸ்லோ உடன்படிக்கை.

31. G20 உச்சி மாநாடு 2009 ஏப்ரலில் நடத்தப்பட்ட நகரம் எது?
    1) லண்டன். 2) வாஷிங்டன். 3) கல்கத்தா. 4) மொஸ்க்கோ

32. பரவலாகப் பேசப்படும் ''பன்றிக் காய்ச்சல்'' மனிதர்களைப் பாதிக்கின்ற ஒரு நோய். அந்த நோய்க்குக் காரணமான வைரஸ் எது?
    1) $A(H_1N_1)$ 2) A(HN) 3) $A(H_2N_2)$ 4) 2A(HN)

33. GSP+ சலுகை வரி ஏன் வழங்கப்படுகிறது?
    1) அபிவிருத்தி அடைந்த நாடுகளை வலுவூட்ட வழங்கப்படுகிறது.
    2) அபிவிருத்தி அடைந்த நாடுகளின் கைத்தொழிற்துறையைக் கட்டியெழுப்ப வழங்கப்படுகிறது.
    3) அபிவிருத்தி அடைந்து வரும், குறை அபிவிருத்தியைக் காண்பிக்கும் நாடுகளின் கைத்தொழிற்றுறையை அபிவிருத்தி செய்யவும் அதனைக் கட்டியெழுப்பவும் வழங்கப்படுகிறது.
    4) கைத்தொழிலை முன்னேற்ற மட்டும் அபிவிருத்தியில் குறை வளர்ச்சியை காட்டும் நாடுகளுக்கு வழங்கப்படுகிறது.

34. இலங்கையின் புற்றுநோய் (Cancer) வைத்தியசாலை எங்குள்ளது?
    1) நாவின்ன. 2) பாதுக்கை. 3) மகரகம. 4) கொழும்பு.

35. இலங்கையில் வரித்திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு,
    1) 1930 2) 1932 3) 1941 4) 1953

36. ஜி.எஸ்.பி+ (GSP+) என்ற வரி எத்தனை நாடுகளுக்கு வழங்கப்பட்டுவருகின்றது?
    1) 10 2) 12 3) 13 4) 16

37. கொழும்பு மாநகரசபை நிறுவப்பட்ட ஆண்டு,
    1) 1806 2) 1816 3) 1865 4) 1910

38. இலங்கையில் முதன்முதல் சனத்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்ட ஆண்டு,
    1) 1990 2) 1901 3) 1707 4) 1871

39. இலங்கையில் கங்கா ஸ்ரீபுர என்றழைக்கப்பட்ட இடத்தின் தற்போதைய புதிய பெயர்,
    1) கம்பளை. 2) நீர்கொழும்பு.
    3) கண்டி. 4) பொலன்னறுவை.

40. இவ்வருடம் இலங்கை அரசு சர்வதேச நாணய நிதியத்திடம் எதிர்பார்க்கும் கடன் உதவித்தொகை எவ்வளவு?
    1) 165 கோடி மில்லியன் டொலர் (US) 2) 175 கோடி மில்லியன் டொலர் (US)
    3) 190 கோடி மில்லியன் டொலர் (US) 4) 210 கோடி மில்லியன் டொலர் (US)


## SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS

### பகுதி - II

* பின்வரும் வினாக்களுள் எவையேனும் நான்கிற்கு மாத்திரம் விடையளிக்குக.

01. ஐக்கிய நாடுகள் சபையினால் கணிப்பீடு செய்யப்பட்ட உலக சனத்தொகை வளர்ச்சி (1750 - 2100)

உலக சனத்தொகை வளர்ச்சி 1750-2100*





மூலம்:- ஐ.நா.தாபனம்

இப்படத்தில் காட்டப்பட்டுள்ள வரைபு 1750 - 2100 வரையிலான உலகின் சனத்தொகை வளர்ச்சியைக் காட்டுகின்றது.
இப்படத்தை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. இவ்வரைபின்படி 1750இலும் பார்க்க 2100 இல் காட்டப்பட்டுள்ளதன்படி நோக்கினால் இதற்கு சனத்தொகை வெடிப்புத்தான் பிரதான காரணமாக விளங்குகிறது. இதில் ''சனத்தொகை வெடிப்பு'' (Population Explosion) என்றால் என்ன?
ஆ. வரைபின்படி 1950 இல் உள்ள சனத்தொகையையும் 2050 இல் கணிப்பிடப்பட்டுள்ள சனத்தொகைக்குமிடையிலான வேறுபாடுகள் மற்றும் அதற்கான காரணங்களாக நீர் முன்வைக்கும் நியாயங்களையும் விளக்குக.
இ. 1750 முதல் 2100 வரையான காலப்பகுதியின் சனத்தொகை வளர்ச்சி மாற்றத்தை விளக்குவதுடன் 2100 இல் காட்டப்பட்டுள்ள சனத்தொகை வளர்ச்சி எய்தப்படுமானால் எதிர்காலத்தில் உலகம் எதிர்நோக்கவுள்ள விளைவுகளை விவரிக்குக.

02. கிராம-நகர சனத்தொகை (மில்லியனில்) (1950 - 2050)

சனத்தொகை (மில்லியனில்)




மூலம்:- இணையம்

படம் 2ஐ அடிப்படையாகக்கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அ. நகரமயமாக்கல் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்தி வரைபின் துணையுடன் கிராம - நகர சனத்தொகைப் போக்குகளில் இனங்காணக்கூடிய பிரதான அம்சங்களைக் குறிப்பிடுக.
ஆ. 2010 முதல் 2050 வரை நகர சனத்தொகையே வளர்ச்சியடைந்து வருகின்றது அதை நவீன உலகமயமாக்கலுடன் (modern globalization) தொடர்புபடுத்தி ஆராய்க.
இ. சனத்தொகைக்கும் - உலகமயமாக்கலுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது அந்த அடிப்படையில் நகர, கிராமிய மக்களிடம் ஏற்பட்டுள்ள கலாசார விளைவுகளை ஆராய்க.

03. அ. பெயர்ச்சிப் பயிர்செய்கை என்றால் என்ன?
ஆ. இலங்கையில் சுயதேவைப் பயிர்செய்கைக்குச் சாதகமாகக் காணப்படும் பௌதிக சமூகப் பொருளாதார காரணிகளை சுருக்கமாகக் குறிப்பிடுக.
இ. சுயதேவைப் பயிர்செய்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.

04. அ. பெற்றோலிய உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகள் 5 ஐ வரிசையாக குறிப்பிடுக.
ஆ. நீர் மின்வலு (Electricity) விருத்திக்குச் சாதகமான புவியியற் காரணிகளை விளக்குக.
இ. பெற்றோலியம், நீர் மின்வலு போன்றவற்றின் அண்மைக்காலப் போக்குகளை இலங்கையுடன் மட்டும் தொடர்புபடுத்தி ஆராய்க.

05. அ. விமானம் கட்டும் கைத்தொழிலில் ஈடுபட்டு வரும் நாடுகளில் 3 ஐக் குறிப்பிடுக.
ஆ. விமானம் கட்டுவதில் ஐக்கிய அமெரிக்கா (USA) முன்னணியில் திகழ்வதற்கான காரணிகளை விளக்குக.
இ. விமானம் கட்டும் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்கினை உலகலாவிய அடிப்படையிலான உதாரணங்களைக்கொண்டு சுருக்கமாக ஆராய்க.

06. அ. போக்குவரத்தின் மூன்று பெரும் பிரிவுகளையும் குறிப்பிடுக.
ஆ. பொருளாதார நடவடிக்கையைத் தீர்மானிக்கும் காரணியாக போக்குவரத்தைக் கொண்டு அண்மைய உலகப் பொருளாதார நடவடிக்கைகளை விளக்குக்.
இ. இலங்கையின் உள்நாட்டுப் போக்குவரத்தின் அபிவிருத்தியை உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக.

07. அ. தொடர்பாடல் (Communication) என்றால் என்ன? என்பதைக் குறிப்பிட்டு நவீன தொடர்பாடல் ஊடகங்கள் 4 ஐப் பெயரிடுக.
ஆ. உலகமயமாக்கலுக்கும் தொடர்பாடலுக்கும் இடையிலான உறவினை சுருக்கமாக விளக்குக.
இ. சர்வதேச வர்த்தகத்தில் தொடர்பாடலின் முக்கியத்துவத்தினை உதாரணங்களுடன் தெளிவான முறையில் விரிவாக ஆராய்க.

08. விளக்கக் குறிப்புகள் எவையேனும் மூன்றிற்கு மாத்திரம் எழுதுக.
அ. பெற்றோலியமும் ஒபெக் (Opec) நாடுகளும்.
ஆ. G.S.P+ சலுகை வரியும் இலங்கையும்.
இ. புவியில் வளர்ச்சியும் நவீன நுட்பமுறைகளும்.
ஈ. புவியியல் வளர்ச்சியும் - கார்ல் ரிட்டரும்.
உ. இலங்கை அரசின் கமநெகும, மகநெகும அபிவிருத்தித் திட்டங்கள்.

-நிறைவுற்றது-

ஆசிரியர்: L.C.ஜன்ஜூபீல் B.A(Hons), Sp.Geo
முன்னாள் விரிவுரையாளர்,
ஜாமியா நளீமியா கலாபீடம், பேருவளை.

## கணக்கீடு - பகுதி II: நேற்றைய (01.03.2010) தொடர்ச்சி......

01. 6) 2. நன்மதிப்பானது ரூபா 500,000 பெறுமதியில் மீள்மதிப்பிடல்.
3. பழைய பங்குடமையினை மாற்றுவது தொடர்பாக செலுத்த வேண்டிய உயர்தொழில் கட்டணங்கள் ரூபா.75,000 ஆகும்.

7) அமலன் இளைப்பாறியதும், ஏனைய பங்காளர்கள் பயஸ் என்பவரை 01. ஏப்ரல் 2007 இலிருந்து பங்குடமையில் சேருமாறு அழைத்துள்ளனர். பயஸ் தனது மூலதனமாக ரூபா 500,000 இட்டுள்ளார். கமலன், வலவன், பயஸ் ஆகியோர் இலாப நட்டங்களை முறையே 5:3:2 என்னும் விகிதத்தில் பகிர சம்மதித்துள்ளரார். மேலும் பங்காளர்கள் புதத்கங்களினல் நன்மதிப்புக்கணக்கினை பராமரிப்பது இல்லை எனவும் சம்மதித்துள்ளனர்.

8) இளைப்பாறலின் போது அமலனிற்கு கொடுக்க வேண்டிய தொகையானது அவரின் கடன்கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளதுடன் அவரின் 50% ஆன கடன் தொகை 01.02.2007 இல் செலுத்தப்பட்டது.

**வேண்டப்படுபவை:**

1. 31.01.2007 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வியாபார, இலாபநட்டப் பகிர்வுக் கணக்கு.
2. 31.03.2007 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்காளர் நடைமுறைக் க/கு.
3. மீள்மதிப்பிட்டு கணக்கு.
4. 01.04.2007 இல் பங்காளர் மீதிகளைக் காட்டகூடியவாறு பங்காளர் மூல தனக் கணக்கு.
5. 01.04.2007 இலுள்ளவாறு புதிய பங்குடமையின் ஐந்தொகை.

02. 1) மொத்தச் சொத்துக்கள் அவை குறித்த ஒரு கால நேரத்தில் 600,000/= ஆல் குறைந்துள்ளது. அதே காலத்தில் மூலதனம் 120,000 ஆல் அதிகரிப்பின் மொத்த பொறுப்புகளின் அக்காலத்துக்கான மாற்றத்தின் தொகையையும் திசையையும் காண்க.

2) 1. 2009.01.01 இல் சிரிகாந்தன் ஒரு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்தார். ஜனவரி மாதத்தில் எழுந்தகொடுக்கல்வாங்கல்களின் பெறுமதிகள் கணக்கீட்டு சமன்பாட்டு வடிவத்தில் பின்வருமாறு:

| | காசு + | கடன்பட்டோர் + | உபகரணம் - | தி.பெ.தே = | பொறுப்பு | மூலதனம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | | +400 | | | +400 | |
| 02. | | | | | +2,000 | -2,000 |
| 03. | | -3,000 | | | | -3,000 |
| 04. | -7,000 | | | | -5,000 | -2,000 |
| 05. | | | -2,000 | | | -2,000 |
| 06. | +380,000 | -400,000 | | | | -20,000 |
| 07. | | | -80,000 | | +80,000 | |
| | | | | -40,000 | | -40,000 |
| 08. | | | | | +1,800 | -1,800 |
| 09. | | | -100,000 | | | -100,000 |
| 10. | -2,000 | | +3,500 | | +1,500 | |

**வேண்டப்படுவது:**

1. ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலையும் விபரிக்குக.

3) பின்வரும் செலவீனம் மூலதனச் செலவா/ வருமமானச் செலவா எனக் குறிப்பிடுக.

1. பொருட்களை கொள்வனவு செய்கையில் செலுத்தப்பட்ட உள்வந்த வண்டிக் கூலி
2. புதிய நிறுவனமொன்றை ஆரம்பிக்கும்போது எழுந்த ஆரம்பச் செலவு.
3. ஊழியர் பதவி நீக்கத்திற்கான இழபீட்டு கொடுப்பனவு
4. புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட பழைய இயந்திரமொன்றை பாவிக்க முன் எழுந்த செலவு.

03. 1) 2007.12.31 இல் Xகம்பனியின் பரீட்சை மீதி சமப்படவில்லை. இது தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையில் கீழ்வரும் வழுக்கள் வெளிப்பட்டன.

1. 185,000/= இற்கு கொள்வனவு செய்யப்பட்டஎழுது கருவிகள், அலுவலக உபகரணக் கணக்கில் 785,000/= என பதியப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக்கொடுக்கல் வாங்கல் காசுப்புத்தகத்தில் சரியாகப் பதியப்பட்டுள்ளது. அத்துடன் இத்தொகை 785,000/= அடிப்படைமயில் கணிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு 115,000/= ஆனதில் முடிவடைந்த வருடத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.
2. தொழில் வழங்குனர், ஊழியர்கள் ஆகியோரின் ஊழியர் சேமலாபத்திற்கான பங்களிப்புக்கள் முறையே 45,000/=, 30,000/= ஊழியர் சேமலாபநிதிச் செலவு கணக்கில் பதியப்பட்டுள்ளது. இத்தொகைகள் சென்மதி ஊழியர் சேமலாபநிதியக்கணக்கில் சரியாகப் பதியப்பட்டுள்ளதுடன் ஊழியர்களுக்கு செலுத்திய தேறியசம்பளம், சம்பளக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது.
3. மார்ச் மாதத்தில் இடம்பெற்ற விற்பனைத்திரும்பலானது 100,200/= விற்பனைத் திரும்பல் கணக்கில் மாத்திரமே பதியப்பட்டுள்ளது. கம்பனி ஏற்கனவே வருட முடிவிலுள்ள கடன்பட்டோர் மீதியில் 10% எற்பாடு செய்து உள்ளது.
4. கணக்காண்டு காலத்தில் கடன் கொடுத்தோரிடம் இருந்து பெறப்பட்ட கழிவு 37,000/= ஆனது கடன்கொடுத்தோர் கட்டுபாட்டு கணக்கில் வரவிலும் செலவிலும் பதியப்படட்டது.

**வேண்டப்படுவது:**
சீராக்கத்திற்கான நாட்குறிப்பு பதிவு

2) 2008.12.31 இல் வரையறுத்த டேவிட் கம்பனியானது காசேட்டின் வங்கி நிரல் ரூபா 17,900 ஆன வரவு மீதியொன்றைக் காட்டியது. இம் மீதி அதே திகதியிலான வங்கிக் கூற்று மீதியுடன் இணங்கவில்லை. காரணங்கள் பின்வருமாறு:

1. இறைகளுக்கான நிலையான கட்டளையான 1,250/=எனும் தொகை வங்கியினால் Dec 3 ஆம் திகதியன்று செலுத்தப்பட்டது.
2. 650/=ஆக அமைந்த வங்கிக்கட்டணங்கள் Dec 16 ஆம் திகதியன்று கம் கம்பனியின் வங்கிக்கணக்கிலிருந்து கழிக்கப்பட்டது.
3. 850எனும் தொகைக்கு Dec 20 ஆம் திகதியன்று வழங்கப்பட்ட ஒரு காசோலை காசேட்டில் 580/= ஆகப் பதியப்பட்டது.
4. 2008 Nov மாதத்தில் ரூபா 1,850 எனும். தொகைக்கு வழங்கப்பட்ட ஒரு காசோலையும் 2008 Dec மாதத்தில் ரூபா 2,500 எனும் தொகைக்கு வழங்கப்பட்ட இன்னொரு காசோலையும் 2008 Dec 31 திகதி வரை வங்கிக்கு சமர்பிக்கப்பிக்கப்படவில்லை.
5. Dec 14 ஆம் திகதியன்று வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட காசோலைகளில் மொத்த பெறுமானம் 3090/= எனும் தொகை வங்கிக் கூற்றில் இடம் பெறவில்லை.
6. Dec மாதத்தில் கம்பனி வழங்குனர் ஒருவருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து முற்பணமாக 5,000/= எனும் தொகைக்கு காசோலை ஒன்றை வழங்கியிருந்தது. எனினும் பின்னர் அவருடன் கொண்ட பிணக்கொன்று காரணமாக கம்பனி கொடுப்பனவை நிறுத்தும் படியாக ஒரு கட்டளையை வங்கிக்கு வழங்கி காசேட்டில் அவசியமான பதிவை செய்தது. எனினும் வங்கி இவ்வேளையில் காசோலைக்கான பணத்தை ஏற்கனவே செலுத்தி விட்டதாகவும் கட்டளையை நிறைவேற்ற முடியாது இருப்பதாகவும் அறிவித்தது.
7. 2500/= தொகைக்கு கிடைத்த மாற்றுண்டியலொன்றை கம்பனி Dec 5 ஆம் திகதியன்று கழிவுக்கு உட்படுத்தி 2,350/= வை பெற்றது. இவ் உண்டியலுக்கு உரிய திகதியில் வாடிக்கையாளரினால் பணம் செலுத்தப் படாததால் வங்கி Dec28 ஆம் திகதி கம்பனியின் கணக்கிற்கு 10/= ஆன முத்திரை கட்டணத்தையும் உள்ளடக்கி 2,510/= எனும் தொகையை தாக்கல் செய்யப்பட்டது.

**வேண்டப்படுபவை:**
1. திருத்திய காசேடு. 2. வங்கிக் கணக்கிணக்கக் கூற்று.

04. 1) மதன் வியாபாரியின் கணக்காண்டு Dec 31 இல் முடிவடைகின்றது. இந் நிறுவனத்தின் மோட்டார் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வருமாறு:

| இலக்கம் | கொ/வு கிரயம் | கொ/வு திகதி | இறுதிப் பெறுமதி | ஆயுட்காலம் ஆண்டுகள் |
|---|---|---|---|---|
| XL 1020 | 340,000 | 2004.07.01 | 20,000 | 8 |
| XM 3401 | 230,000 | 2005.01.01 | 30,000 | 5 |
| XE 4201 | 400,000 | 2006.07.01 | 0 | 5 |

2007.07.01XL1020 இலக்கமுடைய மோட்டார் வாகனம் 142,000/= காசிற்கு அகற்றப்பட்டுது.

**வேண்டப்படுபவை:**
2007.12.31 ஆம்திகதியில் முடிவடையும் ஆண்டிற்கான
1. மோட்டார்வாகனக் கணக்கு.
2. மோட்டார்வாகனத் தேய்வுக்கணக்கு.
3. மோட்டார்வாகன பெறுமானத்தேய்வு எற்பாட்டுக் கணக்கு.
4. மோட்டார்வாகன அகற்றல் கணக்கு.

2) பாடசாலைப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிசாம் 2004.12.31.இல் முடிவடைந்த கணக்காண்டு காலத்திற்கான பின்ரும் தகவல்களை தருகின்றார்.

| | 2004.01.01 | 2004.12.31 |
|---|---|---|
| காசு | 3,600 | 2,100 |
| வங்கிமேலதிகப்பற்று | 6,000 | 11,160 |
| கடன்கொடுனர் | 13,800 | 15,600 |
| கடன்பட்டோர் | 9,000 | 19,800 |
| முற்பண வாடகை | 1,200 | 1,200 |
| உபகரணம் (தேறியது) | 30,000 | |
| இருப்பு | 36,000 | 35,400 |
| பெறப்பட்ட வி/னை முற்பணம் | | 1,800 |

3) 1. உபகரண பெறுமானத் தேய்வு தொடர்பான நிசாமின் கொள்கையின்படி, கணக்காண்டு முடிவில் தேறிய புத்தக பெறுமதியில் 10%ஐ பெறுமானத் தேய்விடல் வேண்டும்.
2. ரூபா 350 கிரயமுள்ள சில உலோக வார்ப்புக்ள் 2004.12.310இல் மூலப்பொருட்கள் இருப்பில் உள்ளடங்கியுள்ளன. இவைகள் புதிய வடிவமைப்பிற்கு பொருத்தமற்றதாக இருப்பதனால், இவைகள் முழுமையாக பதிவழிக்கப்பட் வேண்டும்.
3. ரூபா. 3,500 கிரயத்தைக் கொண்டிருந்த விசேடமாக வடிவமைக்கப்பட்ட சில பைகள் இறுதி முடிவடைந்த பொருட்களின் கிரயத்தில் உள்ளடங்கியுள்ளன. இவைகள் ஒரு வாடிக்கையாளருக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தும் இன்னும் அப்புறப்படுத்தபடவில்லை.
4. ரூபா 4,000 கிரயமுள்ள பாடசாலை பைகள், விற்பனை இன்றேல் திருப்புக என்ற அடிப்படையில் முகவரொருவருக்கு விநியோகிக்கப்பட்டது. இவைகள் கடன் விற்பனை.ரூபா 5,000 எனக் கருத்தில் கொண்டு இறுதி இருப்பிலிருந்து நீக்கப்பட்டும் உள்ளன. எவ்வாராயினும் முகவர் இப் பொருட்களை இன்னும் விற்பனை செய்திருக்கவில்லை. அத்துடன் இதனை திருப்பி அனுப்பும் காலம் கூட முடியாமல் இருந்தது. தீர்ப்பதற்காக வழங்கப்பட்ட ஒரு சோடி சப்பாத்துக்களை நிசாம் தனது சொந்த பாவணைக்காக பெற்றார். இது தொடர்பாக கணக்கில் சீராக்கம் இடம் பெறவில்லை.
6. நிசாமின் காசுப் பற்று 55,000/=

**வேண்டப்படுபவை**
1. 2004.12.31ஆம் திகதி இருப்பின் சரியான பெறுமதியை காட்டும் கூற்று
2. 2004.12.31ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கான வியாபாரத்தின் தேறிய இலாபத்தை கணிக்குக.

05. 2009.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வசுந்திரா விளையாட்டுக் கழகத்தின் கொள்ளல்கொடுத்தல் கணக்கு கீழே தரப்பட்டுள்ளது.
மேலதிக தகவல்கள்: கொள்ளல்கொடுத்தல் கணக்கு

| விவரம் | ரூபா | விவரம் | ரூபா |
|---|---|---|---|
| மீ/வ | 23,000 | மைதானத்தை தயார்படுத்துவதற்கான செலவு | 5,000 |
| வருடாந்த அங்கதுவ கட்டணம் | 14,700 | உணவு | 20,000 |
| ஆயுட்கால அங்கத்துவக் கட்டணம் | 30,000 | வாடகை | 20,000 |
| | | தொலை பேசிக்ககட்டணம் | 6,000 |
| பெறப்பட் மைதான வாடகை | 50,000 | சம்பளம் | 90,000 |
| உணவு விடுதி வருமானம் | 65,000 | மீ/செ | 41,700 |
| | 182,700 | | 182,700 |
| மீ/வ | 41,700 | | |

1) கணக்காண்டு காலத்தில் இக் கழகம் ஆயுட்கால அங்கத்துவ முறைமையை அறிமுகப்படுத்திய ஆயுட்கால அங்கத்துவ கட்டணத்தைப் பதிவழிப்பது தொடர்பாக இக் கழகத்தின் கொள்கையானது ஆயுள் அங்த்துவம் வழங்கிய வருடத்தில் இருந்து பத்து வருடங்களுக்கு பதிவழிப்பை மேற்கொள்வதாகும்.
2) ஒரு அங்கத்தவர்க்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூபா 300 ஆயுட்கால அங்கத்துவ கட்டணம் ரூபா 30,000 இக் கழகத்தில் 60 அங்கத்தவர்கள் காணப்படுவார். இவர்களின் 10 அங்கத்துவர்கள் ஆயுட்கால அங்கத்தவர் ஆவார்.
3) கணக்காண்டு காலத்தில் பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணங்களுள் 2004 ஆம் ஆண்டில் நிலுவையாக இருந்த அங்கத்துவக் கட்டணங்கள் ரூபா 3,000 உம் 2006 ஆம் ஆண்டுக்கான முற்பணமாகப் பெறப்பட்ட அங்கத்துவக் கட்டணம் ரூபா 15,000 உம் உள்ளடங்கியுள்ளது.
4) இவ் விளையாட்டுக் கழகத்தின் மைதானமானது விளையாட்டு நிகழ்ச்சிகளை நடாத்துவதற்காக வெளியாருக்கு வாடகைக்கு விடப்படுகியறது. எனினும் மைதானத்தை தயார்படுத்தல் செலவினை இக் கழகமே பொறுப்பேற்கிறது.
5) இக் கழகம் அங்தவர்களுக்கான உணவு விடுதியை, கழகம் அமைந்துள்ள அதே இடத்தில் பேணி வருகிறது.
6) இக் கழகத்தில் பணி புரிந்த 3 ஊாயர்களுக்குச் செலுத்தப்பட்ட வருடாந்தக் சம்பளங்கள் பின்வருமாறு:

| | ரூபா |
|---|---|
| மைதானக் காப்பாளன் | 36,000 |
| எழுதுவினைஞர் | 24,000 |
| உணவு விடுதிக் காப்பாளர் | 30,000 |

7) பின்வருவன 2009.01.01 இலும் 2009.12.31 இலும் உள்ளப்படியான மீதி

| | 2009.01.01 | 2009.12.31 |
|---|---|---|
| தளபாடமும் உபகரணமும் | 30,000 | 25,000 |
| உணவு இருப்பு | 10,000 | 7,000 |

**வேண்டப்படுபவை:**
1. அங்கத்துவக் கட்டணக் க/கு. 2. ஆயுட்கால அங்கத்துவக் க/கு.
3. உணவு விடுதி வியாபாரக் க/கு. 4. வருமான செலவுக் க/கு.

-நிறைவுற்றது-

# நிமால் மெதிவக்க உட்பட்ட 1,000 பொலிஸார் இடமாற்றம்

## விசேட நடவடிக்கைப் பிரிவு கலைப்பு

கொழும்பு, மார்ச் 01

மேல்மாகாணத்தில் செயற்பட்டு வந்த பொலிஸ் விசேட நடவடிக்கை பிரிவு கலைக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த நிமால் மெதிவக்க உட்பட்ட ஆயிரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகாவுக்கு எதிராக மருதானை அச்சகம் ஒன்றில் அச்சிடப் பட்டிருந்த பல சுவரொட்டிகளை இந்த பொலிஸ் குழுவே கைப்பற்றியிருந்தது.

இந்தச் சம்பவத்தின் அடிப்படையிலேயே குறித்த நடவடிக்கை பிரிவு கலைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, பொலிஸ் திணைக்களத்தால் உத்தியோக பூர்வமற்ற முறையிலேயே மேற்கொள் ளப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு இந்தப்பிரிவு ஆரம்பிக் கப்பட்டது. இதன் முதலாவது பொறுப்பதிகாரியாக சிரேஸ்ட பொலிஸ் அதிகாரி நிமல் லிவ்ஹே சேவையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# போரில் காயமடைந்தோருக்கு.....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டிலுடன் சாய்ந்து நின்றவாறு, அந்த இளம் பெண்ணின் காயத்தின் நிலையை விளக்குகிறார் மருத்துவர் இங்க. ''கிருமித் தொற்றுக்குள்ளான தசை மற்றும் எலும்பின் சிறுபகுதி என்பவற்றை வெட்டி அகற்றவேண்டும். அத்துடன் காலின் எலும்பை நேர்த்தியாகப் பொருத்துவதற்கு வெளிப்புறப் பொருத்திகளைப் [external fixtor] பயன்படுத்தவேண்டும்.

''இதன்போது பரிசோதனைக்காக நாம் திசுக்களை எடுப்போம். இந்தப் பரிசோதனையின் பின்னர்தான் எந்தவகையான தொற்று உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் க ்டறிந்து அதற்கேற்ற பிறபொருள் எதிரியை [Antibio ɔn] நாம் தேர்ந்தெடுப்போம்.''

கடந்த ஏப்ரல் 20இல் காயமடைந்த இந்தப் பெண் மூன்று நாள்களின் பின்னர், இயங்கிக்கொண்டிருந்த ஒரு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார். இங்கு அவரது காலைத் துண்டிப்பதற்கு மருத்துவர்கள் விரும்பியபோதும் அந்தப் பெண் நோயாளி விரும்பவில்லை. ஐந்து வாரங்களின் பின்னர் கால் சரியாகப் பொருந்தாத நிலையில் ஊன்றுகோலுடன் அந்தப் பெண்மருத்துவமனையிலிருந்து வெளியேறினார்.

காயம் ஏற்பட்ட இடத்தில் அவருக்குத் தொடர் வலி இருந்துகொண்டேயிருந்தது. நவம்பர் மாதத்தின் முதன்பகுதியில் இந்த வலி அதிகரிக்கவே மெனிக் பாம் முகாமிலுள்ள மருத்துவமனைக்கு இந்த நோயாளி சென்றிருக்கிறார். சுகாதார அமைச்சினது மருத்துத்துவர்கள் இவரை MSF மருத்துவமனைக்கு அனுப்பியிருந்தார்கள்.

காயத்திலிருந்து சீழ் தொடர்ந்தும் வந்துகொண்டிருந்தது. இதன் பின்னர் எக்ஸ்கதிர் எடுத்தபோது, குறிப்பிட்ட பகுதியில் எலும்பும் அதனை அண்டிய தசையும் கிருமித்தொற்றுக் குள்ளாகியிருந்தமை கண்டறியப்பட்டது.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவேண்டிய நோயாளர்களை இனங்காணுவது முக்கிய விடயமாகும்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், பாதுப்புக்குள்ளான தங்களது அவயங்களை எந்தவிதப் பிரச்சினையுமின்றிப் பயன்படுத்தலாம் என்ற உறுதிப்பாடு இல்லாமலேயே அதிகமான நோயாளர்கள் மீள்குடியேற்றத்தின்போது தங்களது ஊர்களுக்குத் திரும்பிவிடுகிறார்கள்.

இதுபோல நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்கு மீளவும் சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய தேவை இருக்கிறது என MSFஇனது சத்திரசிகிச்சை நிபுணர் பற்றிக் ஹரல்ட் தெரிவிக்கிறார்.

இந்தச் சத்திரசிகிச்சைகள் அனைத்தையும் அவசர அவசரமாக மேற்கொள்ளவேண்டும் என்ற தேவை இல்லை. எதிர்காலத்தில் அவர்களது சுகவாழ்வினை உறுதிப்படுத்துவதற்கே இந்த சிகிச்சைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எவ்வாறிருப்பினும், பாதிக்கப்பட்ட அவயவங்களின் செயற்றிறனை அதிகரிக்கும்நோக்கில் செய்யப்படும் இந்த சத்திரசிகிச்சைக்கு பல வாரங்களோ அல்லது மாதங்களோ ஆகலாம்.

இவ்வாறாக நீண்ட நாள்களுக்கு மருத்துவமனையில் இருப்பதற்கு முதலில் அந்த நோயாளி விருப்பம் தெரிவிக்கவேண்டும்.

''அமான், ஜோர்தான் ஆகிய பகுதிகளில் காயமடைந்த ஈராக்கியர்களுக்குச் சிகிச்சையளிப்பதில் நாம் இதுபோன்ற அனுபவத்தினைப் பெற்றிருக்கிறோம்.


''போரின் போது ஏற்படும் காயங்களுக்கான இரண்டாவது அல்லது மூன்றாவது சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதில் MSF தனது அனுபவத்தினை அதிகம் பெற்றிருக்கிறது.''- என அவர் தொடர்ந்தார்.

கை, கால் போன்ற பாதிக்கப்பட்ட அவயங்களின் செயற்றிறனை அதிகரிப்பதற்காக சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும். நோயாளர்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்பும்போது இதுபோன்ற சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவேண்டிய தேவை அதிகரிக்கும்.

இச்சத்திரசிகிச்சைகளை மேற்கொள்வதால் அவயவங்களின் செயற்றிறன் அதிகரிக்கும் என்ற செய்தி, இதுபோன்ற பாதிப்புக்குள்ளாகிய பெருமளவரான நோயாளர்கள் மருத்துவமனையை நாடுவதை அதிகரிக்கும்.

நன்றி - 'புதினப்பலகை' இணையம்.

## 13ஆம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 14 ★ 02 ★ 1936

உதிர்வு 23 ★ 02 ★ 1997

**அமரர் முத்து நடராஜா**

திதி: 02.03.2010

ஆண்டுகள் பதின்மூன்று ஆகிவிட்டன-ஆனாலும்
உம்மை மறக்க முடியாது தவிக்கின்றோம் அப்பா!
என்றும் எம்மோடு வாழ்கிறீர்கள்
என்ற நம்பிக்கையுடன் வாழும்.

விநாயகர் பாடசாலை அருகாமை,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.
தொ.பே.இல: 0212264694

உங்கள்:
மனைவி-கமலாதேவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(95459)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

02.03.2010



திருமதி **இராஜலட்சுமி செல்லத்துரை**

அன்னை மடியில் 26.01.1923

ஆண்டவன் அடியில் 31.01.2010

அன்பின் உருவமாய் பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் வழிகாட்டிய எங்கள்
அன்னையே!
ஊரார் போற்றும் உத்தமியாய் உறவுகள்
போற்ற வாழ்ந்து பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன்
கடைசி நேரம் வரை கொஞ்சிக் குலாவிக்
களிப்புடன் வாழ்ந்து இறையடி சேர்ந்த
எங்கள் அன்னையே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல 603, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0213008471

அன்னாரின் பிரிவால் துயருறும்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(95460)

## 31 ஆவது நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி **பாஸ்கரன் குமுதினி (வவா)**

மலர்வு 1976.07.13

உதிர்வு 2010.01.31

எம் இனிய அம்மாவே!
எம்மைப் பாதிவழியில் பரிதவிக்க விட்டோடி
மாதம் ஒன்று ஆனதம்மா-ஆனால்
ஆறவில்லை எம் மனவலி
கோடி தவமிருந்தாலும் தேடட முடியுமா உங்களை?
ஏங்கித்துடிக்கின்றோம்-ஏன் இந்த விதி எமக்கு?
எப்படித்தான் தாங்கிடுவோம்.....

எமது குடும்பத்தின் குலவிளக்கு அணைந்த வேளையில் உடன் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எமது நன்றிகளினைக் கூறிக்கொண்டு இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி-நுணாவில்,
சாவகச்சேரி.
தொ.பே.இல 0213206715

குடும்பத்தினர்.
சிந்து கபே, 17 B, கம்பன் லேன்,
கொழும்பு 06.

(95451)

## 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 15 ★ 05 ★ 1937

உதிர்வு 25 ★ 02 ★ 2005

**கந்தர் சொக்கலிங்கம்**

திதி: 02.03.2010

அன்பின் வித்தாய் பிறந்து உறைவிடமாய்
திகழ்ந்த அப்பாவே!
காணும் பொழுதில் கண்டவுடன் அகமலரும் அப்பாவே!
இல்லத்தின் மகிழ்ச்சிக்காக வழிகாட்டிய அப்பாவே!
உங்கள் வாழ்வு ஐந்தாண்டுகள் போனாலும்
எங்கள் மனதை விட்டு அகலாது அப்பா!

பெரியதம்பிரான் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடன் மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/565196)

**சேவை**

சகலவிதமான குளிரூட்டிகள் (A/C), குளிர் சாதனப் பெட்டிகள் (FRIDGE)ஒரு வருட உத்தரவாதத்துடன் வீடுகளில் வந்து திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு: 0771541991

(95122)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

6கிழமைகள் பூர்த்தியாகி முற்றாகப் பூச்சி நீக்கப்பட்ட Boxer (பொக்சர்) நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777531552 (95145)

# அருள் பொழியும் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலயம்



வடமராட்சி மண்ணிலே சக்தி அமர்ந்திருந்து தெய்வீக அருள்பொழியும் ஊர் அல்வாய் வேவிலந்தைப்பதி. சக்தியின்றி சிவமில்லை என்பார்கள் ஆன்றோர். அந்த வகையிலே சக்தியாகிய முத்துமாரி அம்மன் சிவத்தோடு அமர்ந்து அருள் புரிகிறார். ''வேவிலந்தை'' என்ற நாமம் வேம்பு +இலந்தை என பாகுபடுத்தப்படுகின்றது. இங்கு உடைச்சி என்ற பெண்ணே இக்கோயிலை ஒரு சிறு வழிபாடாக வணங்கி வந்ததாகவும் ஒருநாள் உடைச்சியின் கனவில் அம்மனே தோன்றி 'உனது காணியில் எனது தலவிருட்சமாகத் தோன்றி வேவிலந்தை என பெயர் பெற்றிருக்கின்றது. அது வேறு யாருமல்ல வேம்பு நான் (அம்மன்) இலந்தை சிவம் அங்கே ஒரு கொட்டில் போட்டு மாலை வேளை விளக்கேற்றிவா மற்றதெல்லாம் நான் பார்க்கிறேன்' எனக் கூறினார். பின்னர் ஊரே உடைச்சி வீட்டில் கூடிவிட்டது. இது கனவல்ல நினைவாக்க வேண்டியது எனக் கூறி வேம்பிலந்தையின்கீழ் அழகான ஒரு சிறிய கொட்டில் போட்டு நிலத்தினை மெழுகி பூ வகைகளைத் தூவி கொட்டிலின் நடுவே அம்மனைக் கொலுவிருக்க வைத்தார்கள். இதுவே பின்னர் அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் என அனைவரினாலும் பூசிக்கப்பட்டு பயபக்தியுடன் வழிபடப்பட்டு வருகின்றது.

இன்றைய நிலையில் மூல மூர்த்தியாகிய அன்னை கர்ப்பக்கிரகத்தில் கொலுவீற்றிருப்பதையும் ஓங்கி வளர்ந்திருக்கும் தல விருட்சங்களும் நான்கு முழத்தில் நீர் சுரக்கும் தீர்த்தக்கேணி, வானை முட்டுகின்ற பாரிய ராஜகோபுரம், மணிக்கோபுரம், மணி மண்டபம் எனப் பாரிய தெய்வீகம் பொருந்திய கட்டுமானங்களை உடையதாய் வடமராட்சி மண்ணிற்கே புனிதம் பரப்பிவருகின்றது. சித்திரத்தேர், நவக்கிரக மண்டபம், அன்னதான மடம், மடப்பள்ளிகள், மாபிள் பதிக்கப்பட்ட உள்வீதி என்பன ஆலயத்தில் எழுச்சிக்கு தக்க சாதனைகளாகும்.

இவ்வாலயத்தில் இடம்பெறும் பக்தியுற்சவங்கள் அன்னைக்குரிய அனைத்து விரதங்களும் பூஜைகளும் பாராட்டப்படக் கூடியவாறு நடத்தப்பட்டு வருவது சிறப்பம்சம். ஆடி மாத்தில் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 15 நாள்கள் இறை பக்தியுடன் திருவிழாக்கள் நடைபெறும். தேர்த்திருவிழாவின் போது வடமராட்சிமண் யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களிலும் மக்கள் திரண்டு வந்து வடம் பிடித்து இழுத்து அன்னையின் அருட்கடாட்சத்தை பெற்றுய்வது வழமையாகும். தீர்த்தத் திருவிழாவில் அம்பாள் சமுத்திரத் தீர்த்தம் ஆடுவது மெய் சிலிர்க்க வைக்கும் அற்புத நிகழ்வாகும். இவ்வாலயத்தில் அனைத்து பூஜைகளும் நேரகாலத்திற்கு ஏற்றால்போல் ஒழுங்குமாறாது நடத்தப்பட்டு வருவது சிறப்பம்சமாகும்.

பல அற்புதங்கள் அம்பிகையால் நடத்தப்பட்ட இவ்வாலயம் சக்தியின் தெய்வீக அருளுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. எனவே இவ்வாலயத்தை நாடி அம்பாளின் அருளைப் பெறுவோமாக!
பெற்று உய்வோமாக.

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெலாம்.




-வடநம்பி-

# மரங்களை நடுவோர் கவனத்திற்கு!



குடாநாட்டின் எல்லாத்திசைகளிலும் பரவத்தொடங்கியுள்ள அபிவிருத்தியின் வாசனை வடமராட்சிப் பகுதியிலும் வீசத் தொடங்கியுள்ளது. யாழ்.நகரிலிருந்து வடமராட்சி நோக்கி விரைகின்ற பிரதான வீதியான பருத்தித்துறை வீதி அகலமாக்கப்படப் போகின்றது. இது வடமராட்சிப் பகுதிக்கான போக்குவரத்தில் இதுவரை இருந்த பல அசௌகரியங்களை நீக்கும் என்று நம்பலாம். போக்குவரத்து இலகுவாக்கப்படுவதால் வடமராட்சியிலிருந்து யாழ்ப்பாணம் வருவதற்கு இப்போது எடுக்கும் நேர அளவு சரிபாதியாகக் குறையும் என்று சாரதிகள் பலரும் கருதுகின்றனர். அத்தோடு எவ்வித சிரமமுமின்றிக் கனரக வாகனங்கள் கூட வல்லையூடாக நுழைய முடிவதால் ஏனைய பகுதிகளை விடவும் வடமராட்சியில் அதிகரித்த விலையில் விற்பனை செய்யப்படும் பொருள்களும் அவற்றின் பெறுமதியில் ஏனைய இடங்களில் உள்ளதைப் போன்று சமபெறுமானத்தை அடையமுடியும். இதனால் இப்பகுதியில் உள்ள தாழ்நிலை வருமானத்தையுடைய பலரும் வளம்பெற முடியும்.

இவ்வளவு நன்மைகளும் இருந்தும் கூட சில தீமைகளும் இந்த வீதி அகலப்படுத்தலில் இருக்கவே செய்கின்றது. வெட்ட வெளியாகப் பரந்து கிடக்கும் வல்வை வெளிக்கு பசுமையூட்டவும், உச்சிவெயிலில் பயணிப்போரின் சிரமத்தைப் போக்கவும் காலம்காலமாக இப்பகுதியில் மரம் நடுவிழாக்கள் நடைபெறுவதுண்டு. அந்த விழாக்களில் நடப்பட்டு எப்படியோ ஒருவாறு தப்பிப்பிழைத்து பயணிகளுக்கு வீதியோரமாக நிழல் தந்துகொண்டிருந்த பலமரங்கள் தினமும் தறிக்கப்பட்டு வாகனங்களில் கொண்டு செல்லப்படுவதை அவதானிக்க முடிகின்றது. உண்மையில் இந்த மரங்களை அபிவிருத்திப்பணியில் ஈடுபடுவோர் வேண்டுமென்றே வெட்டுவதில்லை. வீதியின் இருகரைகளிலும் ஒட்டி உறவாடிக் கொண்டிருக்கும் இந்த மரங்களை வெட்டினால்தான் வீதி அபிவிருத்தி நிகழ முடியும். மரநடுவிழாக்களை எப்படியாவது நடத்திவிட்டால் போதும் என்ற நினைப்போடு தொலைநோக்குச் சிந்தனையில்லாமல் மரங்களை நட்டவர்களே இதற்கு முழுப்பாத்திரவாளிகள். எனவே இனியாவது தொலைநோக்கோடு சிந்தித்து வீதியின் கரையிலிருந்து பத்துப் பதினைந்து அடிகளுக்கு அப்பால் மரம்நடும் பழக்கத்தை அனைவரும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் வளர்ந்த மரம் பச்சையாக வெட்டப்படும் பரிதாப நிலையை தவிர்த்துக்கொள்ளலாம்.



கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. விருந்தினர்கள் வரவேற்கப்படுவதை முதலாவது படத்திலும் மாணவிகளின் உடற்பயிற்சிக் கண்காட்சியை அடுத்துள்ள படத்திலும், பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வவுனியா வடக்கு பிரதேச செயலகக் கணக்காளர் ம.சிவகுமார், தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தலைவர் ச.தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் வெற்றிக் கேடயமொன்றை பாடசாலை அதிபர் மற்றும் விளையாட்டுப் பொறுப்பாசிரியரிடம் பிரதம விருந்தினர் கையளிப்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

## உணர்ச்சியின் மீதான அரசியலை ...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்களின் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுக்கு நீங்கள் செல்ல வேண்டுமென்று ஜனாதிபதித் தேர்தலிற்கு முன்பே குறிப்பிட்டமை இனப்பிரச்சினைத் தீர்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான ஒரு பாரிய அங்கீகாரப்படி.

இந்த நிலையில் தேர்தல் பகிஷ்கரிப்பென்ற விடுதலை விரும்பிகளின் வலைப்பின்னலிற்குள் சிக்காமல் தேர்தலில் பங்குபெறுவது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த முடிவானது அதன் சாணக்கியத்தின் மேன்மையை - அனுபவத்தின் முதிர்ச்சியை - வெளிக்காட்டி அதனை உயிர்த்தெழ வைத்து அதன் கனதியை வெளிக்காட்டியது.

எல்லாமே முடிந்துபோய் போரின் பின்னான ஐக்கிய இலங்கைக்குள் எவ்வாறு நகர முடியும் என்ற கற்பிதத்தைத் தாராளமாகப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது ஒரு சில சுயபரிசோதனை முயற்சிகளிற்குள் தன்னை உட்படுத்தியே மீள்பரிமாணம் பெற்று வருகிறது. அதாவது மக்களை உணர்ச்சிப் பிழம்பின் மேல் வைத்து நடத்தும் அரசியல் இனிச் சரிவராது. அவர்களை இனி இந்தப் பயணத்தில் அவ்வாறு தொடர்ந்து பொய் கூறி ஈடுபடுத்த முடியாது என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டில் ஒரு நியாயத்தன்மை இருக்கிறது. உணர்ச்சிகளின் பேரிலான போராட்டம் இனி எங்கும் நகரப்போவதில்லை. அது களத்திலுள்ள மக்களின் விருப்பிற்கு மாறானது என்பதை அவர்கள் ஏற்றவர்களாகவே இந்தப் பரிசோதனை முயற்சிக்குள் தங்களைப் புடம் போடுகிறார்கள். எனவே இப்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பைக் குறை கூறுவதை விடுத்து அவர்கள் கூறுகின்ற விடயங்களின் நம்பகத்தன்மையை ஆரய்வதையே புலம்பெயர்ந்த தமிழர்கள் செய்ய வேண்டும்.

மீண்டும் புலம்பெயர்ந்த மக்களின் மூலமே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராகப் பயனப்படும் ஒரு கைங்கரியத்தை விடுதலையின் பேரால் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்ய முயல்கிறார்கள்.

அவர்களிற்கு மக்கள் ஆதரவு இருந்தால் அல்லது களத்தின் குரலாக இருக்கும் திறன் பெற்றிருந்தால் அவர்கள் இவ்வாறாக புலம்பெயர்ந்த மக்களினூடான ஒரு கரிபூசலின் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பிளவுப்படுத்தத் தேவையில்லை.

மே 18 தமிழர் அத்தியாயத்தின் அடுத்த தொடக்கப்புள்ளி என்பதை ஏற்காத இவர்களது மனப்பான்மையே இவ்வாறான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் புறந்தள்ளுஎன்றது தவிர, இவர்களைத் தலைமைக்குக் கட்டுப்படாதவர்களாக வளர்த்துவிட்டமைக்கு தமிழ்த்தேசியத்தின் வெளிநாட்டுத் தொடர்பாளர்களே காரணம்.

ஆனாலும் இந்த நாடாளுமன்றத் தேர்தலிற்குள் உள்வாங்கப்படாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களால் கனகச்சிதமாக ஒரு காரியத்திற்குப் பயன்படுத்தப்படப் போகிறார்கள்.

மே 18 ஆம் திகதியின் பின்னான தமிழர்களின் தலைமையை - அவர்களின் பேச்சுப்பலத்தை - அழித்தல் என்கிற காரியத்தை இந்தத் தமிழ்த் தேசியத்தின் நிழலில் வாழ்ந்த முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்தே முடிக்கப் போகிறார்கள்.

இதன் விளைவாக எந்தவித செலவுமில்லாமல் நாங்கள் எங்களுக்குள்ளேயே பரிமாறிக்கொள்ளும் துரோகிகள் பட்டம் இந்த முறை யாருக்குக் கொடுக்கப்படப் போகின்றது என்பதை வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குப்பலம் இந்த முறை நிரூபித்தே தீரும்! ✱

நன்றி: 'ஈழநேசன்' இணையம்

## விட்டுக் கொடுப்பதால் பிறரும் வாழ்வார்கள், நாமும் வாழ்வோம்

ஓர் ஊரில் ஒரு கணவன், மனைவி இருந்தார்கள். இரண்டு பேரும் எப்பவுமே எதிரும், புதிருமாகத்தான் இருப்பார்கள். "தவளை தண்ணிக்கிழுத்தா, எலி மேட்டுக்கு இழுக்குமாம்". அதுபோல இவர்களும் ஏட்டிக்குப் போட்டியாய் நடப்பார்கள். இருவரும் ஒன்றாகச் செய்யும் ஒரே காரியம் சண்டை போடுவதுதான். கணவனுக்குத் தக்காளி என்றால் அதிக விருப்பம். சரி மழைதான் பெய்யுதே, சும்மா கிடக்கிற தோட்டத்தில் தக்காளி விதையை நாலு விதைச்சா பிரயோசனமாக இருக்குமே என்று யோசித்த கணவன் தக்காளி விதை விதைத்தார். மனைவிக்கு கனகாம்பரப் பூவென்றால் ரொம்ப ஆசை. அதே தோட்டத்தில் அந்தம்மா கனகாம்பரம் விதையை வாங்கி விதைத்தார். இருவருக்குமே என்ன நடந்தது என்று தெரியாது. ஒரு வாரம் கழிந்தது. விதை விளைந்து, நாத்தா நின்று, செடியாக வளர்ந்தது.

கணவன் வந்து பார்த்தார், "அட நாம ஆசையாகச் சாப்பிடலாம் என்று தக்காளியை விதைச்சா கனகாம்பரம் விளையுதே" என்று கனகாம்பரச் செடியை எல்லாம் பிடுங்கித் தூர எறிந்துவிட்டுப் போனார். அடுத்து மனைவி வந்து பார்த்தார், "அட கனகாம்பரம் பூச்செடியை விதைச்சா தக்காளி விளைந்து நிக்குதே" என்று தக்காளிச் செடியை எல்லாம் பிடுங்கித் தூர வீசினார்.

அடுத்தவாரம் இருவரும் தோட்டத்திற்குப் போனார்கள். தோட்டத்தில் ஒன்றையுமே காணவில்லை. கணவன்-மனைவி இருவரும் மாற்றி மாற்றிச் செய்த வேலை அப்போதுதான இருவருக்குமே தெரிந்தது. இரண்டு பேருமே அப்போதுதான் நினைத்தார்கள் இரண்டு செடிகளையும் விட்டு வைத்திருந்தால் பயிர் விளைந்திருக்கும். தக்காளியும் கிடைச்சிருக்கும்; கனகாம்பரமும் பூத்திருக்கும். ஆனால் அவர்கள் இருவருமே விட்டுக் கொடுக்கவில்லை. அதனால் பயிர் விளையவும் இல்லை. தக்காளி யும்காய்க்கவில்லை. கனகாம்பரமும் பூக்கவில்லை.

### தவக்காலச் சிந்தனை

இக்கதையில் கூறப்பட்ட கணவன்-மனைவி போன்று விட்டுக் கொடுப்பற்ற சுயநல வாதிகளாக நாம் வாழ்கின்றோமா? அல்லது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, பிறர் நலனில் அக்கறை கொண்டு,தியாக சிந்தையுடன் வாழ்கின்றோமா என எம்மையே நாம் சுய ஆய்வு செய்து கொள்வோம். விட்டுக் கொடுப்பதால் பிறரும் வாழ்வார்கள்; நாமும் வாழ்வோம். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கவில்லையென்றால் அடுத்தவர் வாழ வழியில்லை; நாம் வாழவும் வாய்ப்பில்லை.

ஆகவேதான் இயேசு அழகாகச் சொல்கிறார் "ஒருவன் உன்னை ஒருகல் தொலைவு வரக்கட்டாயப்படுத்தினால் அவனோடு இருகல் தொலைவு செல். உன் மேலாடையை எடுத்துக் கொள்ள விரும்பினால் உள்ளாடையையும் மறுக்காதே. வலது கன்னத்தில் அறைபவனுக்கு இடது கன்னத்தையும் காட்டு. உன் எதிரியோடு வழியிலேயே சமரசம் செய்துகொள்". இயேசுவின் இத்தகைய வார்த்தைகள் விட்டுக் கொடுப்புக்கும்,சமரச சக வாழ்வுக்கும் எம்மை அழைத்து நிற்கின்றன.

ஆகவே சிந்திப்போம், நான் என்ற அகந்தையோடு வாழ்ந்து பிரச்சினைகளுக்கும், பிரிவினைகளுக்கும் காரணமாய் இருக்கின்றேனா? அல்லது மற்றவர்களது நிலைப்பாட்டையும் ஏற்று,விட்டுக் கொடுத்து, கற்றுக் கொள்வதன் மூலம் நாமும் வாழ்ந்து பிறரையும் வாழ வைப்போராக இருக்கின்றோமா?

செல்வி.ப.உஷா
நாவாந்துறை

# என்னைக் கண்டிக்கு வரவேண்டாமென கூறுவதானால் நாடு பிளவுபட்டுள்ளதா?

## ஹெல உறுமயவிடம் மனோ கணேசன் கேள்வி



கொழும்பு, மார்ச் 2

கண்டிக்கு வரவேண்டாம் என்று சொல்லும் ஹெல உறுமய கட்சியின் கோஷம், இந்த நாடு பிளவுபடவில்லை என்ற வாதத் திற்கு எதிரானதாகக் காணப்படுகிறது - என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டம் ஹெல உறுமயவுக்கு மாத்திரம் உரியது என அவர்கள் கூறுவதானால் இந்த நாடு பிரிந்துள்ளது என்ற அச்சத்தை அது உருவாக்குகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கண்டி மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழ் போட்டியிடுகின்றமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்றுமுன்தினம் ஜாதிக ஹெல உறுமயக் கட்சியினர் 'மனோ கணேசன் கண்டிக்கு வரவேண்டாம்' எனக் கூறி ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொணடது தெரிந்ததே.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நான் கொழும்பிலிருந்து கண்டிக்கு வந்தவன் அல்லன். கண்டியிலிருந்து கொழும்புக்குச் சென்று, மீண்டும் கண்டிக்கு வந்துள்ளேன். எனது தந்தை அம்பிட்டிய என்ற ஊரைச் சேர்ந்தவர். நான் கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி கற்றவன். என்னைக் கண்டிக்கு வரவேண்டாம் என்று அவர்கள் கூறுவதானால் நாடு (இலங்கை) பிரிந்துள்ளது என்ற அச்சத்தை உருவாக்குகின்றது - என்றார்.

அத்துடன், இலவசமாக தனக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்கின்றமைக்காக ஹெல உறுமய கட்சியினருக்கு தாம் நன்றி கூறுகிறார் எனவும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (அ-சி)

# எம்.பிக்களுக்கான பாதுகாப்பில் எதிர்க்கட்சிகளுக்குப் பாரபட்சம்

## ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி

கொழும்பு, மார்ச் 2

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பில் எதிர்க்கட்சிகளுக்கு பாரபட்சம் காட்டப்படுகிறது என ஐக்கிய தேசியக் கட்சி அதிருப்தி வெளியிட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படுவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள பிரசாரப் பணிகளை உரிய முறையில் மேற்கொள்ள எதிர்க்கட்சிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள அதே வேளை, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அடிப்படைப் பாதுகாப்பு வசதிகள் கூட ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை என கம்பஹா மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த எந்தவொரு அரசும் நாடாளுமன்றத்தை கலைத்ததன் பின்னர் உடனடியாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பைக் களையவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல்களை நியாயமான முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தேர்தல் ஆணையாளரிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் முழுமையாக இல்லை என்றால் அனைவருக்கும் ஒரே மாதிரியான பாதுகாப்பு ஏற்பாடுகளே மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களுக்கு மட்டுமே பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என ஊடக அமைச்சர்கள் தெரிவித்துள்ள போதிலும், சாதாரண ஆளும் கட்சி அமைப்பாளர்களுக்குக் கூட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)




01.02.1989

*கடந்த ஜனவரி மாதம் முதலாம்திகதி முதல் 26 ஆம் திகதிவரை நாடளாவிய ரீதியில் 584பேர் வன்செயல் மற்றும் வேறு காரணங்களால் கொலையுண்டுள்ளதாகத் தெரிவிப்பு.

*நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலைக் கண்காணிக்க அவதானிகள் குழுவொன்றை அனுப்பும்படி வெளியுறவு அமைச்சர் ஏ.ஸி.எஸ்.ஹமீது அணி சேரா நாடுகளிடம் வேண்டுகோள்.

02.02.1989

*நாட்டில் வன்செயல்கள் அதிகரித்திருப்பதையடுத்து பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வருவதாக அரசு அறிவிப்பு.

*எதிர்வரும் சுதந்திர தினத்தன்று கறுப்புக்கொடி ஏற்றித் துக்கம் அனுஷ்டிக்குமாறு ஜே.வி.பி தரப்பு தென் பகுதிப் பொதுமக்களுக்குத் தெரிவித்துள்ளது.

03.02.1989

*இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய மத்திய அரசுடன் தாம் பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி தெரிவிப்பு.

*வழிமறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீது அமைதிப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மாணவர்கள் உயிரிழப்பு. பத்துப் பேர் காயம்.

04.02.1989

*பருத்தித்துறையில் அமைந்திருந்த இலங்கைப் பொலிஸாரின் பொலிஸ் நிலையம் மூடப்பட்டு, அங்கு கடமையிலிருந்த பொலிஸார் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு மாற்றம்.

*ஜனாதிபதி பிரேமதாஸாவின் உத்தேச வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்க உலக வங்கியும் சர்வ தேச நாணய நிதியமும் பின்னடிப்பு.

05.02.1989

*தென்னிலங்கையில் நாளாந்தம் அதிகரித்துவரும் வன்செயல்களை அடக்க கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதுகாப்புத்துறை உயர் அதிகாரிகளுக்கு அரசு உத்தரவு.

*அம்பாறை மாவட்டத்திலுள்ள மகாஓயாவில் 11 சிங்களவர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

*பொதுத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் இருவர் நேற்றுத் தென் இலங்கையில் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து சுட்டுக்கொல்லப்பட்ட பொதுத்தேர்தல் வேட்பாளர்களில் எண்ணிக்கை 12 ஆக உயர்வு.

06.02.1989

*ஹிங்குராங்கொடையில் இடம் பெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்ட சுதந்திரக்கட்சித் தலைவி சிறிமாவோ மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியிலிருந்து அவர் மயிரிழையில் தப்பினார்.

*தற்போது ஈழத்தில் நடைபெற்றுவரும் சண்டையை நிறுத்துமாறு அதில் சம்பந்தப்பட்ட தரப்புக்களை இந்திய அமைதிப்படை மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் என்பவற்றுக்குத் தமிழக முதலமைச்சர் கருணாநிதி வேண்டுகோள்.

07.02.1989

*பிரான்ஸ் நாட்டில் 1984 ஆம் ஆண்டுக்கு முன்னர் அரசியல் புகலிடம் கோரி வாழ்ந்து வரும் ஈழத்தமிழர்களுக்கு நிரந்தர விசா வழங்க பிரான்ஸ் அரசு ஆலோசிப்பு.

*வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு லட்சத்து 50 ஆயிரம் பேர் நிவாரணம் கோரி விண்ணப்பித்துள்ளதாக புனர்வாழ்வு,புனர் நிர்மாண அமைச்சு தெரிவிப்பு.

08.02.1989

*இந்திய அமைதிப் படையின் ஒரு பிரிவு இன்று காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிச் செல்லவுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிப்பு.

*பிரபல சினிமா நடிகரும் பொதுத் தேர்தல் வேட்பாளருமான காமினி பொன்சேகா பயணம் செய்த வாகனம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்.

22.02.1989

*இம் மாதம் பத்தாம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை உதயன்,சஞ்சீவி பத்திரிகைகளைப் பிரசுரிக்க இயலாது போய் விட்டதாக உதயன் பத்திரிகை நிர்வாகம் வாசகர்களுக்குத் தெரிவிப்பு.

*தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் அமிர்தலிங்கம் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு.

*வடக்கு,கிழக்கு மாகாண அரசுக்கென தனியான ஒரு திறைசேரியும் பொதுச் சேவை ஆணைக்குழுவும் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு.

23.02.1989

*நாட்டின் பாதுகாப்பு மற்றும் வன்செயல் நிலைமை குறித்து ஆராய முப்படைத் தளபதிகளின் முக்கிய மாநாடு பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னாவால் கூட்டப்பட்டது.

*அமைச்சரவை மேற்கொள்ளும் முடிவுகள் குறித்த விவரங்களை அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து தவறான முறையில் பெற முனைபவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்க வேண்டுமென ஜனாதிபதி பிரேமதாஸா அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்துத் தெரிவிப்பு.

24.02.1989

*வடக்கு,கிழக்கு மாகாணத்தில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப்படையினர் திரும்பிச் செல்லும் விடயத்தில் இலங்கை அரசு அவசரம் காட்டாது என அரசு உத்தியோகபூர்வமாகத் தெரிவிப்பு.

*நட்புறவுத் ஒப்பந்தமொன்றை உருவாக்குவது தொடர்பாக இலங்கை அரசு நகல் யோசனை எதனையும் இதுவரை எமக்கு அனுப்பி வைக்கவில்லை என இந்திய வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு.

25.02.1989

*நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தேர்தல் கடமையில் ஈடுபட மறுத்த வடபகுதி மற்றும் தென்பகுதியைச் சேர்ந்த பல பொலிஸார் 'தண்டனை' இடமாற்றத்துக்கு உட்படுத்தப்பட்டனர்.

*தீவிரவாதத்தைச் சமாளிக்க வேண்டுமானால் அதிகார அமைப்பில் சிறுபான்மையினருக்கும் இடமளிக்க வேண்டுமென இந்தியத் தூதுவர் டிக்ஸிற் தெரிவிப்பு.

26.02.1989

*சமாதானப் பேச்சுக்களுக்கு வருமாறு ஜே.வி.பி,மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கம் என்பவற்றுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ அழைப்பு.

*சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோவை நாடாளுமன்றத்தில் எதிர்க் கட்சித் தலைவியாக நியமிக்க கட்சியின் மத்திய சபை முடிவு.

27.02.1989

*வடக்கு,கிழக்கு மாகாணம் தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு கிழக்கு மாகாணத்திலுள்ள சிங்களவர் மற்றும் முஸ்லிம்களின் மத்தியிலேயே நடத்தப்பட வேண்டுமென நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன தெரிவிப்பு.

*வடக்கு,கிழக்கு மாகாண சபைக்கு அதிக அதிகாரம் வழங்குவது தொடர்பான ஜனாதிபதி பிரேமதாஸாவைச் சந்தித்துத் தாம் வலியுறுத்தியுள்ளதாக வடக்கு, கிழக்கு மாகாண முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவிப்பு.

28.02.1989

*இ.தொ.கா.மலையகத்தில் தோல்வி அடைந்தமைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்து மலையகத்தில் பணிபுரிபவர்கள்தான் காரணம் என இ.தொ.கா தலைவர் தொண்டமான் தெரிவிப்பு.

*பழம் பெரும் அரசியல் தலைவர்களின் ஒருவரான கொல்வின் ஆர். டி.சில்வா சுகவீனம் காரணமாக உயிரிழப்பு.

# தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறும் ஊடகங்களுக்கு எதிராக நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 02

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

தேர்தல் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள 21 அம்ச விதிகளை பின்பற்றத் தவறும் ஊடகங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடரப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் தொடர்பிலான விதிமுறைகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளன.

சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல்களை நடாத்த சகல ஊடகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

விதிகளை மீறிச் செயற்படும் ஊடகங்களுக்கு எதிராக உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடர வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சகல ஊடகங்களும் தேர்தல் செயலகத்தின் உத்தரவுகளை ஏற்றுச் செயற்பட வேண்டும் எனவும், குறிப்பாக அரச ஊடகங்கள் இந்த விதிகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

செய்தி அறிக்கையிடல், நேர ஒதுக்கம், நிகழ்ச்சிகள் என பல்வேறு விடயங்கள் பற்றி தேர்தல் செயலகம் விதிகளில் சுட்டிக்காட்டியுள்ளது.

சுவரொட்டிகள் புதன்கிழமைக்கு முன்னர் அகற்ற வேண்டும். இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலையொட்டி காட்சிப் படுத்தப்பட்டிருக்கும் சுவரொட்டிகள், பதாதைகள் என்பவற்றை நாளை மறுதினம் புதன் கிழமைக்கு முன்னர் அகற்ற வேண்டும் என்று தேர்தல்கள் ஆணையாளர் பொலிஸ்மா அதிபருக்கு பணிப்பு விடுத்துள்ளார்.

அதேவேளை, வாக்குக் கோரும் நோக்கில் வீடு வீடாகச் சென்று பிரசார நடவடிக்கையில் ஈடுபடும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களினது ஆதரவாளர்களுக்கும் தெளிவூட்டுமாறு அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் பணிப்புரை விடுத்துள்ளார்.

வேட்பு மனுதாக்கல் செய்யப்பட்ட 26 திகதிக்கு பின்னர் சுவரொட்டிகளை ஒட்டுவது, காட்சிப்படுத்துவது சட்டத்திற்கு முரனானது என்றும் அவர் கூறியுள்ளார்.

சுவரொட்டிகளை அகற்றுவதற்காக முதற்கட்டப் பணிக்காக பொலிஸ் திணைக்களத்திற்கு ஒரு கோடியே 10 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இறுதிக் கட்டக் கொடுப்பனவுகள் பொலிஸாரின் செயற்பாடுகளை ஆராய்ந்த பின்னரே வழங்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் கூறினார். (அ-சி)

# நீதி கேட்டு பொன்சேகா இன்று மக்கள் நீதிமன்றத்தின் முன்னால்

## ஆதரவு கோருகிறார் அவர் மனைவி

கொழும்பு, மார்ச் 02.

பொன்சேகா மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பொய்யானவை என்று நிரூபிப்பதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் அவருக்கு அதிகூடிய வாக்குகளை அளித்துக் கொழும்பு மாவட்டத்தில் அவரை வெற்றியின் முதலிடத்துக்குக் கொண்டுவருமாறு பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா கொழும்பு வாழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பொன்சேகாவின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த நாட்டில் அழிந்துகொண்டு போகின்ற முக்கியமானவற்றை மீளப் பெறுவதற்காகவே நாம் அரசியல் கூட்டணி ஒன்றை அமைத்து இத் தேர்தலில் போட்டியிடுகின்றோம். இத் தேர்தலில் நம்முடன் இணைந்து போட்டியிட வருமாறு பல கட்சிகள் விடுத்த அழைப்புகளை எனது கணவர் நிராகரித்து விட்டார். ஒரு கட்சியில் சார்ந்திருப்பதை விரும்பாமலேயே அவர் இவ்வாறு செய்தார்.

இந்த நாட்டில் ஊழல், மோசடியை இல்லாதொழிப்பதற்கான பொன்னான காலம் இப்போது எமக்குக் கிட்டியுள்ளது. இந்த நாட்டு மக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.


எனது கணவர் மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகள் பொய் என்று நிரூபிக்க நாம் மக்களின் நீதிமன்றத்திடமே செல்கின்றோம். கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடும் எனது கணவருக்கு மக்கள் கூடுதலான வாக்குகள் அளித்து அவரைக் கொழும்பு மாவட்டத்தில் முதலாம் இடத்திற்குக் கொண்டு. வர வேண்டும்.

இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்த 40 வருடங்களாகப் பாடுபட்ட எனது கணவருக்கு நீங்கள் செய்யும் கைமாறாக அது அமையும். - என்றார். (சி)

# பயணிகள் தங்குமிடமாக மாறும் முனீஸ்வரன் கோயில் பிரதேசம்

யாழ். முனிஸ்வரன் கோயிலடி சுற்றாடல் பகுதி சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிந்து வருகின்றது.

சுற்றுலாப் பயணிகள் தாம் எடுத்து வந்த சமையல் பாத்திரங்கள் மூலம் இப் பகுதியில் உணவு வகைகளைச் சமைத்து உண்பதோடு வெட்டை வெளியிலேயே படுத்து உறங்குவதையும் காணமுடிந்தது.




அதே போன்று துரையப்பா விளையாட்டு அரங்குப் பகுதியிலும் பெரும் எண்ணிக்கையான சுற்றுலாப் பயணிகள் தங்கிச் செல்கின்றனர்.

சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கு இடமாக இப்பிரதேசம் தற்போது விளங்கிவருகின்றது.

தற்போதைய கடும் வெயிலுக்கு ஒதுங்குவதற்கு எவ்வித நிழல்தரு இடமின்றி பயணிகள் தமது வாகனத்துக்குள்ளேயே தங்கும் நிலையும் இப்பகுதியில் தொடர்ந்து நீடிப்பதாக சுற்றுலாப் பயணிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(04-224)




இடைக்காடு மகாவித்தியாலயத்தில் அண்மையில் மெய்வன்மைப் போட்டி இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக மாகாணப் பணிமனையின் சிரேஷ்ட வேலைப் பரிசோதகர் க.இரவீந்திரதாஸ், பாடசாலை அதிபர் அ.அருந்தவநேசன் மற்றும் விருந்தினர்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், உடற்பயிற்சி கண்காட்சி இடம்பெறுவதை இறுதிப் படத்திலும் காணலாம்.

# ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
சின்னம்மா இராசசிங்கம்

பிறப்பு: 29.09.1932
இறப்பு: 01.03.2009

ஓராண்டு சென்றதம்மா!
தரணியை விட்டுச் சென்று- ஆனாலும்
அகலாத விளக்குப் போல் உம்
நினைவு எம்முடன் உள்ளதம்மா!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

காரைநகர்.

(சி/565309)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் திருநாவுக்கரசு



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் திருநாவுக்கரசு பிரான்ஸில் 25.02.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் தயாபரன் (இ.மி.ச.), தயாகுணன், தயானந்தன் (பிரான்ஸ்), தயாளதேவன் (சுவிஸ்), உமாபாலன் (பிரான்ஸ்), உமாநந்தன் (கனடா), இன்பவதி (கனடா), தயாநிதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் புஸ்பவதி, புவனேஸ்வரி, ஜெயலெட்சுமி, தவராணி, லதா, நிர்மலா, ஞானவரோதயம், லோகேஸ்வரன் ஆகியோரின் மாமியும் சங்கீதா, கோகுலவர்ணன், ஜனித்தா, அஜந்தன், அனுஜன், அனித்தியன், வர்ஷிகன், மிதுன், ஜனன், சுரேன், வினுஜா, சுஜித், வாகீசன், வர்சனா, அபிஷேக், ஆரணன், ஆர்த்திகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பிரான்ஸில் நடைபெற்றுப் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

அவரின் துக்க நிகழ்வு ஏழாலை மேற்கில் அன்னாரின் இல்லத்தில் இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன்மார்- தயாபரன், தயாகுணன்.
தொ.பே.: 0212241081, 0213216360.

(95474)

## திருமதி ருக்குமணி அம்மா நடராசக் குருக்கள்



தென் இந்தியா, பாலக்காட்டைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட அனலைதீவு, புளியந்தீவு, நாகேஸ்வரன் (ஆலய பிரதம குரு) காலஞ்சென்ற சின்னையர் நடராசக் குருக்களின் துணைவியார் ருக்குமணி அம்மா நேற்று (01.03. 2010) திங்கட்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் பாலசுப்பிரமணிய சர்மா (மொறிசியஸ்), சதாசிவஐயர் (உதவிப் பதிவாளர் நாயகம்), தாமோதரஐயர் (கனடா), கணேசராஜஐயர் (கொழும்பு), அகிலேஸ்வரசர்மா (மொறி சியஸ்), சிறிதரசர்மா (மொறிசியஸ்), நாகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயும் Dr.ரஜீவன், Dr.வைதேகிரஜீவன், ம.காண்டீபன் (முகாமையாளர்-NDBவங்கி), திருமதி மந்தாகினி- காண்டீபன், இ.கேதாரசர்மா (பொறியியலாளர்), கே.பிரவீனா (பொறியியலாளர்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.இலட்சுமண சர்மா- மருமகன்
(முகாமையாளர், இலங்கை வங்கி, மானிப்பாய்).

3ஆம் ஒழுங்கை,
கே.கே.எஸ்.வீதி,
கொக்குவில்.
தொ.பே.: 021 222 3431.

(95473)

# இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான கருத்தரங்கு நாளை யாழ்.நூலகத்தில்

யாழ்ப்பாணம்.மார்ச் 2

உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீளக்குடியமர்பவர்கள் தொடர்பான பிராந்திய மாநாடு நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் பொது நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அதிகளவில் நீதிகிடைக்கச் செய்வதற்கான இந்தத்திட்டமானது ஐ.நா வளர்ச்சித் திட்டத்தின் உள்நாட்டு நிகழ்ச்சித்திட்டப் பிரிவினால் முன்னெடுக்கப்படுகின்றது.

புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கருத்தரங்கில் சுமார் 60 உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் அரசமைப்பு விவகாரங்கள் மற்றும் தேசிய ஒருங்கமைப்பு அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்கிரமசிங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றவிருக்கிறார்.

இரண்டு அரங்குகளாக நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் யாழ்ப்பாணம் அரச அதிபர் கே.கணேஷ் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்வார்.

முதல் அரங்கில் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் பற்றிய விரிவுரை நிகழ்வு, இரண்டாவது அரங்கில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் சட்ட ஆவணங்கள் தொடர்பான பிரச்சினைகள் பற்றி நுணுகி ஆராயப்படும். மதிய போசனத்தின் பின்னர் குழு அமர்வுகளும் விவாதங்களும் இடம்பெறும்.

# மூளாயில் மினி கோப் சிற்றி

யாழ்ப்பாணம் மார்ச்,2

மூளாயில் சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மினி கோப்சிற்றி திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கிளைக் குழுத் தலைவர் எஸ். செல்வராசா தலைமையில் நடைபெற்றது. மினி கோப்சிற்றி நிலையத்தை கூட்டுறவு அபிருத்தி உத்தியோகத்தர் இ.தயாபரன் விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதில் சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ம. சிவசுப்பிரமணியம் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். இந்த கோப்சிற்றியுடன் சேர்த்து நான்கு மினி கோப்சிற்றிகளை சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கம் அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (50-93)

# இல்லமெய்வன்மைப் போட்டி

கல்வியங்காடு செங்குந்தா இந்துக்கல்லூரியின் இல்லமெய்வன்மைப் போட்டி நாளை புதன்கிழமை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக 'நெக்டெப்' பிரதித்திட்டப்பணிப்பாளர் க.தெய்வேந்திரனும், அவரது பாரியாரான யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரனும் கலந்துகொள்வர்.


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Colombo 12
T.P 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
04 . 12 . 1961



ஆண்டவன் அடியில்
31 . 01 . 2010

## திருமதி றஞ்சித்தா தெட்சணாமூர்த்தி

எம் குடும்பத்தின் குலவிளக்காய்
ஒளிர்ந்த அன்புத் தெய்வமே!
இறுதிவரை எம்மோடு இணைந்திருப்பீர்
என்றிருந்தோமே!
திடீரென எமைத் தவிக்க விட்டு பாதியிலே
விண்ணுலகம் சென்றது ஏனம்மா?
உம் பிரிவால் எமை ஆறாத்துயரில்
ஆழ்த்திச் சென்றீரே!
உங்கள் ஆத்மா சாந்திபெற என்றும்
ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோமம்மா.

'சொர்ணகிரி',
50/2, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

குடும்பத்தினர்.

(95480)

# மரண அறிவித்தல்

## இரத்தினசிங்கம் கனகாம்பிகை



சுதுமலை கிழக்கு, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் கனகாம்பிகை நேற்று (01.03.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா இரத்தினசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி- வள்ளியம்மை தம்பதியரின் மகளும் காலஞ் சென்ற முத்துக்குமாரு மற்றும் ஸ்ரீதாஸ், சறோ ஜாதேவி, மனோகரன், மகேந்திரன், புவ னேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயும் சிவகுமார் (விற்பனைப் பிரதிநிதி, அண்ணா தொழிலகம்), பத்மாதேவி, கலாராணி, கண்ணகி ஆகியோரின் மாமியும் கோபிநாத், தவ அமுதீசன், தர்சனா, தனுஷன், மதுஷன், விதுஷன், மகிழ்ராஜ், மதுராஜ், மதுஷாளினி, கபில்ராஜ் ஆகியோரின் பேர்த்தியும் கேதீஸ் வரன், இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசையா, அழகம்மா, நவரத்தினம் மற்றும் சரஸ்வதி, வேதராசா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(95482)

# குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் மோசமாகிவரும் சுகாதார நிலைமை

## உரியவர்கள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 2

குறிகாட்டுவான் துறைமுகப் பகுதி அதிகரித்த சன நடமாட்டம் காரணமாக மோசமான சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்பட்டு தொற்று நோய்கள் உருவாகும் இடமாக மாறி வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

தென்பகுதியில் இருந்து தினமும் ஏராளமான மக்கள் நயினாதீவுக்கு வந்து செல்வதால் குறிகாட்டுவான் துறைமுகத்தில் எப்போதும் சனக் கூட்டமாக உள்ளது. ஆனால் இவர்களுக்குப் போதுமான சுகாதார வசதிகள் அங்கு காணப்படுவதில்லை. துறைமுகப்பகுதியில் பரப்பப்பட்டுள்ள நடைபாதைக் கடைகளில் காணப்படும் உணவுப் பொருள்கள் உரிய முறையில் மூடி வைக்கப்படாமையால் தூசு படிவதோடு,இலையான்களும் மொய்த்துக் காணப்படுகின்றன.

அத்துடன் சுற்றாடல் பகுதிகளில் மனிதக் கழிவுகளைக் கொண்ட பொலித்தீன் பைகள் வீசப்பட்டுள்ளதால் சகிக்க முடியாத துர்நாற்றம் வீசுவதோடு அப்பகுதியில் இலையான்களின் இருப்பிடமாகவும் மாறியுள்ளது.இதன் காரணமாக தொற்று நோய்கள் பரவக்கூடிய அபாயம் தோன்றியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இங்குள்ள தேநீர்க்கடைகளில் பணிபுரிபவர்கள் தூய்மையாக இருப்பதில்லையெ னவும்,தேநீர் பருகும் பாத்திரங்களை ஏற்கனவே அழுக்காகிப்போன தண்ணீரில் மீண்டும் அலசி எடுத்து அதற்குள் மீண்டும் தேநீர் நிரப்பி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய பெருந் திருவிழா விரைவில் ஆரம்பமாகவிருப்பதால் நிலைமை இன்னமும் மோசமடையும் சாத்தியங்கள் காணப்படுகின்றன.

எனவே வேலணை பிரதேச சபையினரும், சுகாதாரப்பகுதியினரும் இணைந்து உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியமென பொதுமக்கள் அபிப்பிராயம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வேலணை பிரதேச செயலகத்தின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுகாதாரப் பகுதியினர் கலந்துகொள்வதில்லையெனவும் கூறப்படுகின்றது. குறிகாட்டுவான் துறைமு கத்தில் காணப்படும் சன நெரிசலைக் குறைப்பதற்கு ஏதுவாக இறுப்பிட்டித் துறை முகத்தின் ஊடாக நயினாதீவுக்குப் பயணி கள் செல்வதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்ய வேண்டுமென பொதுமக்கள் தரப்பில் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. (50-ரி-111)

## பசுப்பால் நேற்று முதல் ஒரு லீற்றர் 50 ரூபா

யாழ்ப்பாணம், மார்ச் 2

பசுப்பாலின் விலை நேற்று திங்கட் கிழமை தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

யாழ் .மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இந்தப் புதிய விலையை அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு லீற்றர் பசுப்பால் 50 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பால் உற்பத்திகளின் உற்பத்திச் செலவை ஈடுசெய்யும் வகையிலேயே பாலின் விலை அதிகரிக்கப்பட்டதாக மேற்படி சங்கம் அறிவித்துள்ளது. (50-224)

## கச்சதீவு அந்தோனியார் திருவிழாவில் தென்பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினர்

நெடுந்தீவு, மார்ச், 2

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தில் சுமார் 30 வருடங்களில் பின் முதல் தடவையாக ஜாஎலவைச் சேர்ந்த குடும்பம் ஒன்று வழிபாடுகளில் கலந்து கொண்டது.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவரான பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பணிபுரியும் பெனடிக்ற் லயனல் என்பவரின் குடும்பத்தினரே கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவில் கலந்து கொண்டு வாழிபாடு நிகழ்த்தினர்.

இதே சமயம் கச்சதீவில் முதல் தடவையாக பாரிய பெக்கோ இயந்திரத்தின் மூலம் கோவில் சுற்றாடலையும், மத்தியிலுள்ள புளியடியில் காணப்படும் புனித சூசையப்பர் சொரூபம் வரை காடுகளை அழித்து பாதை ஒன்று அமைத்த நிகழ்வும் இடம்பெற்றுள்ளது. யாழ். அரச அதிபர் கே. கணேஸின் முயற்சியால் மேற்கொள்ளப்பட்ட இப் பணி யாத்திரிகர்களிடையே மிகுந்த மகிழ்ச்சியையும், சந்தோசத்தையும் ஏற்படுத்தியுள்ளதாக கச்சதீவுக்கு வருகை தந்த இலங்கை,இந்திய மக்கள் கூறினார்கள். (50-ரி-111)

# சங்கானை, ஊர்காவற்றுறை பகுதிகளில் தேசிய சேமிப்பு வங்கியின் புதிய கிளைகள்

## அடுத்த மாதம் திறந்து வைக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம் பெப்,2

யாழ். மாவட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கி மேலும் இரண்டு கிளைகளை சங்கானை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் திறக்கவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. இந்தத் தகவலை தேசிய சேமிப்பு வங்கியின் வடவலையப் பொது முகாமையாளர் யூ.எல். ரவீக் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொது மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே 7 புதிய கிளைகள் திறக்கப்பட்டன. மேலும் இரண்டு புதிய கிளைகள் கடந்த மாதம் நெல்லியடி, அச்சுவேலி ஆகிய பகுதிகளில் திறந்துவைக்கப்பட்டன.

தற்போது அந்தக் கிளைகள் மக்களுக்கான சேவைகளைப் புரிந்து வருகின்றன. இத்தகைய சேவையை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் அடுத்த மாதம் அளவில் சங்கானை, ஊர்காவற்றுறை ஆகிய பகுதிகளில் புதிய கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன.

பெரும்பாலும் அடுத்தமாத முற்பகுதியில் புதிய கிளைகள் திறந்துவைக்கப்படும் என்றார். தேசிய சேமிப்பு வங்கியின் புதிய கிளை களை கொடிகாமம்,காரைநகர் ஆகிய பகுதிகளில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (50-9)

# 'ரிதிரேகா' அதிர்ஸ்ட சீட்டிழுப்பில் மானிப்பாய் வாசிக்கு 10 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம் மார்ச் 2

தேசிய சேமிப்பு வங்கியின் ''ரிதிரேகா'' அதிர்ஸ்ட சீட்டிழுப்பில் மானிப்பாயைச் ஒருவருக்கு 10 லட்சம் ரூபா பரிசாகக் கிடைத்துள்ளது.

''ரிதிரேகா'' 62 ஆவது அதிர்ஸ்ட சீட்டிழுப்பிலேயே இந்தப் பரிசுத்தொகை கிடைத்துள்ளது.மானிப்பாயைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி நாகதாசன் என்பவரே அந்த அதிர்ஸ்ட சாலியாவார்.

இவருக்குரிய பரிசு வழங்கும் நிகழ்வு மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் க.சிவகுமார் தலைமையில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்றது. இதில் தேசிய சேமிப்பு வங்கியின் வட வலயப் பொது முகாமையாளர் யூ.எல்.ரவீக், தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் ஏ.அருளானந்தம் ஆகியோர் கலந்துகொண்டனர். அதிர்ஸ்டசாலிக்குரிய பரிசுத் தொகையை வடவலயப் பொதுமுகாமையாளர் யூ.எல்.ரவீக் வழங்கினார். இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் முகாமையாளர்கள், மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கியின் உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (50-9)

# காரைநகரில் கண்பரிசோதனை முகாம் 300 பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடி

யாழ்ப்பாணம் மார்ச்,2

காரைநகரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கண்பரிசோதனை முகாமில் 300 பேருக்கு இலவசமாக மூக் குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

வட பிராந்திய சத்தியசாயி சேவா நிறுவனம், மானிப்பய் சத்தியசாயி சேவா நிறுவனத்தின் அனுசரணையுடன் கம்பஹா சத்தியசாயி சேவா நிலைய அடியார்களின் அன்பளிப்புடன் இந்த நடமாடும் கண் பரிசேதனை முகாம் காரைநகரில் நடத்தியது.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் ஆர்.ரி.ஜெயசீலன் தலைமையில் நடை பெற்ற இந்த நடமாடும் சேவையில் கண் வைத்திய நிபுணர்களுடன் கம்பஹா சத்திய சாயி சேவா நிலையத் தலைவரும் கம்பஹா பதில் நீதிபதியுமான திஸ்லு கருணாரட்ண, மானிப்பாய் சத்தியசாயி சேவா நிலைய உப தலைவர் வை. செகராஜசிங்கம் உட்பட சத்தியசாயி சேவா நிலைய அங்கத்தவர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்த நடமாடும் கண்பரிசோதனை முகாமில் பார்வைக்குறைபாடுடைய முன்னூறு பேருக்கு இலவசமாக மூக்குக்கண்ணாடிகள் வழங்கப்பட்டதுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்ட 75 பேருக்கு சேலைகளும் சத் திய சாயி சேவா நிலையத்தினரால் வழங்கப்பட்டன. (50-250)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# குறிகாட்டுவான்- நயினாதீவு இடையே வார இறுதியில் மேலதிக படகுச் சேவை

யாழ்ப்பாணம் மார்ச் 2

குறிகாட்டுவானுக்கும்,நயினாதீவுக்கும் இடையே மேலதிக பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்ததை அடுத்து இந்தப் படகுச் சேவை வார இறுதியின் மூன்று நாள்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.வெள்ளி,சனி,ஞாயிறு தினங்களில் குறைந்தது 20 படகுகள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளன. கடந்த வாரத்தில் இப் படகுச்சேவை காலை முதல் இரவு வரை தொடர்ந்து நடைபெற்றது. (50-224)

# வடக்கின் மாபெரும் போரை கண்டுகளித்த சுற்றுலாப் பயணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மற்றும் மத்திய கல்லூரி அணிகளுக்கிடையே கடந்த சனிக்கிழமை நடைபெற்ற வடக்கின் பெரும்போர் இறுதிநாள் ஆட்டத்தை தென்னிலங்கையிலிருந்து வருகைதந்த சுற்றுலாப்பயணிகள் பெரும் ஆர்வத்துடன் பார்த்து ரசித்தனர்.கடந்த பல வருடங்களின் பின்னர் யாழ்ப்பாணத்தைப் பார்வையிட வந்த தங்களுக்கு வடக்கின் மாபெரும் போர் என்ற கிரிக்கெட் போட்டியைப் பார்ப்பதற்கான அரிய வாய்ப்புக் கிடைத்ததாகச் சுற்றுலாப்பயணி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் போட்டியைக் கண்டுகளிப்பதற்கு சிலர் தென்பகுதியிலிருந்து றேசிங் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. (50-224)



உதயன் பத்திரிகை நிறுவனத்தின் அனுசரணையில் அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை மாணவர்களுக்கு நல்லூர் றோட்டறக் கழகத்தினரால் தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்பு கணக்கு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

நிகழ்வில் உதயன் பத்திரிகை நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையைச் சேர்ந்த எஸ். சின்னத்தம்பி, நல்லூர் றோட்டறக் கழகத் தலைவர் றோட்டேரியன் ரஜிதரன் ஆகியோர் மாணவர்களுக்கு சேமிப்புப் புத்தகம் வழங்குவதை முதலிரு படங்களிலும்

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரை இறுதிப் படத்திலும் காணலாம். *(படங்கள்:எம்)*



யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசாமி ஞாபகார்த்தப் பூங்கா திறப்புவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
விழாவிற்கு விருந்தினர்கள் அழைத்துவரப்படுதை முதல் படத்திலும், நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட பழையமாணவர் சங்கத்தின் லண்டன் கிளையைச் சேர்ந்த பொறியியலாளர் சபா சுகந்தன் பூங்காவைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும், முன்னாள் அதிபர் பி.எஸ்.குமாரசாமியின் சகோதரி பெயர்ப்பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதை மூன்றாவது படத்திலும், பழைய மாணவர் சங்கத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான க.செவ்வேள் உரையாற்றுவதை இறுதிப்படத்திலும்காணலாம். *(படங்கள்: லக்ஸ்மன்)*

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### பொதுப்பட்டமளிப்பு வைபவம்

**ஒளிப்பதிவு செய்தல், புகைப்படம் எடுத்தல் ஆகியவற்றுக்கான விலைகோரல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 25 ஆவது பொதுப்பட்டமளிப்பு வைபவம் 26, 27, 28.03.2010 ஆகிய திகதிகளில் காலை 9மணிமுதல் மாலை 6 மணிவரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. இவ்வைபவ நிகழ்வுகளை ஒளிப்பதிவு செய்ய வேண்டியிருப்பதுடன், 3000 புகைப்படங்கள் வரையில் (4R அளவுள்ள வர்ணப்புகைப்படம்) எடுக்க வேண்டியுள்ளது. அத்துடன் பட்டமளிப்பு வைபவத்தினை மண்டபத்தினுள் சென்று நேரடியாகப் பார்க்க முடியாதவர்களின் நலன் கருதி அவ்வைபவத்தின் நிகழ்வுகளை வெளியில் நின்று பார்வையிடுவதற்காக 15' X 15' அளவுள்ள கொட்டகைகள் இரண்டினை அமைத்து அதில் அகலத்திரை மூலமாக ஒளிபரப்புவதற்கான ஒழுங்கினையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இவற்றிற்குரிய விலைக் கூற்றினை 2010.03.10ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தகுதி வாய்ந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள், புகைப் படப்பிடிப்பாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். கடித உறையின் வலது பக்க மேல்மூலையில் பட்டமளிப்பு வைபவத்தினை புகைப்படம் பிடித் தல், ஒளிப் பதிவு செய்தல் என தெளிவாகக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

(சி/565311) பதிவாளர், யாழ்.பல்கலைக்கழகம்.

## பெருந்திருவிழா

காரைநகர், மார்ச் 2

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து தினங்கள் சிறப்பாக இடம் பெற்றுவருகின்றது.

இந்த பெருந் திருவிழாவில் எதிர் வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும் 15ஆம் திகதி திங் கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன.

இந்த உற்சவ காலங்களில் தினமும் ஆலய வீதியில் அமைந்துள்ள மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றது.(1-250)

## ஸ்ரீலங்கா புத்தகசாலையின் 75ஆவது வருட பூர்த்தி சிறப்பு வெளியீடு வரிசையில்



இலங்கையிலேயே அதிக கல்வியியல்
நூல்களை எழுதிய பேராசிரியர்
சபா.ஜெயராசா, பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
அவர்களுக்கு அடுத்ததாக அதிக நூல்களை எழுதிய

**பா.தனபாலன்**

B.A (Cey), PGDE (merit), Dip in Psy 1st class, M.Phil in Ed,
Dip in HRM, Cert in Vocational Guidance (Singapore)

அவர்களின் 25ஆவது நூல்

**ஆசிரியர்களுக்கான கல்வி உளவியல்** வெளிவந்துவிட்டது!

திரு.பாலசுப்பிரமணியம் தனபாலன் அவர்கள் மிக நீண்ட காலமாக உளவியலைக் கற்பித்து வருகின்றார். உளவியற்றுறை ஆற்றலும் உளவியலைப் பயிற்றுவிக்கும் ஆளுமையும் பிரயோக நிலையில் மாணவர்களின் இடைவினைகளினூடு சங்கமமாகும் தேர்ச்சியும் உடைய நூலாசிரியரின் சிறந்த படைப்பாக இந்நூல் மிளிர்கின்றது.

பேராசிரியர் சபா.ஜெயராசா
கல்வி உள்வியற்றுறைப் பேராசிரியர்

இலங்கை, இந்தியா, உலகம் முழுவதற்குமான விநியோகம்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
*243, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**லங்கா பதிப்பகம்**
*FL, 1/14 டயஸ் பிளேஸ்*
*குணசிங்கபுர, கொழும்பு - 12.*

(95477)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில்
29 . 10 . 1942

இறைவன் அடியில்
31 . 01 . 2010

உரும்பிராய் தெற்கு வேம்பன் வீதியை வதிவிடமாகக் கொண்ட

### திருமதி கமலாட்சி இராசதுரை

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த
எங்கள் அன்பு அம்மாவே!
உங்களைப் பிரிந்து இன்றுடன்
முப்பத்து ஒரு நாள்கள் ஓடி மறைந்தனவே!
தேம்பித் தேம்பி அழுத போதெல்லாம் தாங்கிக்
கொண்டு அரவணைக்கும் அம்மாவே!
தாங்காத வேதனையுடன் எங்கள் கண்களெல்லாம்
கண்ணீராய் பெருகுதம்மா!
கண்ணான அம்மாவே - நீ கலங்காமல்
கண்ணுறங்கு எம்முயிர் வெல்லும்
உங்கள் புகழ் சொல்வதற்காகவேனும்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டவுடன் நேரில் வந்து இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலைபேசி மூலம் தேற்றிய அனைத்து நெஞ்சங்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்தோடு இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய.

(சி/565310)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய


# நூற்றாண்டு விழா

நேற்று (01.03.2010) திங்கட்கிழமை தொடக்கம் நாளை (03.03.2010) புதன்கிழமை வரை யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியால்ய மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் இறுதி நாளான நாளை (03.03.2010) புதன்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளரான சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் **“எது கல்வி?”** என்ற தலைப்பில் சிறப்புரை நிகழ்த்துவார்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**



*புங்குடுதீவு ஸ்ரீ க்ணேச மகாவித்தியாலத்தின் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளவென தமிழ் அறிஞர் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்கள் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய வேளை*



*நூற்றாண்டு விழாக் குழுவின் பொருளாளர் அருள்நிதி திரு.தி.முருகானந்தவேல், திருமதி கமலாதேவி முருகானந்தவேல் மற்றும் திரு சி.சிவராஜா, பழைய மாணவர் ஆகியோர் அவரை வரவேற்பதனைப் படத்தில் காணலாம்.*

**நூற்றாண்டு விழாக் குழுவினர், புங்குடுதீவு.**

விளம்பர அனுசரணை: அன்னை நாகா பூட்சிற்றி
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

# கச்சதீவு திருவிழாவில் முதல் தடவையாக இலங்கைக் கொடி; தமிழகத்தவர் அதிருப்தி!

மண்டபம், மார்ச் 02

நான்கு ஆண்டுகளுக்குப்பின் நடந்த கச்சதீவு புனித அந்தோணியார் திருவிழாவில் தமிழகத்தைச் சேர்ந்த ஏராளமானோர் பங்கேற்ற நிலையில், அப்பகுதி முழுவதும் வழக்கத்திற்கு மாறாக இலங்கையின் தேசியக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தமை அவர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என தமிழக இணையத் தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அந்த இணையத் தளங்களில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கச்சதீவு, இயற்கை எழில் கொஞ்சும் பசுமை சூழ்ந்து காணப்படுவதால் பச்சைத்தீவு என்றும் அழைக்கப்படுகிறது.

கடந்த 2006 இல் தடைவிதிக்கப்பட்ட கச்சதீவு புனித அந்தோணியார் திருவிழா, நீண்ட இடைவேளைக்குப் பின்னர் இரு நாட்டு சம்மதத்துடன் கடந்த இரண்டு நாள்கள் நடந்தது.

இதில் பங்கேற்க, தமிழகத்திலிருந்து 71 விசை, 40 நாட்டுப் படகுகளில் 2,910 பேர் சென்றனர். நெடுந்தீவு, பூங்கொடித் தீவு பகுதியிலிருந்து நாரிழைப் படகு மூலம் இலங்கைப் பக்தர்கள் 800 பேர் வந்தனர்.

கடந்த சனியன்று மதியம் 1.30 இற்கு நெடுந்தீவுப் பாதிரியார் அமல்ராஜ் ஆலயக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து இரவில் திருப்பலி பூஜை, நற்செய்திக் கூட்டம் என்பன நடந்தன.

இதில் தமிழகம் சார்பில், சிவகங்கை மறைமாவட்ட முதன்மை குரு ஜோசப் லூர்து ராஜ், முன்னாள் முதன்மை குரு அமல்ராஜ், பாதிரியார்கள் மைக்கேல் ராஜ், ஜேம்ஸ், வின்சென்ட் அமல்ராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

நேற்றுமுன்தினம் காலை 6 மணிக்கு விழாவின் சிறப்புத் திருப்பலி நடந்தது. காலை 8 மணிக்கு தேர்ப்பவனியை தொடர்ந்து, 8.30 இற்கு கொடி இறக்கம் செய்யப்பட்டது. திருவிழாவை கண்காணிக்க, இலங்கைக் கடற்படையின் வடக்கு பிராந்திய அதிகாரி வீரசேகர, இராணுவ அதிகாரி மகேந்திர மதுரசிங்கே, யாழ்ப்பாணம் அரச அதிபர் கணேஸ் ஆகியோர் வந்திருந்தனர்.

இலங்கை அரசின் பாதுகாப்பு ஏற்பாட்டில் உள்ளூர் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். விழா சிறப்பாக நடந்த போதும், இலங்கைப் பக்தர்கள் எண்ணிக்கை மிக குறைவாக இருந்தது.

விழா முடிந்த கையோடு நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு அனைவரும் படகில் நாடு திரும்ப தொடங்கினர்

தமிழக படகுகள், இராமேஸ்வரம் கடற்படை நிலையத்தில் நிறுத்தி சரிபார்க்கப்பட்டன. திருவிழா மீண்டும் நடந்ததால், தங்கள் தொழில் மீண்டும் செழிக்கும் என பக்தர்கள் தெரிவித்தனர்.

* கச்சதீவு முழுவதும் வழக்கத்திற்கு மாறாக இலங்கை அரசின் கொடி பறக்க விடப்பட்டிருந்தமையால் தமிழக பக்தர்கள் அதிருப்தியடைந்தனர்.

* போதைவஸ்துகளுக்கு மட்டுமே தடைவிதிக்கப்பட்டிருந்ததால், முன்பு போல பண்ட மாற்று முறை கச்சதீவில் ஜோராக நடந்தது.

* தமிழகம் தரப்பில் கைலி, சேலை, ஹேர் பேன்ட், தோடுகள், செயின்கள், ஷாம்புகள், பால்பவுடர், சோப்பு போன்றவை பரிமாற்றம் செய்யப்பட்டன.

* தமிழகத்திலிருந்து சென்றவர்களுக்கு மதுபானங்கள் கொண்டு செல்லத் தடைவிதித்தபோதும், இலங்கை வாசிகள் கொண்டு வந்த 'பட்டை', தீவு முழுவதும் பட்டையை கிளப்பியது.

* தீவு, இலங்கைக் கடற்படையின் ஆக்கிரமிப்பில் இருந்ததால், பலரும் கரையில் கால் நனைந்தவாறு உறங்கினர்.

* 'நோ எண்ட்ரி' பகுதியில் இலங்கையினர் அனுமதிக்கப்பட்டனர். அதே நேரத்தில் தமிழகத்தை சேர்ந்தவர்களுக்கு தடைவிதிக்கப்பட்டது.

* கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளுக்கு கச்சதீவை பார்வையிட இப்போதுதான் அனுமதி கிடைத்தது - என்றுள்ளது.

## திருமானூரில் நடந்த ஜல்லிக்கட்டில் காளைகள் முட்டி 77 பேர் படுகாயம்!

திருமானூர், மார்ச். 02

திருமானூரில் நேற்றுமுன்தினம் நடந்த



ஜல்லிக்கட்டில் சீறிப்பாய்ந்த காளைகள் முட்டித் தள்ளியதில் 77 பேர் படுகாயம் அடைந்தனர்.

அரியலூர் மாவட்டம் திருமானூரில் மாசி மகத்தை முன்னிட்டு திருமானூர் கிராம மக்களின் சார்பில் நேற்றுமுன்தினம் ஜல்லிக்கட்டு நடந்தது.

காளைகளை அடக்க பல்வேறு மாவட்டங்களில் இருந்து 353 வீரர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் அனைவருக்கும் மருத்துவக் குழுவினர் உடல் பரிசோதனை செய்தனர்.

மாடுகளை மடக்கிப் பிடித்த மாடுபிடி வீரர்களுக்கும், காளையர்களிடம் பிடிபடாமல் சென்ற காளைகளுக்கும் வேட்டி, துண்டு, ரொக்கப்பரிசு உட்பட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன.

# நக்ஸல்களிடம் வெளிநாட்டு ஆயுதங்களா? உள்துறை அமைச்சு மறுத்து விளக்கமளிப்பு

டில்லி, மார்ச் 02

நக்ஸலைட்கள் மற்றும் மாவோயிஸ்ட்கள் வெளிநாடுகளில் இருந்து ஆயுதம் வாங்குகின்றன எனக் கூறப்படுவதை உள்துறை அமைச்சகம் மறுத்து விளக்கமளித்துள்ளது.

நக்ஸலைட் தீவிரவாதிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பாதுகாப்பு படையினரிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்டவை என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நக்ஸலைட்களிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. இதைத் தொடர்ந்து அவர்கள் வெளிநாடுகளில் இருந்து ஆயுதம் வாங்குகிறார்களா என்ற கேள்வி எழுந்தது.

இதுகுறித்து உள்துறை அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில் -

நக்ஸலைட்கள் அதிகம் பயன்படுத்தும் ஏ.கே - 47 ரக துப்பாக்கிகள் பாதுகாப்புப் படையினரிடம் இருந்து கொள்ளையடிக்கப்பட்டவை எனவும் அவை பாதுகாப்புப் படையினரிடம் இருந்து கொள்ளையடித்துச் செல்லப்பட்டவை எனவும் தெரிவித்துள்ளன.

2009 ஆம் ஆண்டு மொத்தம் 572 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன எனவும் அவற்றுள் சில ஏ.கே. - 47 ரக துப்பாக்கிகளும் 3 சீன கை துப்பாக்கிகளும் நக்ஸலைட்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்டன எனவும் உள்துறை அமைச்சக அறிக்கை ஒன்று கூறுகிறது.

2008 ஆம் ஆண்டு மொத்தம் 1511 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன எனவும் அவற்றில் பெரும்பாலானவை ஒரிசா மாநிலம் நால்கோ சுரங்கத்தில் நடந்த தேடுதல் வேட்டையின் போது கண்டு பிடிக்கப்பட்டன எனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

மாவோயிஸ்ட்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு நேபாளம், பூட்டான், வங்க தேசம், பிலிப்பின்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட் கட்சியினரிடமும் நேபாள மாவோயிஸ்ட்களுடனும் தொடர்பிருந்த போதிலும் அவர்கள் வெளிநாட்டில் இருந்து ஆயுதம் வாங்குகின்றனர் எனத் தெரியவில்லை என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஹோலி பண்டிகையையொட்டி நாக்பூரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற பொலிவூட் நடிகை ஹேமமாலினி, பார்வதி வேடத்தில் நடனமாடியபோது....

## இந்தியச் செய்திகள்

# இந்திய-பாக். உறவில் சவூதி மத்தியஸ்தரா? அமைச்சர் சசிதரூர் கூறிய கருத்தால் சர்ச்சை!

### கட்சிகளின் எதிர்ப்புக்குப் பணிந்து அவர் புதிய விளக்கம்

ரியாத், மார்ச். 02

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான உறவில் மத்தியஸ்தராக சவூதி அரேபியா செயற்பட வேண்டும் என மத்திய அமைச்சர் சசிதரூர் தெரிவித்த கருத்தால் 'திடீர்' சர்ச்சை எழுந்தது.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக உடனடியாக அவர், மத்தியஸ்தர் என்ற வார்த்தையை ஊடகங்கள் தவறாகத் திரித்து விட்டன என்று அதற்கு விளக்கம் அளித்தார்.

சவூதி அரேபியாவில் மூன்று நாள் பயணமாக பிரதமர் மன்மோகன் சிங் சென்றுள்ளார். அவருடன் மத்திய வெளியுறவு இணை அமைச்சர் சசிதரூரும் அங்கு சென்றார். ரியாத் நகரில், இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு சசிதரூர் பேட்டியளித்தார்.

அப்போது, 'பாகிஸ்தான் மண்ணில் இருந்து ஏவப்படும் தீவிரவாதம் குறித்து இந்தியா கவலை அடைந்துள்ளது. எனவே, பாகிஸ்தானின் நெருங்கிய நட்பு நாடான அரேபியாவிடம் பாகிஸ்தானுக்கு நெருக்கடி கொடுக்குமாறு இந்தியா வலியுறுத்துமா எனச்செய்தியாளர்கள் கேள்வி கேட்டனர்.

அதற்குப் பதிலளித்து சசிதரூர் கூறியவை வருமாறு - பாகிஸ்தானுடன் நீண்ட காலமாக நெருங்கிய நட்புறவுடன் சவூதி அரேபியா இருந்து வருகிறது. எனவே, இந்தியா - பாகிஸ்தான் இடையிலான நட்புறவு மற் றும் பேச்சில் ஒரு மதிப்பு மிக்க மத்தியஸ்தராக அரேபியா இருக்கும் - என்றார்.

சசிதரூரின் இக்கருத்துக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எனவே, மத்திய வெளியுறவு அமைச்சின் சார்பாக உடனடியாக விளக்கம் அளிக்கப்பட்டது. இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சு வெளியிட்ட அறிக்கையில், 'இந்தியா - பாகிஸ்தான் உறவில் மூன்றாவது நாட் டின் மத்தியஸ்தம் குறித்த ஆலோசனை யைக் கூட இந்தியா எதிர்க்கிறது. எனவே, மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை எனக் கூறப்பட்டுள்ளது.

# சேது திட்ட கண்காணிப்புப் பணியிலிருந்த மீனவர் மீது இலங்கைப் படை தாக்குதல்!

### புலனாய்வுத் துறை விசாரணை

இராமேஸ்வரம், மார்ச் 02

சேது சமுத்திரத் திட்ட கடல் சுற்றுச்சூழல் ஆய்வு மிதவைக்கருவிகளைக் கண்காணித்துவரும் மீனவர்களை கடந்த சனியன்று இலங்கைக் கடற்படையினர் தாக்கிய சம்பவம் அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சேது சமுத்திரக் கால்வாய் திட்ட சுற்றுச்சூழல் குறித்த ஆய்வுப்பணிககளுக்காக கோடியக்கரை முதல் பாம்பன் வரையுள்ள கடற்பகுதியில் எட்டு இடங்களில் இரவிலும் ஒளிரும் மிதவைக்கருவிகள் நிறுவப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

இந்த ஆய்வுக்கருவிகளை மீனவர்களின் படகுகள், கப்பல்கள் சேதப்படுத்தாமல் இருக்க மீனவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஆய்வுக்கருவிகளைப் பாதுகாக்க ஒப்பந்த அடிப்படையில் மீனவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் நடுக்கடலில் படகில் தங்கி இரவு - பகலாக இதனைக் கண்காணித்து வருகின்றனர்.

நடுக்கடலில் மிதவை ஆய்வுக்கருவிகள் நிறுவப்பட்டுள்ளமை குறித்தும், மீனவர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளமை குறித்தும் துறைமுகத்துறை, மீன்வளத்துறை, இந்தியக் கடற்படை மற்றும் கடலோரக் காவல் படை அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக ஆய்வுப்பணிகள் நடந்துவரும் நிலையில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் தாக்கிய சம்பவம் நடந்துள்ளது.

தனுஷ்கோடி அருகில் ஐந்தாம் மணல் திட்டு கடல் பகுதியில் நிறுவப்பட்டுள்ள மிதவைக்கருவியைக் கண்காணிக்கும் பணியில் தங்கச்சிமடத்தை சேர்ந்த மீனவர்கள் அகஸ்டின், ரீகன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர். நடுக்கடலில் படகில் இருந்த இவர்களை, கடந்த சனியன்று அதிகாலையில் இப்பகுதியில் படகில் ரோந்து வந்து இலங்கை கடற்படையினர் தாக்கியுள்ளனர். பின்னர் படகில் இருந்த பொருள்களைப் பறித்துக்கொண்டு எச்சரித்து விரட்டியுள்ளனர்.

தேசிய கடல் ஆராய்ச்சி மையத்தினால் வழங்கப்பட்ட உத்தரவுக் கடிதத்தை காட்டியும் அதனைக் கண்டுகொள்ளாமல் கைகளால் தாக்கினர் எனவும், கடற்படையினர் சென்றவுடன் மொபைல் போன் மூலம் சேது சமுத்திர திட்ட அலுவலக அதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்தனர் எனவும் இரு மீனவரும் தெரிவித்தனர்.

பின்னர் காயமடைந்த இருவரும் கரைக்கு அழைத்து வரப்பட்டனர். அவர்களை புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர். நடுக்கடலில் நடந்த இச்சம்பவம் அதிகாரிகள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## இதய அஞ்சலிகள்

### திருமதி ருக்குமணி அம்மா நடராஜக்குருக்கள்



எமது பதிவாளர் நாயகத் திணைக்களத்தின்
பிரதிப் பதிவாளர் நாயகம்
திரு ந.சதாசிவ ஐயர்
அவர்களின் பாசமிகு தாய்
திருமதி
ருக்மணி அம்மா நடராஜக் குருக்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

காணி மாவட்டப் பதிவகம்,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.

உதவிப் பதிவாளர் நாயகம்,
காணி மேலதிக மாவட்ட பதிவாளர்,
உத்தியோகத்தர்கள்.


## உடன் தேவை

1. கட்டட மேற்பார்வையாளர்

கட்டட மேற்பார்வையாளராக கடமையாற்றிய அனுபவமும் தொழில்நுட்ப அலுவலராகக் கடமையாற்றிய அனுபவமும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் கட்டட பொருள்கள் கொள்வனவு செய்தல், கட்டட வேலைகளை மேற்பார்வை செய்தல் என்பன முக்கிய கடமைப் பொறுப்புக்களாகும்.

2. விளம்பர எழுதுவினைஞர்

★க.பொ.த. உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் அவசியம்.

★ பி.ப. 2 மணி தொடக்கம் 9 மணிவரை வேலை செய்யக்கூடிய ஆண் உடன் தேவை.

தகுந்த சான்றிதழ்களுடன் நேரடியாக உடன் வரவும்

**மனிதவள முகாமையாளர்**

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## 18 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
18
★
06
★
1920



உதிர்வு
19
★
02
★
1992

அமரர்

### இராசையா செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: 02.03.2010 துதியை

**பத்துடன் எட்டு ஆண்டுகள் பறந்தாலும் அப்பா
நித்தமும் உங்கள் பாச நினைவுகளுடன் வாழும்**

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரக்குழந்தைகள்,
பூட்டன்.

'சுபசதனம்', சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.


Suwasetha சுவசெத
லொத்தா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 361

சீட்டிழுப்பு திகதி: 28.02.2010

வெற்றி எழுத்து: Y வெற்றி இலக்கங்கள்: 07 29 41 56 போனஸ் இலக்கம் 09

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 13,498,678.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 50,000.00 | 03 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 1,000.00 | 78 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 500.00 | 117 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40.00 | 3495 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரூ. 40.00 | 2224 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20.00 | 43903 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 3,393,320.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03, தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்:www.nlb.lk


### சுறாமீன் கடித்ததில் கடற்றொழிலாளி காயம்

யாழ்ப்பாணம், மார்ச் 2

கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவரை சுறா மீன் பாய்ந்து கடித்துக் காயப்படுத்தியது.

இச் சம்பவம் நேற்று முன்தினம் காலை கச்சாய் கடலேரியில் இடம் பெற்றது.

மீன்பிடித்துக் கொண்டிருந்த வேளையில் சுறா மீன் பாய்ந்து வருவதை அவதானித்ததால் கையைக் கொடுத்து தடுக்க முற்பட்டதாகவும், பாய்ந்த மீன் கையைக் கடித்த போது அதனை அப்படியே பிடித்தபடி கரைக்குக் கொண்டு வந்து கையிலிருந்து அகற்றியதாகவும் கூறப்பட்டது

இதே இடத்தைச் சேர்ந்த பிரேமராசா (வயது - 49) என்பவர் சுறா மீன் கடித்த காயத் திற்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (1-207)

### விவரம் பதியுமாறு பணிப்பாளர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 2

வன்னி மாவட்டத்திலுள்ள வலயப் பாடசாலைகளில் கடமையாற்றி தற்காலிக இணைப்புப் பெற்று யாழ்.கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள் தமது விவரங்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நாளை புதன் கிழமை பி.ப. 2.30 மணிக்கு வலயக் கல்விப் பணிமனைக்கு சமுகமளித்து தமது விவரங்களை படிவம் மூலம் பூர்த்தி செய்து தருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(1-10)

### கசிப்பு விற்றவருக்கு 50 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மார்ச் 02

வடலியடைப்புக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கசிப்பு விற்றமைக்காக இரண்டாவது தடவையாகக் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ரூபா 50 ஆயிரம் அபராதம் செலுத்தினார்.

மேற்படி நபர் இதே குற்றத்திற்காக முன்னொரு தடவை கைது செய்யப்பட்டு ரூபா ஒரு லட்சம் அபராதமாகச் செலுத்தியதாக இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.விஜயரட்ண தெரிவித்தார்.

(ரி-130)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி உஷாதேவி ஜெகநாதன்



பாடசாலை வீதி, கெருடாவில், தொண்டைமானாறைப் பிறப்பிடமாகக் கொண்ட உஷாதேவி ஜெகநாதன் நேற்று (01.03.2010) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுக ஐயர் தியாகராஜா ஐயர் (ஆசிரியர்) - கனகம்மா (ஆசிரியை) தம்பதிகளின் அன்பு மகளும், துரைச்சாமி ஜெகநாதனின் (ஓய்வு பெற்ற பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி) அன்பு மனைவியும், வாசுகி (சுருக்கெழுத்தாளர், மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), வானதி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், சாவகச்சேரி), வாகீசன் (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), வாசுதேவன் (பொறியியலாளர்), வாசுதன் (U.k.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுசிகரன், பாலகுமாரக் குருக்கள், உஷாநந்தினி (முகாமைத்துவ உதவியாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தமிழ்மாறன், தமிழினி, பவதாரணன்,லவதாரணன், தபோதாரணன், லக்ஷினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தொண்டைமானாறு காட்டுப்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து.ஜெகநாதன் (கணவர்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பாடசாலை வீதி, கெருடாவில்,
தொண்டைமானாறு.
0213214143, 0213210012
0777286091

(92171)

### சந்திரகாந்தன் தவமணிதேவி



நாவலடி, திருநெல்வேலி மேற்கு, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான சந்திரகாந்தன் தவமணிதேவி 28.02.2010 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம்-பஞ்சவர்ணம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற நடனமூர்த்தி மற்றும் கனகாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரகாந்தனின் (லண்டன்) அன்பு மனைவியும் சசிகாந் (சசி), கிருஸ்ணவேணி (துர்க்கா), துளசிகாந் ஆகியோரின் அன்புத் தாயும் கனகரட்ணம் (ஜேர்மனி), செல்வரட்ணம், இராசரட்ணம், யோகரட்ணம், இந்திராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் புவனேஸ்வரி (ஜேர்மனி), சுலோசனாதேவி, செல்வரஞ்சிதம், சாந்தா (பிரான்ஸ்), கணேசபாலன், சகுந்தலா (ஜேர்மனி), மஞ்சுளா, சியாமளா (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும், யோகேஸ்வரன் (ஜேர்மனி), அமரர் பழனி, சீராளதேவன் (லண்டன்) ஆகியோரின் சகலியும் சரன்ஜாவின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.03.2010) செவ்வாய்க் கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி லேன்,
திருநெல்வேலி மேற்கு,
திருநெல்வேலி.

தகவல்: மகன் சசிகாந்தன்(சசி)
தொ.பே.0777938986, 0771876872

## இந்தோனேஷியக் கடலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள

# அகதிகளின் பேச்சாளர் அலெக்ஸ் படகிலிருந்து கடத்தப்பட்டாரா, காணாமற் போனாரா?

கொழும்பு, மார்ச் 02

இந்தோனேஷியாவின் மெராக் துறை முகத்தில் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளின் படகிலிருந்து இது வரை அகதிகளின் பேச்சாளராகச் செயற் பட்ட 'அலெக்ஸ்' எனப்படும் நபர் காணா மற் போயுள்ளார் எனக் கூறப்படு கின்றது.

அலெக்ஸைத் தேடி வருகிறோம் என இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கை அகதிகளின் படகைச் சுற்றி இந்தோனேஷியக் கடற் படையின் ரோந்துப் படகுகள் நிறுத்தப்பட் டுள்ள நிலையில், அலெக்ஸ் தப்பிச் சென் றிருக்க முடியாது. அவர் கடத்தப்பட்டிருக் கலாம் என்று ஊகங்கள் வெளியாகியுள் ளன.

ஆஸ்திரேலியாவிற்குச் செல்லும் வழியில் தடுத்து நிறுத்தப்பட்ட பின்னர் நீண்ட காலம் இந்தோனேஷியத் துறை முகத்தில் தரித்து நின்ற இந்தப் படகிலி ருந்த அலெக்ஸ் நள்ளிரவில் இரகசியமாக வெளியேறியிருக்கலாம். அவர் ஏன் படகி லிருந்து சென்றார் என்பது தெரிய வில்லை என்று படகில் உள்ளவர்கள் தெரி வித்துள்ளனர்.

## பொதுத் தேர்தல் முடியும் வரை எரிவாயு விலையில் மாற்றம் இல்லை

சமையல் எரிவாயு விலைகளில் தற் போதைக்கு மாற்றம் ஏற்படாது என நுகர் வோர் விவகார அமைச்சர் பந்துல குண வர்த்தன தெரிவித்துள்ளார்.

எரிவாயு நிறுவனங்கள் விலைகளை அதிகரிக்குமாறு கோரிய போதிலும் அரசு இதனை ஏற்றுக்கொள்ளாத அதேவேளை, சமையல் எரிவாயுக்கான வரியைக் குறைக்கத் தீர்மானித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் தேர்தலுக்குப் பின்னர் சமை யல் எரிவாயுக்களின் விலை குறித்து மீள் பரிசீலனை செய்யப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# குடாநாட்டில் இணைப்புப்பெற்ற ஆசிரியர்களை ஆளுநர் நாளை சந்தித்துக் கலந்துரையாட ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 2

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ். மாவட்டப் பாடசாலைகளில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி நாளை சநந்திக்கவிருக்கிறார்.

யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண் டபத்தில் மு.ப. 11 மணிக்கு நடைபெறவி ருக்கும் இந்தச் சந்திப்பில் கீழ்வரும் ஆசி ரியர்களை சமுகமளிக்குமாறு யாழ். மேல திக கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

ஆசிரியர்களின் விவரம் வருமாறு:-

**கிளிநொச்சி**

ச.கமலாம்பிகை, ரூ.சந்திரகலா, ச.சிவ ராணி, ம.மதிதாஸ், ஜோ. தயாளினி, எஸ். பௌநந்தி,பி.ஜே. யூட்சி, சு.கீதாஞ்சலி, ரீ.ஏ. செல்வராசா, ப.சசிக்குமார், மு.ரேணுகா. யூ.கரோலின், ப.பாரதி, என். தணிகைக் குமரன், என்.கௌரீஸ்வரி, த.செந்தில்கும ரன், இ.கலாநாயகி, ப.தேவகி, கு.யாழினி, நா.ஜெயதேவி, ப.நந்தினி, செ.சுயந்தா, சி.கவிதா, த.மாதங்கி, இ.கல்பனா, கே. சிவநந்தினி, தெ.விஸ்ணுதாஸ், ம.கங்கா, தி.தேனுகா, ப.விஜயலக்சுமி, பி.உமேஷ் குமார், எஸ்.கிரிதரன், ஆ.வினோதன், இ.சுதர்சினி-

**முல்லைத்தீவு**

ம.ரஜீனா, க.ஜீவமலர், அ.கு.கவிதா, த.சுதர்சினி, மேரி.பிறேமா,

**துணுக்காய்**

எஸ்.சரவணபவன், உ.நிர்மலாதேவி, ச.சசிலினி, ச.சற்குணேஸ்வரர், த.உமா, திருமதி பி.சுகுகணேசன், ஏ.இன்பவேணி, சு.சுதர்சினி, க.கண்ணதாசன், த.சுதாசினி, இ.மரீனா, யூ.கேதாரகௌரி, அருள் பெனிற்றோ பேர்சியா, ப.ராதிகா, திருமதி எஸ். அருமைநாயகம், எஸ்.ஜெகபிர தாபன், சி.ரூபவதனி, ஜீ.கமலசோதினி, ஏ.சியாமளரூபன், சி.கௌரீசன், எஸ்.எம். கிரிஷியன், வி.டொறின் ஞான்சி-

**மடு**

ஆ.தாரணி, செ.நேசமலர், ந.சத்திய ரூபன், க.கஜனி, ஜெ.சாம்பவி, வி. பகீர தன், ஐ. உமாகிரி -

**வவுனியா வடக்கு**

ர.சர்மிளா, கி.சித்ராங்கி, வீ. சுந்தர ராஜன், வீ. ஜமீலா, ந.தணிகைக்குமரன், எஸ். நித்தியானந்தராசா, தி. கமலினி, பா. மீரா, சி. தாட்சாயணி, வ.ஆன்லுமினா, ச.கேமலதா, உ. கலைவாணி-

**வவுனியா தெற்கு**

எம்.ஆர். ஜெகதீஸ்வரன், சி.கார்த்திகா, இ.மேகலா, சி.அருள்மொழி, பி.கவிதா.

**மன்னார்**

க.வானதி, ச.சுபாஜினி, கு.கிருபாகரன்.

(1)

# தமிழ்மொழித்தின தேசிய மட்டப்போட்டி கொழும்பில் 13, 14 இல் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 2

2009 ஆம் ஆண்டுக்கான தேசிய மட்ட தமிழ் மொழித் தினப்போட்டிகள் எதிர் வரும் 13 ஆம் 14 ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற வச தியாக மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற மாணவர்களை தயார் நிலையில் வைத்திருக்குமாறு வடமாட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வ ராசா அதிபர்களைக் கேட்டுள்ளார்.

(1)

# கிளிநொச்சி பேருந்து உரிமையாளர்கள் கழகத்துக்கு செயலகத்துக்குமுன் அலுவலகம் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், மார்ச் 2

கிளிநொச்சி, பரந்தன், முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் சேவையில் ஈடு படும் தனியார் பேருந்துகளின் உரிமையா ளரின் கழகம் கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

கிளிநொச்சி செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள தமது அலுவலகத்தில் மக்கள் தமது முறைப்பாடுகளை தெரிவிக் கலாம் என்று அதன் தலைவர் தெரிவித்தார்.

இலங்கை போக்குவரத்துச் சபை அற விடும் கட்டணத்தையே தனியார் பேரூந்து நடத்துநர்களும் அறவிடவேண் டும். வீணாக அதிகரித்த கட்டணங்களை அறவிடுவதை தவிர்க்க வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார்.

(1)



ஜெனரல் சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்காக இணையத்தளம் ஊடாக மக்களிடம் கையெழுத்துகளைத் திரட்டும் நடவடிக்கை பொன்சேகாவின் கொழும்பு அலுவலகத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட வேளை...

# அரசமைப்புக்கும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

நாம் நிம்மதியாக நடமாடுவதற்கு சுதந் திரத்தைப் பெற்றுத் தந்த சரத் பொன்சேகா இப்போது கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் ஓர் அரசியல் கைதியாகவே உள்ளார். அவரை உள ரீதியாக வீழ்த்துவதற்காகவே அவர் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார்.

ஒருவரைக் கைது செய்வதற்கு எமது நாட்டில் சட்ட ஒழுங்குகள் உள்ளன. ஆனால் அவை பொன்சேகாவின் கைதின் போது பின்பற்றப்படவில்லை. அவைய னைத்தும் முற்றாக மீறப்பட்டுள்ளன.

சர்வதேச நாடுகள் எமது நாட்டை நீதி யற்ற நாடாகவே பார்க்கின்றன. பொன் சேகாவின் கைதால் எமது நாட்டின் அரசி யல் யாப்பும் சர்வதேச சட்டங்களும் முற் றாக மீறப்பட்டுள்ளன.

இராணுவச் சட்டத்தின் கீழ்த்தான் பொன் சேகா கைது செய்யப்பட்டார் என்று சொல்லப்படுகின்றது. அந்த இராணுவச் சட்டம் எமது அரசியல் யாப்புக்கும், சர்வ தேச சட்டங்களுக்கும் கீழேதான் உள்ளது.

இராணுவத்தில் ஒழுக்கத்தைப் பேணு வதற்காகவே இராணுவச் சட்டம் உள்ளது. ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒரு வருக்கு இந்தச் சட்டம் பொருந்தாது. அரசி யல் யாப்பின் 13 ஆவது சரத்தை நாம் பார்க்கவேண்டும்.

ஒருவரைக் கைது செய்யும்போது அதற்கான சட்ட ஒழுங்குகள் முற்றாகப் பின்பற்றப்பட வேண்டும் என்று அந்த சரத்தில் கூறப்பட்டுள்ளது. கைது செய்யும் பொலிஸார் கைதுக்கான காரணத் தைக் கைது செய்யப்படுபவரிடம் கூறவேண்டும். ஆனால் பலவந்தமாக இழுத் துச் செல்ல முடியாது. - என்றார்.

(அ-சி)

# சர்வதேச யுத்தக் குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ள அவர், குறிப்பிட்ட வீடியோ உண்மையானது என மிக உறு தியாகத் தெரிவித்துள்ளதுடன் விடுத லைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர் கள் சரணடைய முன்வந்தால் அவர்களைச் சுட்டுக் கொல்லுமாறு உத்தரவு பிறப்பிக் கப்பட்டிருந்தால் அது பாரதூரமான விட யம் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறிப்பிட்ட தொலைக்காட் சிக்குக் கருத்துத் தெரிவித்துள்ள ஐ.நாவின் இலங்கைக்கான முன்னாள் பேச்சாளர் கோர்டன் வெய்ஸ், ''யுத்தக் குற்றங்களுக் கான தடயங்கள் உள்ளன. பாதுகாப்பு வல யத்திலிருந்து தப்பிய மக்களின் வாக்கு மூலங்களே அதற்கான தடயங்களாக உள் ளன'' எனத் தெரிவித்துள்ளார்.

மோதலில் கொல்லப்பட்ட மக்களின் எண்ணிக்கையைத் தெரிவிக்க வேண் டாம் என இலங்கையில் தாம் கடமையில் இருந்த சமயம் கடும் அழுத்தத்திற்கு உள் ளாக்கப்பட்டார் எனவும் கோர்டன் வெய்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

**யுத்தக் குற்றங்கள்**

ஆஸ்திரேலிய தொலைக்காட்சிக்கு பிலிப் அல்ஸ்டொன் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறு வதற்கும் முடிந்தளவிற்கு அதிக எண் க்கையிலானவர்களைக் கொல்வதற் குமான உறுதிப்பாடு காணப்பட்டுள்ளது.

'சனல் - 04' வீடியோவில் காணமுடிந்த காட்சிகளை யுத்தக் குற்றங்கள் என்ற பிரி விற்குள் மிகத் தெளிவாக உள்ளடக்கலாம்.

ஏனெனில், கைதுசெய்யப்பட்டவர்கள் கைகள், கால்கள் கட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றனர்.

அவர்கள் தப்புவதற்கு முயலவில்லை. அவர்களிடம் ஆயுதங்களும் இல்லை.

இது குறிப்பிடத்தக்க அளவிலான - வெளிப்படையான - படுகொலை. தெளி வாக இது ஒரு யுத்தக் குற்றம்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சரணடைய முன் வந்தவேளை அவர்கள் கைதுசெய்யப்படு வார்கள், யுத்தக் கைதிகளாக நடத்தப்படு வார்கள் போன்ற எண்ணம் நிலவியது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களைக் கைதுசெய்தால் அவர் களைச் சுட்டுக் கொல்லுங்கள் என்ற உத்த ரவு வழங்கப்பட்டதா என்ற கேள்வி உள்ளது.

அவ்வாறான உத்தரவொன்று வழங்கப் பட்டிருந்தால் அது பாரிய பிரச்சினையாகும்.

இதேவேளை, 'சனல் - 04' ஒளி நாடாவை ஆராய்ந்த தொழில்நுட்பவிய லாளர்கள் அனைவரும் இத்துறையில் மிகத் திறமைசாலிகளாக விளங்குபவர்கள்.

அவர்கள் அனைவரும் இது உண்மை யான சம்பவம் எனத் தெரிவித்தனர்.

**ஒளிநாடா போலியானதாக இருக்க முடியாது**

அது போலியானதாக இருக்க முடியாது என்பதற்கு அவர்கள் பல காரணங்களை முன் வைத்தனர்.

ஆகவே, இலங்கையில் கைதுசெய்யப் பட்டவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட மையைக் காண்பிக்கும் வீடியோ உண் மையானது என்ற உறுதியான நிலைக்கு வரமுடியும் - என்றார் அவர்.

இதேவேளை, இலங்கையில் யுத்த மோதல்கள் உச்சமடைந்த சமயம் இலங் கையில் ஐ.நா. விடயங்களுக்கான பேச்சா ளராக இருந்த கோர்டன் வெய்ஸ் இவ்விட யங் கள் குறித்துக் கூறியவை வருமாறு:-

முற்றுகைக்குள்ளான பாதுகாப்பு வல யங்களுக்குத் தொடர்ச்சியாக மனிதா பிமான உதவிகளை வழங்குவதற்கு நாங் கள் முயற்சிகளை மேற்கொண்டோம்.

எனினும், எமது முயற்சிகளுக்குப் பல மட்டங்களில் தடைகள் விதிக்கப்பட்டன.

முற்றுகை காரணமாக மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

தகவல்கள் வெளிவருவதைத் தடுப் பதிலும் உண்மைகளை மறுப்பதிலும் இலங்கை அரசு மிகவும் திறமையாகச் செயற்பட்டது.

**மக்கள் கொல்லப்படுவதை அரசு நிராகரித்தது**

மக்கள் கொல்லப்படுவது குறித்த தக வல்களை நாங்கள் வெளிப்படுத்தினால் அரசு அதனை முதலில் பகிரங்கமாக நிராகரித்தது; கண்டித்தது.

பின்னர் தகவலை வெளிப்படுத்திய வரை வெளிவிவகார அமைச்சிற்கு அழைத்துக் கண்டித்தது. நாட்டிலிருந்து வெளியேற்றப் போவதாக மிரட்டியது.

இவ்வாறான அழுத்தங்கள் மிகக் கடினமானவை. இவ்வாறான சூழ்நிலைக ளில் செயற்படுவதும் மிகக் கஷ்டமானது.

இலங்கையில் நடந்தது இரகசிய யுத்தம். தற்போது அது முடிவடைந்து விட் டது. எனினும், பல கேள்விகள் பதிலளிக் கப்படாமல் உள்ளன.

பல மாதங்களாக இலங்கை ஜனாதிபதி, ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் கனரக ஆயு தங்களைப் பயன்படுத்த வில்லை எனக் குறிப்பிட்டுவந்தார்.

இரு நாடுகளின் தலைவர்கள் பேசும் போது அந்தப் பேச்சு நல்லெண்ண அடிப் படையில் அமைந்திருக்க வேண்டும். வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

**30,000 முதல் 40,000 பேர் கொல்லப்பட்டிருக்கலாம்**

மோதலின் இறுதிக் காலத்தில் சுமார் பத்தாயிரம் முதல் நாற்பதாயிரம் மக்கள் கொல்லப்பட்டனர் என்பதே ஓரளவு ஏற்றுக் கொள்ளத்தக்க மதிப்பீடாக அமை யும்.

அநேகமாக இது முப்பதாயிரம் முதல் நாற்பதாயிரம் வரையாக இருக்கலாம்.

விடுதலைப் புலிகளின் மூத்த தலை வர்கள் சரணடையும் விடயத்தில் ஐ.நா வும் தொடர்புபட்டிருந்தது. நோர்வேயும் தொடர்புபட்டிருந்தது.

சில சுயாதீன தரப்பினர் மற்றும் விடு தலைப் புலிகளுடன் தொடர்பு வைத்தி ருந்த சில பத்திரிகையாளர்களும் தொடர்பு பட்டிருந்தனர்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பான தடயங் கள் உள்ளன.முற்றுகையிலிருந்து தப்பிய ஆயிரக் கணக்கான மக்களின் சாட்சியங் களி லேயே இதற்கான தடயங்கள் உள் ளன. - எனக் குறிப்பிட்டுள்ளார். (அ-சி)



கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தின் முன்னாள் தேசிய விடுதலை முன்னணியினரால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கட்டப்பட்டிருந்த பதாகை.

# சிவராத்திரியை முன்னிட்டு கட்டுப்பாடுகளை தளர்த்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

## இந்து மாமன்றம் முன்வைத்துள்ளது

கொழும்பு, மார்ச் 02

சிவாராத்தினமான எதிர்வரும் 13ஆம் திகதி யாத்திரிகர்களின் சௌகரியத்துக்காக ஆலயப் பகுதிகளில் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறு அகில இலங்கை இந்து மாமன்றம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைக் கேட்டுள்ளது.

இவ்விழாவையொட்டி, மன்னாரிலுள்ள திருக்கேதீஸ்வரத்துக்கு கொழும்பு, யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, மலையகம் ஆகிய பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் யாத்திரையை மேற்கொள்வர். அவர்களின் போக்குவரத்து நலனை உத்தேசித்து, மேலதிக பஸ் போக்குவரத்துகளுக்கு வழி செய்யுமாறும் இம்மன்றம் கோரியுள்ளது.

மகா சிவராத்திரி விழாவையொட்டி, அன்றைய தினம் மதுபானசாலைகள், இறைச்சிக் கடைகள் ஆகியவற்றை மூடுவதற்கும் ஏற்பாடு செய்யுமாறு ஜனாதிபதியை இம்மன்றம் கடித மூலம் கோரியுள்ளது.

சிவராத்திரி அன்று ஒலிபெருக்கி பாவனையை அனுமதிக்குமாறு, பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்குமாறும், திருக்கேதீஸ்வர ஆலய நிகழ்ச்சிகள் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் இலவசமாக ஒளிபரப்பப்படுவதற்கு ஆவன செய்யுமாறும் மேலும் இந்து மாமன்றம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

இக்கோரிக்கைகள் அடங்கிய கடிதத்தை இம்மன்றத்தின் சார்பாக அதன் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் அனுப்பி வைத்துள்ளார். (அ-சி)

# கொட்டாஞ்சேனையில் தமிழ் வர்த்தகர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை!

கொழும்பு, மார்ச் 2

, கொட்டாஞ்சேனைப் பகுதியில் தமிழ் வர்த்தகர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார். அவர் தமது வியாபார நிலையமான ஹோட்டலிலேயே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்.

நேற்றுமுன்தினம் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ராஜரட்ணம் (வயது 45) எனும் மூன்று குழந்தைகளின் தந்தையே இவ்வாறு உயிழந்தவராவார்.

குறித்த வர்த்தகர் தற்கொலை செய்து கொண்ட இடத்திலிருந்து அவரால் எழுதப்பட்ட கடிதமொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. அதில் தான் கொடுக்க வேண்டிய கடன்களைக் கொடுக்குமாறு எழுதப்பட்டிருந்தது எனப் பொலிஸார் கூறினர்.

இதுகுறித்து கொட்டாஞ்சேனைப் பொலிஸார் தகவல் தருகையில் கூறியவை வருமாறு:-

ஸ்ரீ குணானந்த மாவத்தை, இல. 25இல் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றின் உரிமையாளர் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளார் எனக் கிடைத்த தகவலுக்கு அமைய அங்கு சென்ற பொலிஸார் மேற்படி வர்த்தகரின் சடலத்தை மீட்டனர்.

அத்துடன் அவரது சடலத்துக்கருகிலிருந்து கடிதமொன்றும் மீட்கப்பட்டது. அதில் உள்ள கையெழுத்து உயிழந்தவருடையது என அவரது மனைவியிடம் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரிய வந்தது. அத்துடன் அக்கடிதம் அவருடைய மனைவிக்காக எழுதப்பட்டிருந்தது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மரண விசாரணைகள் இடம்பெற்றதை அடுத்து சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவ மேஜர் கைது!

கொழும்பு, மார்ச்2

பம்பலப்பிட்டி விடுதி ஒன்றில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயன்றார் எனச் சந்தேகிக்கப்பட்டு இராணுவ மேஜர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பம்பலப்பிட்டியில் விடுதி ஒன்றில் நடந்த விருந்து வைபவம் ஒன்றின்போதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அவர் அங்கிருந்த விடுதியின் அதிகாரிகளை துப்பாக்கியைக் காட்டி மிரட்டியதுடன், சுமார் 5 லட்சம் பெறுமதியான சொத்துக்களையும் சேதப்படுத்தினார் எனக் கூறப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரி, மேஜர் ரஞ்சித்குமார எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் நேற்றுமுன்தினம் கல்கிஸை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட வேளையில், அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிடப்பட்டுள்ளார். (அ-சி)



வடக்கில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக 5 கோடி ரூபா பெறுமதியுள்ள உபகரணங்களை சீன அரசு வழங்கியுள்ளது. இதனை நேற்று சீனத் தூதுவர் ஜங் ஜிப்பிங், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவிடம் வைபவ ரீதியாக வழங்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

## அமைதியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்காலிக அடையாள அட்டைகளை பெற்றுக் கொள்ளல் மற்றும் எவ்வாறு விருப்பு வாக்குகளை அளித்தல் போன்றவை தொடர்பிலும் கரித்தாஸ் நிறுவனம் மக்களுக்கு விழிப்புணர்வுகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

மாவட்ட ரீதியில் மக்களுக்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளன என்று அந்த அமைப்பு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)

## எதிரணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறுப்பினர்களின் பாதுகாப்பு அச்சுறுத்தல் இன்னமும் குறையவில்லை எனச் சுட்டிக் காட்டினர்.

அவர்களது கோரிக்கையைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட நீதியரசர்கள் நிமால் கழமினி அமரதுங்க, ஜகத் பாலபட்டபெந்தி, சந்திரா ஏக்கநாயக்க ஆகியோரைக் கொண்ட ஆயம், மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ் மா அதிபர் உள் ளிட்டவர்களுடன் கலந்துரையாடி இது தொடர்பாக எதிர்வரும் 5 ஆம் திகதி அறிக்கையொன்றை சமர்ப் பிக்குமாறு உத்தர விட்டது. (அ-சி)

## சொத்துக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என கபே அமைப்பின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கட்சியின் தலைவர் பஸில் ராஜபக்ஷ தமது சொத்து விவரங்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வேட்பாளர்களின் சொத்து விவரங்களைத் திரட்டுவது தொடர்பில் வலுவான சட்டங்கள் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படுவோருக்கு எதிராகசட்ட நடவடிக்கை எடுக்கபின் நிற்கப் போவதில்லை என மாற்றுக் கொள் கைகளுக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளர் பாக்கியசோதி சரவண முத்து தெரிவித்துள்ளார். (அ-சி)

## முன்னாள் புலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் சிரேஸ்ட உறுப்பினர்களை எடுத்த மாத்திரத்தில் இயல்பு வாழ்க்கைக்குத் திருப்பி விட முடியாது எனவும், அவர்களுக்கு மூளைச் சலவை செய்யப்பட்டுள்ளது எனவும், ஆழ் மனதில் பதியப்பட்டுள்ள விடயங்களை அவ்வளவு சுலபமாக மாற்றியமைக்க முடியாது எனவும் மறுவாழ்வுக்கு பொறுப்பான உயரதிகாரி பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மனமாற்றத்தை அடைவதற்கு குறித்த உறுப்பினர்களுக்கு போதியளவு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும் எனவும் -

குறுகிய காலப் பகுதியில் புலிகளுடன் இணைந்து செயற்பட்டவர்கள் வன்முறைகளில் ஈடுபடக் கூடிய சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, போராட்டங்களுக்குத் தாம் பலவந்தமாகத் தள்ளப்பட்டனர் என்றும் அமைதியான வாழ்க்கை வாழ்வதற்கே தாம் விரும்புகின்றனர் எனவும் கைதானவர்களில் சிலர் குறிப்பிட்டுள்ளனர். இவர்களின் விடுதலை குறித்து இராணுவத் தரப்பு ஆராய்ந்து வருகிறது எனக் கூறப்படுகிறது.

அரசினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களைப் பராமரிப்பதற்காக மாதாந்தம் 8 கோடியே 8 லட்சம் ரூபா செலவிடப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (அ-சி)


முதலாம் தவணை வினாத்தாள்

நாவலர் வெளியீடு

தரம் 1 முதல் O/Lவரை

சகல பாடங்களுக்கான வினாத்தாள் தேவைப்படும் கல்வி நிறுவனங்கள், பிரத்தியேக வகுப்புகள் 05.03.2010 இற்கு முன் நேரில் தொடர்பு கொள்க.

நாவலர் இன்ஸ்ரிரியூட்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். தொ.பே.: 0774598440

THE SCIENCE CORNER

CLOCK TOWER LANE, JAFFNA

CHEMISTRY - 2011 A/L

INORGANIC

*Wed., Fri. - 5.15 - 6.15 p.m.*

ORGANIC

Sat., Sun. - 5.30 - 6.30 p.m.

ஆரம்பம்: 03.03.2010(புதன்)

BY:அன்பு

வீடு வாடகைக்கு விடப்படும்

திருநெல்வேலி சந்தியில் இருந்து 300 மீற்றர் தூரத்தில் மூன்று அறைகள் கொண்ட வீடு சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு.

(அரச உத்தியோத்தர்களுக்கு முன்னுரிமை)

தொடர்பு: 0776059585

Tbilisi National University

( UK & Georgia & Jaffna )

VACANCY

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்க இருக்கும் எமது மேற்படி பல்கலைக்கழகத்தின்

MBA (Master of Business Administration) பட்டப்படிப்பை கற்பிப்பதற்கான

(MBA Qualified) விரிவுரையாளர்கள் தேவை

*(English Medium - Two Years)*

உங்கள் சுயவிபரத்தை கீழே உள்ள e - mail முகவரிக்கோ அல்லது எமது யாழ் நிறுவன முகவரிக்கோ இன்றிலிருந்து 07 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

e - mail :- selvathashan@yahoo.com

எமது யாழ் முகவரி :- UNI - ICT CAMPUS

No - 83, Palaly Road,

Kantharmadam, Jaffna.

Contact : - 0777 110 862

கலந்துரையாடல்

அன்புக்குரிய வாடிக்கையாளர்களே!

நாளை (03.03.2010) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு கொழும்பில் இருந்து இலங்கை ஒட்சிசன் கம்பனியின் முக்கிய பிரமுகர்கள் வருகை தந்து புதிய தொழில்நுட்ப உபகரணங்களையும் அதன் தொழில்நுட்பத்தினையும் வழங்க உள்ளனர். இக்கலந்துரையாடலில் அனைத்து வாடிக்கையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

AMT ரான்ஸ்போட் சேர்விஸ்,
இருபாலைச் சந்தி,
கோப்பாய். (95472)

வரவை நாடிநிற்கும்
AMT ஸ்தாபனத்தினர்.


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் நடேசு (சின்னத்தம்பி)

கூவில், புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த மாணிக்கம் நடேசு நேற்று(01.03.2010) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.03.2010) செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மந்திகை கடுகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கூவில், புலோலி தெற்கு, புலோலி

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.